REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 219 | Friday 13, September, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## ‘புலமைக் கதிர்’ இணைப்பிதழ்

**இன்று வெளிவராது**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை மறுதினம் நடைபெறவிருப்பதனால், மாணவர்களுக்கான 'புலமைக் கதிர்' இலவச இணைப்பிதழ் இன்றைய தினகரனில் வெளிவரவில்லை என்பதை அறியத் தருகின்றோம். தினகரனில் அடுத்த வாரம் தொடக்கம் வழமை போன்று வாரம் தோறும் 'புலமைக் கதிர்' வெளிவரும்.


**ஜேவிபி - சோசலிச முற்போக்கு முன்னணி**


# மாணவர்களுக்கிடையே கடுமையான மோதல்



**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டது**

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சோசலிச முற்போக்கு முன்னணி கட்சி மாணவர்களிடையே நேற்று முன்தினம் (11) இரவு இடம்பெற்ற மோதல் காரணமாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்





கழகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப் பல்கலைக்கழத்தில் முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த மாணவர்கள் குழுவுக்கும் கலைப் பீடத்தைச் சேர்ந்த சோசலிச முற்போக்கு முன்னணி மாணவர்கள் குழுக்குமிடையில் நேற்று முன்தினம் 06

# தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி மாநாட்டில் ஆயுதமுனை வன்முறை



**ஜேவிபி தொடர்பாக உரையாற்றுகையில் ஆயுதங்களுடன் வந்தவர்களால் குழப்பம்**



தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியினால் நேற்று (12) பிற்பகல் கொழும்பு 7, தேசிய நூலக ஆவணச் சேவை சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாநாட்டின்போது வாள்கள் மற்றும் தடிகளுடன் ஆயுதம் ஏந்திய குழுவினர் அவ்விடத்திற்கு வந்து அங்கிருந்தவர்களை தாக்கிவிட்டு, மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றுள்ளனர்.

அந்த மாநாட்டில் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான நுவன் வல்லந்துடாவ உரையாற்றிக்கொண்டிருக்கையில், இக் குழுவினர் பல்வேறு தகாத வார்த்தைகளால் கூச்சலிட்டு வன்முறையில் ஈடுபட்டதுடன், கைகளில் இருந்த தடிகளாலும், வாள்களாலும் 06



02

ரூ. 3,000 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட

## வடக்கு ரயில் சேவை நாளை முதல் வழமைக்கு

**புனரமைத்த பாதை திணைக்களத்திடம் கையளிப்பு**



03

**காலமான ஜனாதிபதி வேட்பாளர்**

**இல்யாஸுக்கு அளிக்கப்படும் வாக்குகள் இரத்து செய்யப்படும்**

## நல்லை ஆதீனம் நாமலுக்கு ஆசி



*யாழ். விசேட நிருபர்*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நேற்று யாழ். நகருக்கு விஜயம் செய்தார். நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை நேரில் 06

**ஜனாதிபதி ரணிலின் வெற்றியை**

## வடக்கு, கிழக்கு மக்களும் உறுதிப்படுத்த தயார்

**50% க்கும் மேற்பட்ட வாக்குகள் பெறுவது உறுதி**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டதாக அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களும் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்த தயாராகி விட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரத்து கெஸ்பேவ நகரில் நேற்று 06

**ஜனாதிபதி ரணிலின் வெற்றியினூடாகவே**

## மக்களின் அரசியலுரிமை சார் பிரச்சினைக்கு தீர்வு காணலாம்



நாட்டினதும் தத்தமதும் எதிர்காலம் கருதியும் மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து தெளிவுடன் தமது வாக்குகளை வழங்குவார்களாயின், அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் சிறப்பான பொருளாதாரத்துடன் கூடிய வாழ்க்கைக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிடைத்துள்ள இத்தகைய சந்தர்ப்பத்தை எமது மக்கள் தவறவிடமாட்டார்கள் எனவும் அது ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் வாக்குகளாக இருக்கவேண்டுமெனவும் அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். 06

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

## 2024 முதல் எட்டு மாதங்களில் ரூ. 1,229,245 மில். வரி சேகரிப்பு

**இலக்கை அடைந்துள்ளதாக ஆணையாளர் அறிவிப்பு**



2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான 08 மாத காலத்துக்குள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,229, 245 மில்லியன் ரூபாவை சேகரித்து தனது இலக்கை அடைந்துள்ளதாகவும் இது 2023 ஆம் ஆண்டை விட 28.5 வீத அதிகரிப்பு எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**ஜனாதிபதி தேர்தல் தொடர்பான**

## தவறான தகவல்கள் பகிரலை தடுக்கும் ‘டிக் டொக்’ செயலி



ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தவறான தகவல்கள் பகிரப்படுவதை தடுக்க ‘டிக் டொக்’ தயாராகி வருகிறது.

தேர்தல் தொடர்பாக பகிரப்படும் பதிவுகளின் உள்ளடக்கத்தை சரிபார்க்க International Fact Checking Network (IFCN) அங்கீகாரம் 06

**சீனிக்கு விதிக்கப்பட்ட வரி குறைப்பு**

## பிரதிவாதிகளின் பட்டியலை சமர்ப்பிக்க நீதிமன்று உத்தரவு



இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கு விதிக்கப்பட்ட வரி, கடந்த ஆட்சிக்காலத்தில் குறைக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு 1,590 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலிப்பதற்காக எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 06

**அநுரவின் தேசிய மக்கள் சக்தியிடம்**

## நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் எதுவும் கிடையாது

**நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகள் – ராஜித சேனாரட்ண**



தேசிய மக்கள் சக்தியிடம் நாட்டை முன்னேற்றுவதற்கான எந்தவொரு திட்டங்களும் கிடையாதென பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் பல வாக்குறுதிகளை வழங்கி வருவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண, தேர்தலில் தனிநபர் சார்பாக மக்கள் தீர்மானம் எடுக்கமாட்டார்கள். நாடு தொடர்பாக சிந்தித்தே மக்கள் வாக்களிப்பர். 06

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்**

## வாக்காளர் அட்டையின்றி வாக்களிக்கவும் முடியும்



ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்றவர்கள் மாத்திரமன்றி, உள்நாட்டிலேயே வசிக்கின்றவர்களும் வாக்காளர் அட்டையின்றி வாக்களிக்க முடியும். 06

**இலங்கை வரலாற்றில் முதன் முறையாக**

## Air- Ship பறக்கும் கப்பல் சேவை ஜனவரி மாதம் முதல் ஆரம்பம்

**கிழக்கில் நேற்று உடன்படிக்கை கைச்சாத்து**



தெற்காசியாவில் முதன் முறையாக இலங்கையில் Air Ship சேவையை ஆரம்பிக்கும் ஒப்பந்தம் சர்வதேச Air Space நிறுவனத்தின் தலைவர் ஷுகரேவ் செர்ஜி நிகோலாவிச்சுக்கும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்துக்குமிடையில் ஆளுநர் செந்தில்தொண்டமான் தலைமையில் நேற்று(12) கைச்சாத்திடப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை 06

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

## சஜித்தை ஆதரிக்கும் முடிவில் எந்த மாற்றங்களும் இல்லை

**X தளத்தில் சுமந்திரன் பதிவு**



ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவில் எந்த மாற்றங்களும் இல்லையென இலங்கைத் தமிழரசுக் கட்சி மீண்டும் அறிவித்துள்ளது. சஜித் 06

**பொருளாதாரத்தை விஸ்தரித்து**

## நாட்டை கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தி தயார்



நாட்டின் பொருளாதாரத்தை விஸ்தரிப்பதற்கு தமது அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். கண்டி, மஹியாவ பிரதேசத்தில் 06

**இலவசக் கல்வியை பாதுகாப்பதுடன்**

## மாற்று கல்விக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும்



இலவச கல்வியை முழுமையாக பாதுகாப்பதோடு மாற்றுக் கல்விகளுக்கான வாய்ப்புகளையும் பலப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். கொழும்பில் 06

ரூ.3,000 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட

# வடக்கு ரயில் சேவை நாளை முதல் வழமைக்கு

## புனரமைத்த பாதை திணைக்களத்திடம் கையளிப்பு

நாட்டில் வழமையான மற்றும் வினைத்திறன்மிக்க போக்குவரத்து சேவையை நிறுவும் நோக்கில், 3,000 கோடி ரூபா (92 மில்லியன் அமெரிக்க டொலர்) செலவில் மேற்கொள்ளப்பட்ட அநுராதபுரம் மஹவ ரயில் பாதை, புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, நேற்று(12) இலங்கை ரயில்வே திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் கடன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு ரயில்வேயின் புனரமைப்பு பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டதோடு, அநுராதபுரம் ஓமந்தை, அநுராதபுரம் மிஹிந்தலை மற்றும் அநுராதபுரம் மஹவ என அபிவிருத்தி செய்யப்பட்டதாகவும் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள அநுராதபுரம் மஹவ பகுதியை கையளித்துள்ளதாகவும் திட்டப்பணிப்பாளர் சிந்தக ஜயசேக்கர தெரிவித்தார்.





இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தலைமையில், அநுராதபுரம் மஹவ பகுதியின் நிர்மாணப் பணிகள் இவ்வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், ரயில் சேவைகள் நாளை (14) முதல் ஆரம்பிக்கப்படுமென ரயில்வே திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்த ஒரு தடத்தை கொண்ட ரயில் பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னர், கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு செல்வதற்கு ஏழரை மணித்தியாலங்கள் தேவைப்பட்ட நேரம் ஐந்தரை மணித்தியாலங்களாகக் குறைக்கப்படுமெனவும் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில் பயணிக்குமெனவும் சிந்தக ஜயசேகர தெரிவித்தார்.



மேலும் கருத்து தெரிவித்த சிந்தக ஜயசேகர,

பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில், வடக்கு ரயில்வே 1894 இல் தொடங்கியது. 1956 இல், யாழ். தேவி ரயில் கொழும்பிலிருந்து காங்கேசந்துறைக்கு பயணிக்க ஆரம்பித்தது. அதன் பின்னர், இந்த ரயில் சேவையானது வடக்கு மற்றும் தெற்கு இடையே இலட்சக்கணக்கான பயணிகளையும் பொருட்களையும் ஏற்றிச் சென்றது. யுத்த மோதல்கள் உக்கிரமடைந்ததால் 1986 இல் இந்த புகையிரத பாதை முற்றாக மூடப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இந்திய கடன் திட்டத்தின் கீழ் மீண்டும் 2014 இல் கொழும்பு காங்கேசன்துறை ரயில் சேவை இயங்க ஆரம்பித்தது. ஆனால் ஆங்கிலேயர் காலத்திற்குப் பிறகு 128 கிலோமீற்றர் ஓமந்தையிலிருந்து மஹவ வரையிலான பாதை திருத்தப்படாததால் ரயில் சேவை பல வேக வரம்புகளின் கீழ் மிகவும் மெதுவாக இயக்கப்பட்டது. இதன்காரணமாக யாழ்ப்பாணம்கொழும்பு ரயில் பயணம் ஏழரை மணித்தியாலங்களும், தபால் ரயில் பயணமானது பன்னிரெண்டு மணித்தியாலங்களும் எடுத்ததால், வினைத்திறனான சேவையை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது.

2017ல் ரயில்வே புனரமைப்புக்கான 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் திட்டத்தில் இருந்து 92 மில்லியன் டொலர் மதிப்புள்ள டெண்டர் 2018ல் அழைக்கப்பட்டு, முறையான கொள்முதல் செயல்முறைக்குப் பின்னர், இந்திய அரசுக்குச் சொந்தமான IRCONE நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன. 2019க்குப் பிறகு, மூன்று அமைச்சர்கள் மற்றும் ஐந்து செயலாளர்களின் கீழ், இந்த ரயில் பாதையின் புனரமைப்பு தொடங்குவதற்கு பல்வேறு தடைகள் ஏற்பட்டன.

2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர், இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகரின் ஆதரவுடன், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் விசேட முயற்சியின் கீழ் அனுராதபுரத்திலிருந்து ஓமந்தை வரையான பகுதி 2023 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டு ஜுலை 2023 இல் திறக்கப்பட்டது.

அதன் பின்னர், மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதியின் புனரமைப்பு 2024 ஜனவரியில் தற்போதைய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் தொடங்கியது. நேற்று முன்தினம் (11) இத்திட்டம் நிறைவுப்பெற்று, பரீட்சார்த்தப் பயணம் நிறைவடைந்தையடுத்து, பூர்த்தி செய்யப்பட்ட திட்டம் நேற்று (12) போக்குவரத்து அமைச்சில் ரயில்வே திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# 2024 முதல் எட்டு மாதங்களில் ரூ. 1,229,245 மில். வரி சேகரிப்பு

## இலக்கை அடைந்துள்ளதாக ஆணையாளர் அறிவிப்பு

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒகஸ்ட் வரையான 08 மாத காலத்துக்குள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,229, 245 மில்லியன் ரூபாவை சேகரித்து தனது இலக்கை அடைந்துள்ளதாகவும் இது 2023 ஆம் ஆண்டை விட 28.5 வீத அதிகரிப்பு எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரி வகைகளுக்கமைவாக கடந்தாண்டு சேரிக்கப்பட்ட மொத்த வரி வருமானத்தையும் திணைக்களம் அறிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 956,418 மில்லியன் ரூபாவாகும். இவ்வருடத்தில் திணைக்களம் 1,229,245 மில்லியன் ரூபா வரை, 28.5 வீதத்தினால் வருமானத்தை அதிகரிப்பதில் வெற்றி கண்டுள்ளதுடன் அதன் மூலமாக அரசாங்கத்தின் நிதி நிலவரத்தை வலுவான அடிதளத்தில் வைத்திருக்க பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட வருமான இலக்குகளை அடையும் முயற்சிக்கு உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புடனான பங்களிப்பு, வரி நிர்வாகத்தினால் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட விரைவான நடவடிக்கைகள், 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சவால்மிக்க வரித்திருத்தங்கள், பொருளாதாரத்தில் ஏற்பட்ட படிப்படியான முன்னேற்றம், வரி செலுத்துநர்கள் மற்றும் வரி நிபுணர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நாடு முழுவதும் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வரி செலுத்துநர்களின இணக்கப்பாட்டின் அதிகரிப்பு என்பன பங்களித்துள்ளது.




நாட்டுக்காக தற்போதுள்ள வரிச் சட்டங்களின் இணக்கப்பாட்டின் பிரகாரம், வரிகளை செலுத்திய வரி செலுத்துநர்கள், நாட்டின் நன்மைகாக தங்களது பங்களிப்பை நல்கிய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உத்தியோத்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதாகவும் இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

# பாக். தலைநகரில் மின் தடைக்கு எதிராக மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

சர்வதேச செய்திகள்

பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் மின்வெட்டுக்கு எதிராக மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் பாரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.



கராச்சியின் பஞ்சாப் கொலனி மற்றும் கிஸ்ரி பகுதியின் குடியிருப்பாளர்களே வீதியில் இரு பக்கங்களையும் இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடியாத வகையில் இடையூறு ஏற்பட்டுள்ளது.

நிலைமையை சுமுகமாக தீர்ப்பதற்கு உள்ளூர் மக்கள் மற்றும் கராச்சி மின் உற்பத்தி நிர்வாகத்துடன் பொலிஸார் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

முன்னதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மவுரிபூர் வீதி மற்றும் ஷஹீன் வளாக சுற்றுவட்டப் பாதையை இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையிலேயே கடந்த செவ்வாயன்று (10) புதிய ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுள்ளன. கராச்சி பகுதி மக்கள் மின் தடை மற்றும் மின் திருட்டு சம்பவங்களால் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. அங்குள்ள மக்கள் தினசரி கிட்டத்தட்ட 12 மணி நேரம் மின் தடையை எதிர்கொண்டு வருகின்றனர்.

நகரில் காலையில் 7.00 தொடக்கம் 8.30 மணி, 9.30 தொடக்கம் 12 மணி, பின்னேரம் 2.30 தொடக்கம் 5.00 மற்றும் இரவு 7.00 மணி தொடக்கம் 10.30 மணிக்கு மின்சாரம் துண்டிக்கப்படுவதாக பருகி கான், பாபர், முஹமது தாரின் மற்றும் பாபர் ஆகிய குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். தவிர சட்டவிரோத மின் இணைப்புகளும் பல வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான இணைப்புகளுக்கு பெரும் தொகை பணம் அறவிடப்படுவதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கராச்சி நகர் மின் விநியோகம் தொடர்பில் பல சிக்கல்களையும் எதிர்கொண்டு வருகிறது. கேள்வி அதிகரித்து வரும் நிலையில் தற்போதுள்ள வளங்கள் அதனை நிவர்த்தி செய்வதற்கு போதுமாக இல்லை. மின்சார விநியோகம், உற்பத்தி போன்ற விடயங்களில் தொடர்ந்து சிக்கல்கள் நீடித்து வருவதாக கூறப்படுகிறது.

கராச்சி எலெக்ட்ரிக் நிறுவனமே இப்பகுதிக்கான மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் முக்கியமான நிறுவனமாகும். எனினும் மின்சாரத் துறை பல சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பழமையான உட்கட்டமைப்பு, போதுமான நிதி மற்றும் சில நேரங்களில் மோசமான முகாமைத்துவம் மின்சார பிரச்சினைக்கு பிரதான காரணமாக பார்க்கப்படுகிறது.

# ஆடைத் தொழிற்சாலை மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தீ வைப்பு




பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆடை உற்பத்தித் தொழிலாளர்கள் மத்திய பங்களாதேஷின் காசிபூர் நகரில் அமைந்திருக்கும் புடவைத் தொழிற்சாலை ஒன்றின் களஞ்சியத்தின் மீது தீ வைத்துள்ளனர். எதிர்ப்பில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் சிலர் நேற்று முன்தினம் பகல் 1.00 மணி அளவில் களஞ்சியத்திற்கு தீ வைத்திருப்பதாக காசிபூர் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையின் தீயை அணைப்பதற்கு காசிபூர் தீயணைப்புப் பிரிவு விரைந்ததோடு, கோபமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியதால் மீண்டும் திரும்பிச் சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

# மாலைதீவில் பொருளாதார நெருக்கடி அதிகரிப்பு

மாலைதீவில் பொருளாதார நெருக்கடி நாட்டின் சமூகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை பாதிக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.



கடன் அதிகரிப்பு, கையிருப்பு சுருங்கி வருவது மற்றும் வெளிநாட்டு உதவிகளில் தங்கி இருக்கும் நிலை அதிகரித்து வருவது நாட்டின் பொருளாதார நெருக்கடி அதிகரிப்பதற்கு காரணமாகி இருப்பதாக ஜனாதிபதி முஹமத் முயிசு குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவின் கடன் பிரச்சினை உச்ச நிலையைத் தொட்டுள்ளது. 2024 மார்ச்சில் நாட்டின் மொத்த கடன் அளவு 8.3 பில்லியன் டொலர்களாக இருந்ததோடு அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 110.1 வீதமாகும். இந்தக் கடன்களில் வரவு செலவுத் திட்ட கடன்களாக 7.38 டொலர்கள் இருப்பதோடு 921 மில்லியன் டொலர்கள் உத்தரவாதக் கடனாக உள்ளது. குறிப்பாக வெளிநாட்டுக் கடன் 3.4 பில்லியன் டொலர்களாக அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45 வீதமாக உள்ளது. இது நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பொரும் பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# பங்களாதேஷில் டெங்கு மரணங்கள் அதிகரிப்பு

பங்களாதேஷில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 11 நாட்களில் டெங்கு நோய் காரணமாக 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் முறையான மருத்துவ வசதிகள் போதிய அளவில் இல்லாமை, பதிவாகாத டெங்கு சம்பவங்கள் மற்றும் தவறான சோதனை முடிவுகள் இந்த ஆண்டில் உயிரிழப்புகள் அதிகரிக்கக் காரணம் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டில் மொத்தம் 17,284 டெங்கு நோயாளர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 102 பேர் உயிரிழந்திருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 2023 உடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு நோய் சம்பவங்கள் 0.5 வீதத்தில் இருந்து 0.61 வீதம் அதிகரித்துள்ளது.

கிராமிய மற்றும் நகர மட்டங்களில் டெங்கு சிகிச்சைகளை மேம்படுத்துவதில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்று ஷஹ்ரவர்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இணை பேராசிரியர் நஸ்முல் அஹ்சன் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் பிரதமர் ஷெய்ஹசீனாவை பதவி கவிழ்க்கக் காரணமான ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நாட்டில் பொருளாதார நிலை மோசமடைந்திருப்பதோடு அதனை சமாளிப்பதில் இடைக்கால அரசு நெருக்கடியை சந்தித்துள்ளது.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 13 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.46
லுஹர் - 12.08
அஸர் - 03.14
மஃரிப் - 06.13
இஷா - 07.23

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 28
ராகுகாலம் : காலை : 10.33 -12.03வரை
சுபநேரம் : காலை : 06.03 - 07.33வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வழிகாட்டல்கள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக, இலங்கை முஸ்லிம்களுக்கு வழிகாட்டல்களை அறிவித்துள்ள அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, அவற்றை கவனத்திற்கொண்டு செயலாற்றுமாறு முஸ்லிம்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டில் கடந்த 100 வருடங்களுக்கும் மேலாக அரசியலுக்கு அப்பால் நின்று சமூக, சமய, சன்மார்க்கப் பணிகளை மேற்கொண்டுவரும் ஒரு மார்க்க, சமூக வழிகாட்டல் செய்து வரும் சபையே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா என்பதை சகலரும் அறிவர்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு வேட்பாளருக்கும் எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ செயற்படுவதில்லை.

06

யாழிலிருந்து சொல்வதைக் கேட்டு

## கிழக்கு மக்கள் தங்களது எதிர்கால அழிவை தேடிக்கொள்ளக் கூடாது



சிவனேசதுரை சந்திரகாந்தன்

**திருக்கோவிலிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தரப்பினர் சொல்வதை கிழக்கு மாகாண மக்கள் கேட்டு எதிர்காலத்தை அழிவை நோக்கி நகர்த்துவதா? அல்லது ஜனாதிபதியின் வெற்றியில் பங்காளர்களாகி எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்வதா? என்பதை தீர்மானிக்கும் தருணம் இதுவென இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி யாவார் என்பது உறுதி என தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வது மற்றும் அம்பாறை மாவட்டத்துக்கு தமிழ் அமைச்சர் ஒருவரைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

06

காலமான ஜனாதிபதி வேட்பாளர்

## இல்யாஸுக்கு அளிக்கப்படும் வாக்குகள் இரத்து செய்யப்படும்

சமன் ஸ்ரீ ரத்நாயக்க



ஜனாதிபதி தேர்தல் வாக்குச்சீட்டில் இடம்பெற்றுள்ள ஊசி சின்னத்துடன் ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸின் பெயர் நீக்கப்படமாட்டாதெனவும் அவருக்கு கிடைக்கும் வாக்குகள் அல்லது விருப்பு வாக்குகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்ட வாக்குகளாக அமையுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கிய ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸ் கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி காலமானதையடுத்து, வாக்குச் சீட்டில் பெயரிட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது.

06

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி

எல்பிட்டிய பிரதேச சபை உள்ளூராட்சி மன்றத்திற்கான தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி நடைபெறும் என காலி மாவட்ட தேர்தல் அதிகாரி உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்று (12ஆம் திகதி) நண்பகலுடன் நிறைவடைந்தது. அதனைத்தொடர்ந்து ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக, எல்பிட்டிய உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 08 அரசியல் கட்சிகள் மற்றும் 01 சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஜனசேத பெரமுன, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, இரண்டாம் தலைமுறை கட்சி உள்ளிட்ட கட்சிகளும் சுயேட்சைக் குழு ஒன்றும் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இதேவேளை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பு மனுவும், சுயேட்சைக் குழு ஒன்றின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டன.

06

இணையவழி பணமோசடியில் ஈடுபட்ட

## இரண்டு யுவதிகள் உட்பட 13 சீன பிரஜைகள் கைது

பொரளையில் CID அதிரடி சுற்றிவைளைப்பு



இணையவழி பண மோசடியில் ஈடுபட்ட சீன பெண்கள் உட்பட 13 சீனப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களுடன் மோசடிக்காக பயன்படுத்தப்பட்ட ஏராளமான மடிக்கணினிகள் மற்றும் கைத்தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிப் புலனாய்வு பிரிவு இலக்கம் 02பொறுப்பதிகாரி உபுல் கல்வல உள்ளிட்ட அதிகாரிகள் குழு, பொரளை கோதமி வீதியில் மேற்கொண்ட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

24 மற்றும் 29 வயதுடைய இரு சீனப் பெண்களும் 30 முதல் 44 வயதுக்கிடைப்பட்ட 11 சீன பிரஜைகளான ஆண்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

06




நம்பிக்கையான முதலீடு
ஸ்திரத்தன்மையின் வலிமை

இலங்கை வங்கியின் BASEL III இணக்கமான தொகுதிக்கடன்
15 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பங்களிப்பை வழங்கியுள்ளது.

எங்கள் மீது நம்பிக்கை வைத்த அனைத்து முதலீட்டாளர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும்
உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்

உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்கு அடுத்த நிலையில்தான் பெரியவர் ஆவர்.

# சுவரொட்டிகளுக்கான வீண்விரயமாகும் பணம்

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு இன்னும் ஒரு வார காலம் உள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு அபேட்சகரும் பிரசார நடவடிக்கைகளை பரவலாக்கி, தீவிரப்படுத்தியுள்ளனர்.

பிரதான அபேட்சகர் ஒவ்வொருவரும் நாளுக்கு மூன்று நான்கென தேர்தல் பிரசார கூட்டங்களை முன்னெடுக்கின்ற அதேநேரம் வீடுவீடான பிரசாரம், சிறுகூட்டங்கள், சந்திப்புக்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்றபடி துண்டு பிரசுரங்கள் வெளியிடல், பதாகைகளை காட்சிப்படுத்தல், போஸ்டர்கள் என்பவற்றின் ஊடாகவும் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர்.

கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் இதே பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் நிமித்தம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. குறிப்பாக போஸ்டர்கள், துண்டு பிரசுரங்களுக்கும் பெருந்தொகை பணம் செலவிடப்படுவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் தேர்தல் பிரசார போஸ்டர்களும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவை பொதுக்கட்டிடங்கள், பொது இடங்கள், வீதியோர மதிகள் என எல்லா இடங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன.

ஆனால் தேர்தல்கள் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய துண்டு பிரசுரங்களை விநியோகிக்கவோ சுவரொட்டிகளையும் பதாகைகளையும் காட்சிப்படுத்தவோ முடியாது. என்றாலும் ஒவ்வொரு தேர்தலிலும் அபேட்சகர்களின் பிரசார மார்க்கங்களில் இவை முக்கிய இடத்தைப் பெற்றவையாக உள்ளன. இந்தத் தேர்தலிலும் போஸ்டர்களும் துண்டு பிரசுரங்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

ஆனாலும் சட்டத்திற்கு முரணான இச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்களை தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. அதற்கு ஏற்ப பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் சட்ட விதிகளை மீறி இத்தேர்தல் பிரசாரத்தின் நிமித்தம் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளையும் போஸ்டர்களையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகளையும் அகற்றும் பணிகளுக்கென 1500 பேர் பொலிஸ் திணைக்களத்தினால் தொழிலாளர்களாக சேர்த்து கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களைத் திரட்டி அப்புறப்படுத்தும் அளவுக்கு தேர்தல் சட்டத்திற்கு முரணாக சுவரொட்டிகளும் போஸ்டர்களும் ஒட்டப்பட்டும் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டும் உள்ளன.

அந்த வகையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ நேற்று முன்தினம் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில், ஜனாதிபதி தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி ஒட்டப்பட்டிருந்த 04 இலட்சத்து 36 ஆயிரத்து 270 வரையான சுவரொட்டிகள் அகற்றப்பட்டுள்ளதோடு ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 904 சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டும் உள்ளன. அத்தோடு 1220 கட்அவுட்கள் அகற்றப்பட்டு 1218 பதாகைகள் நீக்கப்பட்டுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி இவ்வளவு தொகை போஸ்டர்களையும் சுவரொட்டிகளையும் ஒட்டுவதற்கும் பதாகைகளைக் காட்சிப்படுத்துவதற்கும் எவ்வளவு தொகை பணம் செலவிடப்பட்டிருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. அவை முற்றிலும் வீண்விரயமான செலவே அன்றி வேறில்லை. ஏனெனில் இத்தேர்தல் பிரசார போஸ்டர்களும் சுவரொட்டிகளும் உடனுக்குடனும் விரைவாகவும் அப்புறப்படுத்தக்கூடியவையாகும். அதனால் இவற்றின் ஊடாக பிரதிபலன்களை அடைந்து கொள்ளவும் முடியாது.

தேர்தல் பிரசாரத்தின் நிமித்தம் போஸ்டர்களையும் சுவரொட்டிகளையும் ஒட்டுவதும் பதாகைகளை காட்சிப்படுத்துவதும் தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய முரணான செயல். இதனை தேர்தல்கள் சட்ட ஏற்பாடுகள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றன. அதற்கு ஏற்ப சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் வழமை போன்று அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இவற்றை அகற்றும் நடவடிக்கை இத்தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டதும் அல்ல. ஏற்கனவே ஒவ்வொரு தேர்தல் பிரசார காலத்திலும் பொலிஸாரின் ஏற்பாட்டில் இவை அகற்றப்படவே செய்கின்றன.

அதேநேரம் இத்தகைய போஸ்டர்களும் சுவரொட்டிகளும் பதாகைகளும் சுற்றாடலைப் பாதிக்கக்கூடியனவாகவும் விளங்குகின்றன. தேர்தல் காலங்களில் பொதுக்கட்டிடங்கள் உள்ளிட்ட பொது இடங்களின் சுவர்கள் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் இவை ஒட்டப்பட்டு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட வழிவகுக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலுக்கு கெடுதலை ஏற்படுத்தும் இச்செயற்பாட்டைக் கட்டுப்படுத்துமாறு சூழல் நேய ஆர்வலர்களும் வலியுறுத்தவே செய்கின்றனர்.

ஆகவே தேர்தல் பிரசாரத்தின் நிமித்தமான இத்தகைய வீண்விரத்திற்கு செலவிடும் பணத்தை நாட்டில் கஷ்டப்படும் மக்களுக்கோ அல்லது நாட்டின் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கோ பயன்படுத்தலாம். அதுவே மக்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை வலுப்படுத்துவது அவசியம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள செய்தி



ஒரு முக்கியமான பிரச்சினையான தொழுநோய் குறித்து கருத்துரைக்கவுள்ளேன். இந்த நோயைப் பெரும்பாலும் குணப்படுத்த முடியுமாக இருப்பினும், இலங்கையின் சில பகுதிகளில் இன்றுவரை கவலைக்குரிய நிலைமை காணப்படுகிறது. அனைத்து இலங்கையர்களின் ஆரோக்கியத்தையும் கண்ணியத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பு அவசியமாகின்றது. இந்தச் சவாலை அவசரமாக எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் சுமார் 1,550 பெரியவர்களும், 173 குழந்தைகளும் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மைய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த எச்சரிக்கை ஏற்படுத்தும் புள்ளிவிவரம், ஒரு வலிமையான மற்றும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் தேவையை வலியுறுத்துகிறது.

தொழுநோய் மக்கள் சங்கம், தொழுநோய் எதிர்ப்புப் பிரசாரம் மற்றும் பல்வேறு சுகாதாரத் துறைகள் உள்ளிட்ட அர்ப்பணிப்புள்ள அமைப்புகளுடன் இணைந்து, தொழுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் தீவிரப்படுத்தி வருகிறது. இந்த ஒத்துழைப்பு முயற்சிகள் விழிப்புணர்வு அதிகரிப்பு. முன்கூட்டிய நோய் கண்டறிதல் மேம்பாடு, பாதிக்கப்பட்டோருக்கு உகந்த சிகிச்சையை உறுதி செய்யும் நோக்கத்தைக் கொண்டது.

தொழுநோயைப் பற்றி அறிந்துகொள்வதன் மூலமும், அதன் அறிகுறிகளைப் புரிந்துகொள்வதன் மூலமும், சமூகநலத் திட்டங்களில் பங்கேற்பதன் மூலமும் இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு ஒவ்வொரு குடிமகனையும் நான் அழைக்கிறேன். பாதிக்கப்படுவோர், பயம் அல்லது பாகுபாடின்றி உதவியை நாடக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு, இந்நோய் பற்றிய தவறான புரிதல்களையும், களங்கத்தையும் அகற்றுவதை மிகவும் முக்கியமாகக் கருதுகிறோம்.

ஒன்றுபட்டு தொழுநோயை அனுதாபத்துடனும் செயற்பாட்டுடனும் எதிர்கொள்வதற்கான நமது தீர்மானத்தை வலுப்படுத்துவோம். தனிநபர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பாதிக்கும் ஒரு நோய்க்கு எதிரான இந்தப் போராட்டத்தில் உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை.

இந்த விடயத்தில் உங்கள் கவனத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

# மலேசிய தொழிலதிபர் பிரமால் வாசுதேவன் தம்பதியர் இலங்கையில் நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் பேருதவி



## வறிய மக்களுக்கு நிவாரணம்; 40 ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திரசிகிச்சை

மலேசியாவில் வசிக்கும் தொழிலதிபரான பிரமால் வாசுதேவன் மற்றும் அவரது துணைவியார் திருமதி சாந்தி பிரமால் ஆகியோர் ஏனையவர்களுக்கு பொருத்தமான விதத்தில் உதவுதல் தங்களது கடமை என நம்புகின்றனர். அவர்கள் இருவரும் தனிப்பட்ட பயணமாக இலங்கை வந்துள்ளனர். அவர்களின் மூதாதையர்கள் 1895 மற்றும் 1905 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையை விட்டு வெளியேறினர்.

இலங்கை மீது அவர்களுக்குள் உணர்வுபூர்வமான பற்றுதல் உள்ளது. பிரமாலும் சாந்தியும் தங்களின் உழைப்பில் ஒரு பகுதியை பல்வேறு தொண்டு முயற்சிகளுக்குச் செலுத்துகின்றனர்.

ஒருநாள் அவர்களுக்கு, ஒரு மின்னஞ்சல் வந்தது. இலங்கையில் ஒரு மீனவ கிராமத்திற்கு உதவுமாறு கோரிக்கை வந்தது. அங்கு வறுமையால் மக்கள் போராடுகிறார்கள் என்ற செய்தி கிடைத்தது. பிரம்மாலின் இதயம் கிராம மக்கள் மீது அனுதாபம் கொண்டது. அக்கோரிக்கையை ஆராய்ந்த பின்னர் அதற்கான திட்டத்திற்கு 50% செலவிட முடிவு செய்தார். இந்தத் திட்டம் வெற்றியடைந்தது. கிராமத்திற்கு மிகவும் தேவையான நிவாரணத்தைக் கொண்டு வந்தது. மக்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தனர். இதனை சர்வேஸ் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினார்.

ஆனாலும் பிரம்மாலின் கருணை அத்தோடு நிற்கவில்லை. அவரது கவனம் இலங்கையில் குவிந்திருந்தது. ஜனவரி 2023 இல் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டவர்களின் அவலநிலையைக் கண்டு, அவர் தனது தொண்டு நிறுவனம் மூலம் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை (SLR 300 மில்லியன்) அறுவை சிகிச்சைகளுக்கு நிதியளிப்பதற்காக உறுதியளித்தார். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவி செய்வதில் ஆழ்ந்த அனுபவமுள்ள வேலாயுதம் சர்வேஸ் தலைமையிலான தொண்டு நிறுவனமான Assist RR ஊடாக கண்புரை அறுவைச் சிகிச்சைக்கு உதவ தீர்மானித்தார்.

பிரம்மாலின் தாராளமான பங்களிப்பால் நாடு முழுவதும் சுமார் 40,000 கண்புரை அறுவைச் சிகிச்சைகள் சாத்தியமாகின. இந்த முயற்சியின் இதயம் யாழ் போதனா வைத்தியசாலையாகும். இங்கு டொக்டர் மலரவன் மற்றும் அவரது அணியினரும் சில சமயங்களில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த அர்ப்பணிப்புள்ள கண்சத்திரசிகிச்சை நிபுணர்கள் குழு ஒன்றுகூடி மகத்தான பணியை மேற்கொண்டது. 18 மாதங்களுக்கும் மேலாக, அவர்கள் சுமார் 16,000 அறுவைச் சிகிச்சைகளைச் செய்தனர்.

நோயாளிகளுக்கு போக்குவரத்து, உணவு மற்றும் பராமரிப்பு வழங்கப்பட்டன. அவர்களின் பார்வை மீட்டெடுக்கப்பட்டது. பிரம்மாளின் தளராத ஆதரவாலும், டொக்டர் மலரவன் மற்றும் அவரது குழுவினரின் அயராத முயற்சியாலும், சர்வேஸின் இடைவிடாத ஒருங்கிணைப்பாலும் இந்த அசாதாரண சாதனை கிடைத்தது.

இருளில் வாழ்ந்த மக்கள் இப்போது உலகின் அழகை மீண்டும் அனுபவிக்க முடியும், அவர்களின் நன்றியுணர்வு எல்லையற்றது. இதனையடுத்து பிரம்மால் இந்த சத்திர சிகிச்சையை தொடர கூடுதலாக அரை மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உறுதியளித்தார். இன்று வடக்கில் கண்புரை அறுவை சிகிச்சைக்கு காத்திருக்கத் தேவையில்லை. சமீப வருடங்களில் பிரமால் மற்றும் அவரது துணைவியார் சாந்தியின் யாழ்ப்பாண பயணம் உணர்வுப்பூர்வமானது. அவர்களின் பெருந்தன்மை சமூகத்தில் ஒரு அழியாத முத்திரையை விட்டுச் செல்கிறது.

கடுமையான வறுமையை அனுபவிக்கும் சமூகங்களில் வயதானவர்களுக்கு கண்புரை அறுவை சிகிச்சை மிகவும் முக்கியமானது. கண்புரை மங்கலான பார்வையை ஏற்படுத்துகிறது மற்றும் சிகிச்சையளிக்கப்படாவிட்டால், குருட்டுத்தன்மைக்கு வழிவகுக்கும். வயதான நபர்களுக்கு, சமைப்பது, ஆடை அணிவது அல்லது பாதுகாப்பாக சுற்றி வருவது போன்ற அன்றாட பணிகளைச் செய்வதற்கான அவர்களின் திறனைக் குறைக்கிறது.

குறைந்த வருமானம் உள்ள பகுதிகளில் சிகிச்சை அளிக்கப்படாத கண்புரை பார்வை இழப்புக்கு முக்கிய காரணமாகும். முதியவர்கள் பார்வையை மீண்டும் பெறும்போது, விவசாயம், தொழில் ஈடுபடல் அல்லது கால்நடைகளை பராமரித்தல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளில் மீண்டும் ஈடுபடலாம்.





# சகவாழ்வு மாநாடு, குர்ஆன் போட்டிகளை ஏழு நாடுகளில் ஒரு வாரத்தில் நடத்திய சவுதி



உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அல் குர்ஆனின் பெருமையையும் மகத்துவத்தையும் பரவலாக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் நாடாக விளங்குகிறது சவுதி அரேபியா. அல் குர்ஆன் மனனப் போட்டி உள்ளிட்ட அல் குர்ஆனுடன் தொடர்புடைய பலவிதமான நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து சவுதி நடத்தி வருகிறது.

இரண்டு புனித பள்ளிவாசல்களின் காவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் மற்றும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இப்பணிகள் சவுதியின் இஸ்லாமிய விவகார அமைச்சு மற்றும் அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக்கினால் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

அமைச்சர் ஆல் ஷைக் இவ்வமைச்சுப் பதவியை ஏற்றது முதல் இன்றுவரை மிகச்சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார். அந்த வகையில் கடந்த ஏழு நாட்களுக்குள் தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கெதிரான மாநாடுகளையும் அல் குர்ஆன் போட்டிகளையும் உலகின் ஏழு நாடுகளில் நடத்தி சர்வதேசத்தின் கவனத்தை சவுதியின் பக்கம் ஈர்த்துள்ளார்.

குறிப்பாக இந்தோனேசியா, கிர்கிஸ்தான் குடியரசு, செனகல், சாம்பியா, கமரூன், ஜிபூட்டி, கொமொரோஸ் குடியரசு ஆகிய நாடுகளில் தீவிரவாத, பயங்கரவாத ஒழிப்பு மாநாடுகளும் அல் குர்ஆன் போட்டிகளும் சவுதியின் பூரண அனுசரணையுடன் நடத்தப்பட்டுள்ளன. அல் குர்ஆனை மமனம் செய்த பெண் ஹாபிழாக்களுக்கென முதலாவதும் மிகப் பெரியதுமான குர்ஆன் போட்டி கிர்கிஸ்தானில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இம்மாநாடு வெற்றிபெறவும் சிறப்பாக நடத்தப்படவும் அமைச்சர் கலாநிதி அப்துல் லத்தீஃப் பின் அப்துல்அஸீஸ் ஆல் ஷைக் பூரண ஒத்துழைப்பு நல்கினார். சவுதி அரேபியா தீவிரவாதத்தை ஒழிக்கவும், சகிப்புத்தன்மை சகவாழ்வை உலகில் நிலைநிறுத்தவும் அர்ப்பணிப்போடு உழைத்து வருகிறது.

அமைச்சர் ஆல் ஷைக், தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கெதிராக முழுதாகச் செயற்பட்டு, சகிப்புத்தன்மை சகவாழ்வை உலகில் நிலைநாட்ட அரும்பாடுபட்டமைக்காக எகிப்து நாட்டின் அதிஉயர்ந்த விருது அவருக்கு வழங்கி கௌரவிப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் மதநல்லிணக்கத்தை ஊக்குவிப்பதிலும் குர்ஆன் போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்துவதிலும் இவர் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகிறார்.

மேலும், தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கெதிரான சர்வதேச மாநாடுகளும் சர்வதேச அல் குர்ஆன் போட்டிகளும் சவுதி மன்னர் மற்றும் இளவரசரின் நேரடி கண்காணிப்பில் சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சர் கலாநிதி அப்துல் லதீப் ஆல் ஷைக்கின் மிகச் சிறந்த ஏற்பாடுகளுடன் புனித மக்காவில் வருடாவருடம் நடாத்தப்படுகிறது.

இத்தகைய மாநாடுகளை உலகின் பல நாடுகளிலும் அடிக்கடி நடத்தி வரும் சவுதி அரேபிய மன்னருக்கும் இளவரசருக்கும் இஸ்லாமிய விவகார அமைச்சருக்கும் அமைச்சு ஊழியர்களுக்கும் பலராலும் நன்றி தெரிவிக்கப்படுகிறது.







அஷ்ஷேக் எம்.எச்.ஷேஹுத்தீன்
மதனி, (பி.ஏ), பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

# கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான மாவட்ட விவசாய குழுக் கூட்டம்

(பரந்தன் குறூப் நிருபர்)



கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று (12.09.2024) காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு S.முரளிதரன் அவர்களின் தலைமையில் மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் முன்கொண்டுவரப்பட்டு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

கடந்த கால கூட்ட அறிக்கை, நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், சிறுபோக பயிர்ச் செய்கை, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மேலும் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோக பயிர் செய்கையினை முறையான பொறிமுறையின் கீழ் கொண்டு வருவதற்கான விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு கல்மடுக்குளம் குடமுருட்டி குளம் ஆகியவற்றின் சிறுபோக பயிர் செய்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர்(காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட செயலக துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாய பிரிவின் உத்தியோகத்தர்கள், பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

## வல்லிபுரம் மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அடிக்கல் நாட்டு விழா

(கரவெட்டி தினகரன் நிருபர்)

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் கைவிடப்பட்டு பராமரிப்பின்றி கைவிடப்பட்டிருந்த புலோலி வல்லிபுரம் மருதடி தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் சங்கு ஸ்தாபனமும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.03 மணி முதல் 10.33 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளன.

இதற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் நாட்டி வைப்பார் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மன்னார் விஜயம்

### பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனுடன் கலந்துரையாடல்

(மன்னார் குறூப் நிருபர்)



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை அவருடைய மன்னார் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் ஜஸ்ரின் துரம் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

## யாழில் பாரதியார் வீதி திறப்பு

(யாழ் . விசேட நிருபர் )

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 103ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் புதன் கிழமை யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையில் பாரதி வீதி திறந்து வைக்கப்பட்டது.

வட்டு. தென்மேற்கு பகுதியிலுள்ள குறித்த வீதிக்கு பாரதி வீதி என பெயர் சூட்டப்பட்டு இவ்வீதி திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், மதகுருமார், வலி மேற்கு பிரதேச செயலாளர், வலி மேற்கு பிரதேச சபை செயலாளர், கிராம சேவையாளர், பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, இந்திய துணை தூதரக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணத்துக்கு நேற்றையதினம் வியாழக்கிழமை வருகை தந்த ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை சந்தித்து கலந்துரையாடினார். யாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(படம் - யாழ். விசேட நிருபர்)

## சார்க் திரைப்பட தினம் - 2024 பிரதம அதிதியாக வட.மாகாண ஆளுநர்

(கோப்பாய் குறூப் நிருபர்)



சார்க் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மத்திய கலாசார நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட சார்க் திரைப்பட தினம் - 2024 நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், இலங்கைக்கான நேபாள நாட்டு உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர்,

“சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடு என்ற வகையில் நாம் பெருமையடைகின்றோம். எமக்கு நீண்டகால வரலாற்றை கொண்ட கலாசாரம் உள்ளது. இந்து மற்றும் பௌத்தம் தொடர்பான மிக முக்கிய மெய்யியல் வரலாற்று சிறப்பை கொண்டதே எமது பிராந்தியம். அந்த மெய்யியல் தத்துவங்கள் உலகளாவிய ரீதியில் பரவியுள்ளன.

உலக பொருளாதாரத்தில் இந்தியா ஒரு முக்கிய புள்ளியாக திகழ்கிறது. வடக்கில் திரைப்பட துறை மெதுவாக வளர்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இந்நிகழ்வை நடத்துகின்றமை காலத்திற்கு பொருத்தமானதாக காணப்படுகிறது. இங்குள்ள திரைப்பட துறையினருக்கு புத்துணர்ச்சி வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கான ஆரம்ப நிகழ்வாக இது அமைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# பார்வைக் குறைபாடு உடைய 274 மாணவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் வழங்கிவைப்பு

(கோப்பாய் குறூப் நிருபர்)



யாழ்.சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்ட 274 மாணவர்களுக்கு இலவசமாக கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (11) புதன்கிழமை யாழ்.சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் நடைபெற்றது.

34 பாடசாலைகளைச் சேர்ந்த 7 ஆயிரத்து 500 மாணவர்கள் பரிசோதிக்கப்பட்டு அவர்களில் பார்வைக் குறைபாடுடைய 274 மாணவர்களுக்கே இந்த கண்ணா டிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், 14 வயது வரையான பிள்ளைகள் மேலதிக கண்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர். மலேசியாவைச் சேர்ந்த "அழகா"(Alaka) பௌண்டேசன் நிறுவுநர்களான பிரமால் தம்பதியர் இந்தக் கண்ணாடிகளுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தனர்.

யாழ். போதனா மருத்துவமனையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் எம். மலரவனின் முயற்சியால் இந்த இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் "அழகா" பௌண்டேசன் நிறுவுநர்கள், கண் சத்திர சிகிச்சை நிபுணர் எம். மலரவன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மருத்துவர் யோ. யதுனந்தனன், சங்கானை கல்வி கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

# அநுரவின் அலங்கார வார்த்தைகள் நமக்கு விமோசனம் தராது

### சந்தர்ப்பம் வழங்கிப் பார்க்க இது செஸ் விளையாட்டல்ல என்கிறார் ரிஷாட் எம்.பி



அநுரவுக்கு ஆதரவளிப்பவர்கள் கோட்டாவின் யுகத்தை மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும். வெறுமனே அலங்கார பேச்சுக்களுக்கும் இனிப்பான வார்த்தைகளுக்கும் மயங்கிவிட வேண்டாம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சமூக ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாசவுடன் நெருங்கிப் பழகியதால் அவர் பற்றிய பல புரிதல்கள் எம்மிடம் உள்ளன. நேர்மையானவர். பொய் சொல்லாதவர். வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர். எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவாறே, சகல பிரதேசங்களிலும் இவரது சேவைகள் வியாபித்துள்ளன. தன்னிடம் நிதியில்லாதிருந்தாலும் வேறு உதவிகளைப் பெற்று, பாடசாலைகளுக்கு பஸ் வண்டிகளை வழங்கியுள்ளார். "ஸ்மார்ட்" வகுப்பறைகளை நிர்மாணித்தவர்.

இனங்களிடையே மோதலைத் தூண்டும் இனவாதப் பேச்சுக்களை நிறுத்தவும் சமய நம்பிக்கைகளை மலினப்படுத்தும், குரோதப் பேச்சுக்களை தடைசெய்யுமாறும் நாம் கோரியுள்ளோம். இனவாதம், மதவாதம் மேலோங்கியுள்ள நாடுகளால் பொருளாதாரத்தில் முன்னேற முடியாது.

கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படவில்லை. திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. அவரின் ஆட்சியைப் பயன்படுத்தி, சிலர் நிலைமையைப் பயன்படுத்தினர். இந்நிலைமையைப் போக்குவதற்கு இந்தியாவே முதலில் 04 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கியது. இவ்வுதவியைக் கொண்டு பெற்றோல், எரிபொருட்கள் மற்றும் தட்டுப்பாடான பொருட்களை ரணில் கொள்வனவு செய்தார். வரிசை யுகம் நீங்கத்தொடங்கியது. இந்த வகையில் இந்தியாவை மறக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்கவின் திறமைகளைப் பயன்படுத்துவதற்கு அங்குள்ள ஊழல்வாதிகளும் இனவாதிகளும் விடப்போவதில்லை. கோட்டாவின் கையாட்களின் கைப்பிள்ளையாகவே இன்று ரணில் உள்ளார்.

மாற்றம் தேவையெனக் கருதும் சிலர், தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கத் தயாராகின்றனர். ஒரு "டெஸ்டிங்" செய்து பார்க்கப் போவதாக மாற்றம் வேண்டுவோர் கூறுகின்றனர். இது ஆபத்தானது. அனுபவமில்லாத கோட்டாபயவை ஆட்சிக்கு அமர்த்தியதால், அனுபவித்தவற்றை மறக்க முடியுமா? சந்தர்ப்பம் வழங்கிப் பார்க்க இது "செஸ்" விளையாட்டல்ல என அவர் தெரிவித்தார்.

### யாழில்

## ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார கூட்டம்



(யாழ்.விசேட நிருபர்)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வின் தேர்தல் பரப்புரை கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவ் ஏற்பாட்டில் தேர்தல் பரப்புரை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள், பொது மக்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## 'பன்முக நோக்கில் பாரதி' யாழில் விசேட நிகழ்வு



(யாழ். விசேட நிருபர்)

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு லிங்காஸ்வர கீதம் வழங்கிய 'பன்முக நோக்கில் பாரதி' எனும் விசேட நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வடமராட்சி வல்லையிலுள்ள விக்னேஸ்வரா திருமண மண்டபத்தில் லிங்காஸ்வர கீத இயக்குநர் ஷாஜிதா அட்ஜெயலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவும் சிறப்பு அதிதிகளாக வர்த்தகர் சண்முகசுந்தரம் பிறேம்குமாரும் பாடலாசிரியர் வெற்றி துஷ்யந்தனும் கலந்துகொண்டனர்.



குறித்த நிகழ்வில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் படைப்புகளை இசை, நடனம் ,இலக்கியம் என்னும் பல்கோண பார்வையில் வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்

(பருத்தித்துறை விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காங்கேசன்துறை வீதியின் சுன்னாகம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். இவரது கால் விரல்கள் மற்றொரு மோட்டார் சைக்கிளுக்குள் சிக்கியுள்ளது.

காயமடைந்தவர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்து தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





யாழ்.மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர். பொன்.சிவபாலனின் 26 ஆவது வருட நினைவு தினம் நேற்றுமுன்தினம் அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்றது.

(படம்: யாழ்.விசேட நிருபர்)

## மாணவர்களுக்கிடையே...

(11) மாலை இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த கலை விழாவிற்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இருதரப்பு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் கல்வி நடவடிக்கைகளும் உடனடியாக அமுலுக்கு வரும் தற்காலிகமாக இடைநிறுத்த நேற்று (12) முதல் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் அறிவித்துள்ளார்.

அறிக்கையொன்றினூடாக இதனை தெரிவித்துள்ள அவர்,

பல்கலைக்கழகத்தில் இரு தரப்பு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல்கலைக்கழகங்களில் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகங்களிலிருந்து நேற்று(12) 06 மணி முதல் உடனடியாக வெறியேறவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் எந்தவொரு பீடத்தின் வளவுக்குள்ளும் நேற்று(12) 06 மணிக்கு பின்னர் நுழையவும், தங்குமிடங்களில் தங்கியிருப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு தங்கியிருக்கும் பட்சத்தில் நாட்டிலுள்ள சிவில் சட்டவிதிகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் உபவேந்தர் மேலும் அறிவித்துள்ளார.

## தேசப்பற்றுள்ள தேசிய...

ஏற்பாட்டாளர்களை தாக்கியுள்ளனர். ஜனதா விமுக்தி பெரமுன தொடர்பாக அவர் கருத்து வெளியிடும்போதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து, அமைப்பாளர்களுக்கும் கும்பலுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள், "இது அமைதியான மாநாடு, இங்கு பிரச்சினை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் கருத்தை கேட்க முடியாவிட்டால், இங்கிருந்து வெளியேறுங்கள்" என தெரிவித்துள்ளனர்.

எனினும் இதனை கருத்திற்கொள்ளாது கூச்சலிட்டு தாக்கதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் பொலிஸாருக்கு அறிவித்ததால் அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் குழுவே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் சுதந்திரத்தை சகித்துக்கொள்ள முடியாத பயங்கரவாத மனநிலை கொண்ட அரசியல் குழுவினாலேயே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான தாக்குதலால் அச்சுறுத்த முடியாதெனவும் தேசப்பற்றுள்ள தேசிய முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி நுவான் வல்லந்துடாவ குற்றஞ்சாட்டியுள்ளார்.

## வடக்கு, கிழக்கு மக்களும்...

(12) நடைபெற்ற, "இயலும் ஸ்ரீ லங்கா" மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில், பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் பந்துல குணவர்தன உட்பட அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, கருத்து தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த,

தாம் ஆட்சிக்கு வந்தால் முதலாவதாக பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக அநுரகுமார திசாநாயக்க தெரிவித்து வருகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டம் அதுவல்ல. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டும். சம்பள அதிகரிப்புகளை வழங்க வேண்டும். மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும். இது போன்று பல்வேறு வேலைத் திட்டங்கள் உள்ளன.

## பிரதிவாதிகளின் பட்டியலை...

மாதம் 02 ஆம் திகதி அழைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம் மனு நேற்று(12) எஸ். துரைராஜா, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் நேற்று முதல் 08 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டுமெனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதன்போது, எதிர்வரும் நான்கு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட பிரதிவாதிகள் பட்டியலை தாக்கல்செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்பின்னர், இம் மனுவை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி அழைக்குமாறு உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்தை ஆதரிக்கும் முடிவில்...

பிரேமதாசவைத் தவிர ஏனைய எந்த வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லையெனவும் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டா தெனவும் கட்சியின் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதானிகள் குழு அண்மையில் கூடி இந்த முடிவை உறுதி செய்ததாகவும் சுமந்திரன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அமுலாக்குவது குறித்தே தற்போது ஆராயப்படுவதாகவும் எம்.ஏ.சுமந்திரன் குறித்த பதிவில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை முன்னேற்றுவதற்கான...

அநுர தனிப்பட்ட விளம்பர பிரசாரத்தையே மேற்கொண்டுள்ளார். தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போது அனுரகுமார அப்போது எங்கிருந்தார்? நடைமுறைக்கு சாத்தியமற்ற வாக்குறுதிகளை மேடைகளில் வழங்கி வருகின்றனர்.

சஜித் பிரேமதாச யாருக்கும் தொப்பி போடுபவரல்ல. அவருக்கு அவரே தொப்பியை போட்டுக்கொள்வார். தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானித்துவிட்டனர். ரணில் விக்கிரமசிங்க மீது மக்களுக்கு நம்பிக்கையுள்ளது.

இன்று நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் தொகுதிகளிலும் தேர்தலில் நூற்றுக்கு 85 சதவீத வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## மக்களின் அரசியலுரிமை சார்...

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம் அவருக்குள்ள சர்வதேச நாடுகளுடனான உறவு மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை ஆகியவற்றைக்கொண்டு, அவரே தொடர்ந்தும் இந்த நாட்டை வழிநடத்த வேண்டுமென்பதே நாட்டிலுள்ள அநேகரது விருப்பாகவுள்ளது.

அதேபோன்று ஒவ்வொரு வீட்டிலும் இன்று எரிவாயு அத்தியாவசியமான பொருளாக இருக்கின்றது. அதேபோன்றுதான் இன்றைய நாட்டின் சூழ்நிலைக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி அவசியமாக இருக்கின்றது.

எனவே, வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஒவ்வொரு மக்களும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் வாக்களிப்பது அவசியமாகும்.

இதை நான் வெறும் வாக்குகளை பெறுவதற்காக கூறவில்லை. உங்கள் ஒவ்வொருவரதும் எதிர்காலத்தை மட்டுமல்லாது, நாட்டையும் ஒளிமயமாக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகொள்ள வைக்கும் ஆளுமை அவரிடம் மட்டுமே இருக்கின்றது.

கடந்தகால வரலாற்றை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்திலிருந்து ஈ.பி.டி.பி சரியான வழிகாட்டலை செய்து வந்துள்ளது. எமது கொள்கையும் வழிமுறையும் சரியானதாக இருப்பதைக்கண்டு அதுதான் வெற்றி அடையப் போகின்றதென்ற உண்மையை உணர்ந்த சக தமிழ் கட்சிகளும் குழுக்களும் அச்சம் கொண்டு தமிழ் தேசிய கூட்மைப்பு என்ற ஒன்றை கட்டமைத்து அரசியல் செய்தனர்.

ஆனால், சக தமிழ் கட்சிகளிடம் நிலையான கொள்கை ரீதியாக எந்தவொரு வேலைத் திட்டமோ அதற்கான பொறிமுறையோ இருக்கவில்லை. அது தொடர்பாக அக்கறையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

இதனிடையே, கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சியில் வரலாறு காணாத வகையில் மக்கள் திரட்சியை ஈ.பி.டி.பி செய்து காட்டியுள்ளது. இது பலருக்கு வயிற்றில் புளியை கரைக்க ஆரம்பித்துவிட்டது. இதனால் எம்மீது சேறுபூசல்களையும் அவதூறுகளையும் செய்ய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால், ஈ.பி.டி.பி யினராகிய நாம் சரியான வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் வைத்திருந்தோம். இதனால்தான் எம்மை மழுங்கடிப்பதற்காக பல்வேறு சேறுபூசல்களை மேற்கொண்டு வந்தனர்.

இதேநேரம், எமது கொள்கைளும் வழிநடத்தலும் சரியானதாக இருந்து வருகின்றமையால்தான் இம்முறை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் குறிப்பாக தமிழ் மக்களிடம் நான் அறைகூவல் விடுக்கின்றேன்.

அதுமட்டுமன்றி, ரணிலின் வெற்றியினூடாகவே மக்களின் அபிவிருத்தி அன்றாட பிரச்சினைகள் மற்றும் அரசியலுரிமை சார் பிரச்சினைகளுக்கான தீர்வை எட்ட முடியும். இதுவே உண்மையும் கூட என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## வாக்காளர் அட்டையின்றி...

வாக்காளர் அட்டை என்பது வாக்காளர் தாங்கள் வாக்களிக்க வேண்டிய தொகுதியை அடையாளம் காண்பதற்கும் வாக்குச்சாவடியில் தமது தொடரிலக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே வழங்கப்படுகிறது. வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்டரீதியான அடையாள ஆவணங்களைக் காண்பித்து வாக்களிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குப் பிரவேசித்து, தமது அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியையும் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழிகளில் வாக்காளர், தமது வாக்காளர் அட்டையின்றியே வாக்களிப்பதற்கான வசதிகள் இருப்பதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை கட்டியெழுப்ப...

நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனை அவர், மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதாரம் வரம்பில் சிக்கியுள்ளது. ஏன் இவர்களுக்கு மட்டும் இலஞ்சம் வாங்கும் அளவுக்கு மட்டுமே பொருளாதாரம்? நாம் இதை விட பொருளாதாரத்தை பெரிதாக்குவோம். தனக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து துறைகளிலும் செயற்படும் ஒரு சிறந்த சமூகம், ஒரு சிறந்த கல்வி மாற்றத்தை உருவாக்குவோம். அதுதான் நாடு... அப்படி ஒரு நாடு வேண்டாமா? அதைத்தான் நாங்கள் வழிநடத்துகிறோம். இப்போது சிறுபோகமும் முடிந்துள்ள நேரத்தில், நாங்கள் நாட்டை பொறுப்பேற்று கட்டியெழுப்ப தயாராகவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

## நல்லை ஆதீனம் நாமலுக்கு ஆசி...

சந்தித்த நாமல் ராஜபக் ஷ, பொன்னாடை போர்த்தி அவரை கௌரவித்து ஆசிகளையும் பெ ற்றுக்கொண்டார். இதன்போது, பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடியதுடன் நல்லை ஆதீன குரு மு தல்வர், நாமல் ராஜபக் ஷவுக்கு நந்திக் கொடி வழங்கி ஆசிர்வதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தவறான தகவல்கள் பகிரலை...

பெற்ற நியூஸ் செக்கர் (News checker) தகவல் சரிப்பார்த்தல் அமைப்புடன் 'டிக் டொக்' கைக்கோர்த்துள்ளது.

அத்தோடு, டிக் டொக் இலங்கை தேர்தல் மையத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த தேர்தல் மையம் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தனது சேவையை வழங்குகின்றது.

மேலும், பயனர்களுக்கு தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை வழங்குகிறது. இவற்றிலுள்ள அறிக்கையிடல் கருவிகள் பயனர்களை தவறாக வழிநடத்தும் உள்ளடக்கத்தை அடிகோடிட்டு காட்டும். இந்நிலையில், டிக் டொக்கின் உண்மை சரிப்பார்த்தல் வழிகாட்டுதல்களை மீறும் தகவல்களை அகற்றுதல், பகிரப்படுவதை கட்டுப்படுத்தல் மற்றும் நம்பகமான ஆதாரங்களுக்கு, தேடல்களுக்கு வழிகாட்டல் ஆகியவற்றை செயற்படுத்தும். வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மையான தேர்தல் முறையை பேணுவதற்கு பாதுகாப்பான அமைப்புகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் இந்த தளம் தொடர்ந்து செயற்படும்.

## மாற்று கல்விக்கான சந்தர்ப்பம் ...

நேற்று முன்தினம் (11) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தொழில் ரீதியான போதனையாளர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அவர்,

தொழில் ரீதியான போதனையாளர்களுடைய செயற்பாடுகள் தற்போதைய கல்வி முறையோடு பொருந்த வேண்டும். இலவச கல்விக்காக நாம் முழுமையாக செயற்படுவோம். இலவச கல்வியை அறிமுகப்படுத்திய சந்தர்ப்பத்தில் சமூகத்தில் உயர் வர்க்கத்திலிருந்த சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே இலவச கல்வியை முழுமையாக பாதுகாப்பதோடு மாற்றுக் கல்விகளுக்கான வாய்ப்புகளையும் பலப்படுத்த வேண்டும்.

சிறந்த தரத்திலான கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளமையால் மாற்று வழிமுறைகளுக்குச் செல்ல வேண்டாம் என்று தடை செய்யமுடியாது. மாணவத் தலைமுறைக்கு கல்வியை பெற்றுக் கொள்வதற்கானசந்தர்ப்பத்தைபலப்படுத்தவேண்டும். இலவசக் கல்வி முறையை பலப்படுத்துவதோடு மாற்றுக் கருவிகளுக்கான சந்தர்ப்பத்தையும் பலப்படுத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொழில் ரீதியான போதனையாளர்களின் தொழில் செயற்பாடுகளின் போது அறிவை வளர்த்துக்கொள்வதா? அல்லது குறைத்துக்கொள்வதா? என்பது குறித்து சிந்திக்கவேண்டும். அறிவை மையமாகக்கொண்ட பொருளாதார மேம்பாட்டின்போது அவர்களுடைய பங்களிப்பு பயனுள்ளதாக அமையும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும்தெரிவித்தார்.

## Air Ship பறக்கும் கப்பல் சேவை...

மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நிலாவெளி, மட்டக்களப்பில் பாசிக்குடா, அம்பாறையின் அருகம்பே போன்ற சுற்றுலா தளங்களின் இயற்கை அழகை இரசிக்கும் வகையிலும் பயணத்தை இலகுபடுத்தும் நோக்கிலும் பறக்கும் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இவ்வேலைத் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த சர்வதேச Air Space நிறுவனத்தின் தலைவர் ஷுகரேவ் செர்ஜி நிகோலாவிச்,

இலங்கையின் பல மாகாணங்களை ஒப்பிடும்போது, கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒன்றரை வருடமாக ஆளுநர் செந்தில் தொண்டமானால் கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் வளர்ச்சி பாதையை நோக்கி செல்வதை அவதானிக்க முடிந்தது. ஆளுநர் Air Ship சேவையை ஆரம்பிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அதற்கமைய கடந்த ஒரு மாத காலமாக எமது நிறுவனத்தின் அதிகாரிகள் இங்கிருந்து இவ்வேலைத்திட்டம் குறித்து ஆராய்ந்தனர். எங்களுடைய ஆய்வு அறிக்கையின்படி இவ்வேலை திட்டத்துக்கு நல்ல வரவேற்புள்ளதை அறிந்து air ship வேலைத்த்திட்டத்துக்காக முழுமையான முதலீடு செய்யவுள்ளோமென அவர் தெரிவித்தார்.

## அகில இலங்கை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், எமது தாய் நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காகவும் குடிமக்களது நல்வாழ்வுக்காகவும் அதிகம் பிரார்த்திப்போம், இறையுதவியைப் பெற்றுத்தரும் நற்கருமங்களில் எம்மை ஈடுபடுத்திக் கொள்வோம் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாதெரிவித்துள்ளது. ஜனநாயக நாடொன்றில் எவரும், எந்தக் கட்சியும் தேர்தலில் போட்டியிடலாம். தான் விரும்பும் வேட்பாளரை ஆதரிப்பது அவரவர் உரிமையாகும். இந்த தேசத்தின் குடிமக்களாகிய முஸ்லிம்கள் தமது வாக்குரிமையை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு போதும் வாக்களிப்பதில் அசிரத்தையுடன் நடந்து கொள்ளலாகாது.

தேர்தல் காலங்களில் குறிப்பாக, முஸ்லிம்கள் வார்த்தையளவிலோ செயலளவிலோ எந்தவொரு குற்றச் செயல்களிலும் ஈடுபடக்கூடாது. வதந்திகளைப் பரப்புதல், வீண் விதண்டாவாதம், சண்டை சச்சரவுகள், வன்செயல்களில் ஈடுபடுவது ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் என்பதைப் புரிந்து நடந்துகொள்ள வேண்டுமென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவித்துள்ளது.

## கிழக்கு மக்கள் தங்களது... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் பிரதேசத்தில் நேற்று(12) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் முடிவுற்றதும் மாகாணசபைத் தேர்தலையும் விரைவில் நடத்தி அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்தி வருகின்றார்.

கிழக்கு மக்கள் என்ன செய்யவேண்டும் என யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தரப்பினர் தீர்மானிக்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து சொல்வதைக் கேட்டுக்கொண்டு மக்கள் அழிவை நோக்கி நகர்வதா? அல்லது ஜனாதிபதியுடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தை அபிவிருத்தி செய்து அமைச்சுப் பதவி ஒன்றையும் பெற்றுக்கொள்வதா? என்பது தொடர்பாக மக்கள் சிந்தித்து செயற்படவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாவார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தை கட்டியெழுப்பும்போது, கிழக்கு மக்களும் அதில் பங்குதாரராக வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு 3 இராஜாங்க அமைச்சர்களை நியமித்துள்ளார். மாகாணசபைத் தேர்தலையும் விரைவில் நடத்தி அதிகாரபகிர்வுக்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென வலியுறுத்தி வருகின்றார்.

மக்கள் தமது எதிர்காலத்தை பாதுகாத்துக்கொள்ள எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச்செய்ய வேண்டும் என அவர் மேலும்கேட்டுக் கொண்டார்.

## இன்றைய பலன்கள்



**(05.08.2024)**

**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**



**மேஷம்:**
குடும்பத்தில் அமைதி நிலவும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். சில பணிகள் அலைக்கழிப்பை தரலாம்.



**ரிஷபம் :**
சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளிப் போகலாம்.



**மிதுனம்:**
கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம். அனேக காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கடகம்:**
உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். எதிர்பார்த்து காத்திருக்கும் பணவரவு தாமதமாகலாம்.



**சிம்மம்:**
கூட்டுத் தொழிலில் லாபம் குறைக்கலாம். சில காரியங்கள் நடைபெறாமல் தள்ளிப்போய் கவலை ஏற்படுத்தும்.



**கன்னி:**
முக்கியமான காரியங்களை கொஞ்சம் தள்ளிப் போடுங்கள். கூட்டுத் தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் ஏற்படலாம்.




**துலாம்:**
உத்தியோகத்தில் மற்றய பணியாளர்களின் சொந்த விஷயங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பணவரவுகளில் தடைகளை தவிர்க்க முடியாது.



**விருச்சிகம்:**
சில காரியங்களில் வெற்றி பெற நண்பர்களின் உதவி தேவைப்படும். சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கலாம்.



**தனுசு:**
கூட்டுத் தொழில் நன்கு நடைபெறக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான போக்கு காணப்படும். முயற்சிகளில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள்.



**மகரம்:**
சொந்தத் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கலாம். புதிய வாடிக்கையாளர் ஒருவரின் பணியை முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.



**கும்பம்:**
ஊழியர்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை செய்து கொடுப்பீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நல்ல லாபத்தை பெற்று தரும்.



**மீனம்:**
அவசர வேலை ஒன்றை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். வரவு செலவு சரிசமமாக இருக்கும்.

## இல்யாஸுக்கு.... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவை ஏற்படுத்தும் நோக்கில் fact seeker இது குறித்து ஆராய்ந்துள்ளது. இதன்போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

முஹம்மது இல்யாஸ் 1990ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

அதன்பின்னர் 2010, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டார்.

அதன்படி, நான்காவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட களமிறங்கிய முஹம்மது இல்யாஸ் கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி காலமானதையடுத்து, அவருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு, வேறொருவரின் பெயரை முன்மொழியுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. எனினும் அதற்கான கால அவகாசம் கடந்த செப்டெம்பர் 05 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவதாயின் அந்த வேட்பாளர், முன்னாள் அல்லது தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டுமென்பது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 31 (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1(1) ஜனாதிபதி பதவிக்கென தேர்ந்தெடுக்கக் கூடிய தகைமை கொண்ட எந்தப் பிரஜையும் (அ) அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியினால், அல்லது (ஆ) அவர், பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருப்பவராயின் அல்லது முன்னர் பதவி வகித்திருந்தால், வேறேதேனும் அரசியல் கட்சியினால் அல்லது ஏதேனும் தேர்தல் இடாப்பில் தமது பெயரைப் பதிந்துள்ளவரான ஒரு தேருநரால், அத்தகைய பதவிக்கான வேட்பாளராகப் பெயர் குறித்து நியமிக்கப்படலாம். தன்படி, முஹம்மது இல்யாஸின் வெற்றிடத்துக்கு முன்னாள் அல்லது தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்விடயம் தொடர்பாக மறைந்த முஹம்மது இல்யாஸின் மனைவி முகமது இல்யாஸ் ஜமீனாவிடம் fact seeker வினவிய போது, உரிய வெற்றிடத்திற்கு தனது பெயரை முன்மொழிந்ததாகவும், எனி னும் தேர்தல் சட்ட விதிமுறைகளுக்கமைய தனக்கு போட்டியிட முடியாத காரணத்தினால் தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கையை நிராகரித்ததாகவும் தெரிவித்தார்.

முன்னாள் அல்லது தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எமது தரப்பில் இல்லாத காரணத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு யாரையும் பரிந்துரைக்கவில்லை என ஜமீனா தெரிவித்தார்.

இது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கவிடம் fact seeker வினவிய போது, தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளரின் வெற்றிடத்துக்கு எவரையும் முன்னிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்பட்டாலும், ஒரு சுயேட்சை வேட்பாளரின் வெற்றிடத்தை முன்னாள் அல்லது தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரால் மட்டுமே நிரப்ப முடியும் என்றார். வாக்குச் சீட்டுகள் ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளதாகவும், ஐதுரூஸ் முஹம்மட் இல்யாஸின் பெயர் வாக்குச் சீட்டிலிருந்து நீக்கப்படமாட்டாதெனவும் குறிப்பிட்ட அவர், எவ்வாறாயினும் ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸுக்கு கிடைக்கும் வாக்குகள் அல்லது விருப்பு வாக்குகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்ட வாக்குகளாக அமையுமெனவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். கவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வாக்குச்சீட்டில் ஊசி சின்னத்துடன் ஐதுரூஸ் முஹம்மது இல்யாஸ் என்ற அவரது பெயர் இடம்பெற்றுள்ளது என்பதையும் அவருக்கான வாக்குகள் அல்லது விருப்பு வாக்குகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்ட வாக்குகளாக அமையும் என்பதையும் fact seeker பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

## இரண்டு யுவதிகள்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் உள்ளிட்ட இரு யுவதிகளும் கொழும்பு புதுக்கடை இலக்கம் 02 நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், எதிர்வரும் 25ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் பேமரத்ன, பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மங்கள தெஹிதெனியவின் பணிப்புரைக்கமைய, பொலிஸ் பரிசோதகர் உபுல் கல்வல, நிதி குற்ற விசாரணை பிரிவின் இலக்கம் இரண்டின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எல்பிட்டிய பிரதேச... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் கட்சி மற்றும் இரண்டாம் தலைமுறை கட்சி சார்பில் தலா இரண்டு வேட்பாளர்கள் என நான்கு பேரின் பெயர்களும் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கித்துள் செய்கை நம் நாட்டில் தப்பிப் பிழைத்துள்ளது

(அக்குறணை குறூப் நிருபர்)



பலாமரம் சார்ந்த உணவுகள் வீணடிக்கப்பட்டாலும், கித்துள் செய்கை நம் நாட்டில் தப்பிப் பிழைத்துள்ளதாக விவசாயத் திணைக்கள பிரதி பணிப்பாளர் எச்.ஆர்.பி.பெர்னான்மோ தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கித்துள் உற்பத்திகள் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் கருத்து தெரிவிக்கையில்,

பலாப்பழம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உணவு வகைகளை நாம் முறையாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால் வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளில் வியக்கத்தக்க வகையில் அவை பதனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு பொதுமக்களுக்கு உணவாக விற்பனை செய்யப்படுகின்றன. அதற்கென அந்நாடுகளில் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மரத்திலான உணவுகளும் அதன் பயன்களும் ஓரளவு நம் நாட்டில் தப்பிப் பிழைத்துள்ளது. அதேபோல் தமது நாட்டிலும் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுத்தால் பொருளாதார நன்மைகளும்.

முதலீடுகளும் பல நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விழாவில் தெரிவு செய்யப்பட்ட 40 உற்பத்தியாளர்களும் குறிப்பிட்ட சில பாடசாலைகளும் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

# யானை தாக்கி ஒருவர் மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கிராமத்திற்குள் நுழைந்த காட்டு யானைகளை விரட்ட முயற்சித்த நபர் யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

காட்டுயானைகளுக்கு பயந்து இரவு பாதுகாப்பான இடத்தில் இருந்து விட்டு காலையில் யானைகளை காட்டுக்குள் விரட்ட முயற்சித்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

48 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இக்கிராமத்தினுள் அடிக்கடி யானைகள் வந்து அட்டகாசம் செய்து வருவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழக நூலகத்தில் 'இந்திய கலரி'




(அக்குறணை குறூப் நிருபர்)

சப்ரகமுவ பல்கலைக்கழக நூலகத்தில் 'இந்திய கலரி' (இந்தியப் பிரிவு) ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை கலாசார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நிகழ்வுகளில் ஒன்றாக சப்ரகமுவ பல்கலைக்கழக நூலகத்தில் 'இந்திய கலரி' (இந்தியப் பிரிவு) ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கண்டி உதவி இந்தியத் தூதுவர் டொக்டர் எஸ். ஆதிரா மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம். சுனில் சாந்த ஆகியோர் இணைந்து இந்தியப் பிரிவை திறந்து வைத்தனர்.

இதில் பல்கலைக்கழக பிரதானிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கட்சிக்கும் பொதுமக்களுக்கும் துரோகம் செய்தவர்கள் தேர்தலின் பின்னர் ஓடி ஒளிய நேரிடும்

மனோ கணேசன் எம்.பி

(அக்குறணை குறூப் நிருபர்)





கட்சித் தலைவர்களுக்கும் பொது மக்களுக்கும் துரோகம் செய்தவர்கள் 21ஆம் திகதியின் பின்னர் ஓடி ஒளிவார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்தார்.

கண்டி, குண்டசாலை ரோயல் கிளசிக் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எமது கட்சியில் பதவிகள் வழங்கப்படும் போது இளைஞர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் இடம்கொடுக்கும் படி அநேகர் கேட்டுக் கொண்டனர். ஆனால் அரசியலில் தகுதியாக அவற்றை எடுத்துக் கொள்ள முடியாது. வயது என்பது வெறும் இலக்கமாக மட்டுமே உள்ளது. வாழ்க்கை என்பது தொழிற்பாடாகும். எனவே வயதல்ல முக்கியம். பட்டம் பதவியல்ல முக்கியம். இன்று தேவைப்படுவது நேர்மை, அர்ப்பணிப்பு, நம்பிக்கை பொறுமை, மாற்று மொழி அறிவு, சுறுசுறுப்பு போன்றவையே. இன்று நாட்டில் எந்தக்கட்சியை எடுத்தாலும் அதில் சிலர் கட்சி தாவித்தான் உள்ளனர்.

வடக்கு, கிழக்கில் யார்? எந்தக் கட்சி என்று தெரியாமல் உள்ளது. அரசர் போல் ஆட்சி நடத்தி அரசு குமாரர்களை உருவாக்கியவர்கள் கூட இன்று ஒதுங்க இடமில்லாது உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது கண்டி மாவட்டத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் வெற்றிடமாக்கப்பட்ட தொகுதி மற்றும் வட்டார அமைப்பாளர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டன.

# இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளராக கியாஸ் சலாம் நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளராகவும் மாவட்ட முஸ்லிம் அமைப்பாளராகவும் சமூக செயற்பாட்டாளர் கியாஸ் சலாம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் உத்தியோகபூர்வமாக வழங்கிவைத்தார். (படம்: இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

# ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் மாத்தளையில் தேர்தல் பிரசார காரியாலயம்



(மாத்தளை சுழற்சி நிருபர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் இயலும் ஸ்ரீ லங்கா தேர்தல் பிரசார காரியாலயம் மாத்தளை வடக்கு பகுதியில் (12) நேற்று திறந்து வைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க இதனை திறந்து வைப்பதையும் அருகில் மாத்தளை தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் உஜித் அனுராத யடவத்த, பிரதேசசபையின் முன்னாள் தலைவர் லால்அத்தநாயக, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் பராக்கிரமதிசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டு வைபவ ரீதியாக காரியாலயத்தை திறந்து வைத்தனர்.

# புனித அந்தோனியார் கல்லூரியில் மாணவர் ஆலோசனை வழிகாட்டலுக்கான புதிய கட்டடம் திறப்பு

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட பிளக்பூல் புனித அந்தோனியார் கல்லூரியில் மாணவர் ஆலோசனை வழிகாட்டலுக்கான புதிய கட்டடமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் ஜி.ஜெயகாந்த் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் இக்கட்டடம் அமைக்க நன்கொடை வழங்கிய 'PR AID PR' நிறுவனத்தின் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர்.

'PR AID PR' என்ற குடும்ப தன்னார்வ தொண்டு நிறுவனம் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு உதவிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.



மேலும் இந்த நிகழ்வில் நுவரெலியா கல்வி வலய ஆலோசனை வழிகாட்டாளர் திருமதி. பி.மங்கலேஸ்வரி, வளவாளர் பி.விஜயகுமார் ஆகியோருடன் "PR AID PR" நிறுவன முக்கியஸ்தர்களான எண்டன் சுரேஸ் மரியாம்பிள்ளை (யூகே) மற்றும் ஜூட் மெலின் டாஸ் பிலீப் (கனடா) ஆசிரியை ரொசிட்டா பிரியதர்ஷினி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# சுண்ணாம்புக்கல் நீரூற்றை பார்வையிட அனுமதிக்குமாறு கோரிக்கை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை ரஜவக்க சுண்ணாம்புக்கல் இயற்கை நீரூற்றை மீண்டும் பொது மக்களின் பார்வைக்கு திறந்துவிடுமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். குறிப்பாக உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு இதை பார்வையிட அனுமதிக்குமாறும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

உல்லாசப் பொழுதைக் கழிக்க வரும் சில இளைஞர்கள் மற்றும் குழுக்களால் இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்கள் காரணமாக இப்பிரதேசத்தில் பொது மக்கள் நுழைவதற்கு பலாங்கொட பிரதேசசபை தடை விதித்துள்ளது. எனினும் இந்த இயற்கை வளம் மிக்க நீரூற்றை கண்டு கழிக்க பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், உல்லாசப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்ற போதிலும் இப்பிரதேசம் பலாங்கொடை பிரதேசசபையால் தொடர்ந்து மூடப்பட்டு வருகிறது.

# கழுத்து நெரித்து கொல்லப்பட்ட நிலையில் சிசுவின் சடலம்!

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

லிந்துலை, என்போல்ட் தோட்டத்தில் எல்.ஜி. பிரிவில் சடலமாக மீட்கப்பட்ட சிசு, பிறந்த கையோடு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

குறித்த தோட்டத்தில் வீடொன்றுக்கு முன்னாள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோவில் இருந்தே கடந்த 10 ஆம் திகதி சிசுவின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய ஆட்டோ சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது மாவனல்லை பகுதியிலிருந்து தமது தோட்டத்துக்கு வந்திருந்த பெண்ணொருவரின் கைப்பையே இது என அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய 24 வயதான பெண் கைது செய்யப்பட்ட, விசாரிக்கப்பட்டார். தனக்கும், குறித்த ஆட்டோ சாரதிக்கும் இடையில் இருந்த தகாத உறவு காரணமாகவே குழந்தை பிறந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மாவனல்லை பகுதியில் தான் வேலை செய்யும் வீட்டில் வைத்து கடந்த 5 ஆம் திகதி குழந்தை பிறந்துள்ளதாகவும், தனது சகோதரியின் உதவியுடன் குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சடலத்தை புதைப்பதற்காகவே ஆட்டோவில் அதனை அக்கரபத்தனை பகுதிக்கு எடுத்துவந்ததாகவும் பொலிஸாரிடம் அப்பெண் வாக்குமூலமளித்துள்ளார். அதிகாலை வேளையில் சடலத்தை அடக்கம் செய்வதற்கு திட்டமிட்டிருந்ததாகவும், அதற்குள் சடலத்தை ஒருவர் கண்டு அக்கம், பக்கத்திருக்கு தகவல் வழங்கியதால் அதனை செய்யமுடியாமல் போனதாக ஆட்டோ சாரதி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் பொலிஸ் பாதுகாப்புடன்நுவரெலியாவைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றார். இப்பெண்ணையும், ஆட்டோசாரதியையும் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# மலையக சாசனம் அமுலுக்கு வந்த பிறகு சமூக மாற்றம் நிச்சயம் ஏற்படும்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

மலையக மறுமலர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட மலையக சாசனத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் அமுலுக்கு வந்த பிறகு எமது சமூகம் நிச்சயம் மாற்றத்தை நோக்கி நகரும் என பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார். வளமான எதிர்காலத்துக்காக பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று பாரத் அருள் சாமியின் ஏற்பாட்டில் கண்டி குயின்ஸ் விருந்தகத்தில் நடைபெற்றது.



இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி வர்த்தக சமூகத்துடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார். வங்குரோத்து நிலையில் இருந்த எமது நாட்டு பொருளாதாரத்தை ஜனாதிபதி மீட்டுள்ள நிலையில், இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு வர்த்தக பிரமுகர்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை உரிமையாளர்கள் உள்ளிட்டோர் ஒன்றிணைய வேண்டும் என இதன்போது அழைப்பு விடுக்கப்பட்டது. நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கும், ஏற்றுமதிக்கும் பங்களிக்கும் வர்த்தக பிரமுகர்கள் எதற்காக ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் விளக்கமளித்துள்ளார். அத்துடன், ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டம் பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

அதேவேளை மலையக சாசனத்தின் ஊடாக ஏற்படுத்தப்படவுள்ள மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் வர்த்தக சமூகத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் விளக்கமளித்தார்.




# கிழக்கின் குரல்



# ஜனாதிபதி ரணில் அம்பாறையில் பிரசாரம்







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (11) அம்பறை மாவட்டத்தின் திருக்கோவில் மற்றும் கல்முனை, சாய்ந்தமருது பகுதிக்கு விஜயம்செய்து "இயலும் ஸ்ரீலங்கா " வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டார். இப் பேரணிகளின் போது, ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவித்தனர்.

### வாக்களிப்பது எப்படி?

## அம்பாறை மாவட்டத்தில் பரவலாக சுவரொட்டிகள்




*காரைதீவு குறூப் நிருபர்*

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி? என்பது தொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகள் அம்பாறை மாவட்டத்தில் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன.

வடக்கு , கிழக்கு ஒருங்கிணைப்புகுழுவினால் இவை ஒட்டப்பட்டு வருகின்றன.

அனைவரும் வாக்களிக்க செய்யும் வகையிலும் அத்தோடு முறையாக இம்முறை எவ்வாறு வாக்களிப்பது எனும் விடயங்கள் அடங்கிய சுவரொட்டிகளே இவை. அம்பாறை மாவட்டத்தில் தற்போது பரவலாக சகல பகுதிகளிலும் மேற்படி விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாக அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் து. காத்தவராயன் ( காந்தன்) தெரிவித்தார்.

# கிழக்கு அரசியல்வாதிகள் அமைச்சுகளை பெறுவது ரவூப் ஹக்கீமுக்குப் பிடிக்காது

### ஆளுநர் நஸீர் அஹமட் ஆதங்கம்

*புதிய காத்தான்குடி தினகரன், மாளிகைக் காடு குறூப் நிருபர்கள்*

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்குள்ள கவலை இந்த சமூகத்தைப் பற்றியதோ நாட்டு மக்களைப் பற்றியதோ அல்ல. அவருக்குள்ள பிரச்சினை கிழக்கு மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகள் எவருமே அமைச்சுப் பதவிகளைப் பெறக்கூடாது என்பதேயாகும் என வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் விசனம் வெளியிட்டார். எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் றவூப் ஹக்கீம் நிற்கும் அணி படுதோல்வி அடையும் எனவும் அவர் கூறினார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஏறாவூரில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். அங்கு அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா, பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம். முஷர்ரப் உட்பட இன்னும் பல அரசியல் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.



அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர் நஸீர் அஹமட், உற்பத்தித்திறன் அமைச்சராக பஷீர் சேகுதாவூத் அமைச்சைப் பாரமெடுத்தபோது அதனைப் பொறுத்துக் கொள்ளாத ரவூப் ஹக்கீம், பஷீர் சேகுதாவூதை கட்சியிலிருந்து நீக்கி விட்டார். நான் சுற்றாடல்துறை அமைச்சராகப் பதவியேற்றபோது என்னையும் கட்சியிலிருந்து நீக்கி விட்டார். சமீபத்தில் அலிஸாஹிர் மௌலானா அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்தபோது அவரையும் கட்சியிலிருந்து நீக்கி விட்டார், ஆக இவரது பிரச்சினை இந்த முஸ்லிம் சமூகத்தைப் பற்றியதோ நாட்டைப் பற்றியதோ அல்ல. கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமைகள் அமைச்சுப் பதவிகளையும் அதிகாரங்களையும் பெறக்கூடாது என்பதேயாகும்.

இப்படிப்பட்ட குறுகிய நோக்கமுள்ள ஒருவர் இந்த சமூகத்தின் தலைவராக எப்படி இருக்க முடியும்? எப்படி சமூகம் சார்ந்த தீர்மானங்களை எடுக்க முடியும்? தூர நோக்கற்ற, சமூகத்தைப் பற்றிச் சிந்திக்காத, சாணக்கியமற்ற தலைவர்தான் இந்த ரவூப் ஹக்கீம். சாணக்கியமற்ற தலைவன் ஹக்கீமின் தீர்மானங்களை முஸ்லிம் சமூகம் நம்பி ஏமாந்து விடக்கூடாது.

அஷ்ரப் மறைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக றவூப் ஹக்கீம் பொறுப்பெடுத்துக் கொண்டதிலிருந்து இன்றுவரை உள்ள காலகட்டம் வரை இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் ரவூப் ஹக்கீம் ஆதரவளித்த அணி படுதோல்வியைத்தான் சந்தித்து வந்திருக்கின்றது.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நின்று ஹக்கீம் பிரசாரம் செய்த வேளையில் மஹிந்த ராஜபக்ஷவே வெற்றி பெற்றார்.2009 ஆம் ஆண்டு யுத்தத்தை வென்றெடுத்து சிங்கள மக்களின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷ போற்றப்படுகின்ற வேளையிலே முஸ்லிம் சமூகத்துக்கு உபத்திரவம் செய்த சரத் பொன்சேகாவை அறிமுகப்படுத்தி சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து பிரசாரம் செய்த ரவூப் ஹக்கீம் அதிலும் தோற்றார். எனவே, அவரது தலைமையின் கீழ் அவர் எடுத்த எல்லா முடிவுகளும் இந்த சமூகத்தை நிர்க்கதியாக்கிய தாகத்தான் அமைந்தது என்றார்.

## மட்டக்களப்பில் 11 கைதிகள் விடுதலை

*கல்லடி குறூப் நிருபர்*

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 350 கைதிகள் ஜனாதிபதியின் விசேட அரச பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கு அமைவாக மட்டக்களப்பு சிறையிலிருந்து 11 ஆண் கைதிகள் நேற்று (12) பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் இக்கைதிகள் நேற்று காலை 10.30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர். சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் ஏ.பி. வானுக தயான் உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகளும் இதன்போது கலந்துகொண்டனர்.

சிறுகுற்றங்கள் புரிந்ததன் அடிப்படையில் தண்டனை பெற்றுவந்த கைதிகளே இவ்வாறு பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

## கிழக்கில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணிகள்

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தேர்தல் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் பிரசார விடயங்கள், போன்றவற்றை தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு பணிகள் தற்போது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அக்குழு மட்டக்களப்பு மாவட்டத்திலும் முன்னெடுக்கப்படுகின்ற பிரதான வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் கண்காணிப்புக்கு குழுவினர் நேரடியாக விஜயம் செய்து தேர்தல் பிரசார செயற்பாடுகள் பொது மக்களின் பங்களிப்பு, ஊடகங்களின் சுதந்திர செயற்பாடு, சம்பந்தமான விடயங்களை தற்போது ஆராய்ந்து வருகின்றனர்.



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு நீண்டகால தேர்தல் நோக்கு மேற்பார்வையாளர் சிசிலியா கிவேணி தலைமையில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் தேர்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான பணிகளை அவர் பார்வையிட்டார்.

## சஜித் பிரேமதாசவை ஆதரித்து கல்முனையில் பிரசாரக் கூட்டம்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து கல்முனையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கல்முனை தேர்தல் காரியாலய திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றது.



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் வழிகாட்டலில் முன்னாள் கல்முனை மாநகர பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் கல்முனை காசிம் வீதியில் உள்ள இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீத், பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம். எம்.ஹரீஸ்,பைசால் காசிம்,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம் மன்சூர், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் ஏ.எம்.ரகீப், ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை அமைப்பாளர் சட்டத்தரணி ஏ.எம்.ரசாக்,கல்முனை மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள்,முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள்,கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் இளைஞர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

**எம்.என்.எம்.அப்ராஸ்**

## தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைப்பு

*நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்*

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களுக்கான கடிதங்கள் உதவித்தேர்தல் ஆணையாளரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான கசுன் எஸ் அத்தநாயக்க வினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு சட்டத்தின் 104 ஏ. வது உறுப்புரையின் பிரகாரம் ஏதாவது நியாயமான காரணம் தவிர தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் தேர்தல் ஏற்பாடுகளுக்கமைய நடக்கத் தவறும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்தை கொண்ட சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணமும் சிறைவாசமும் அனுபவிக்க வேண்டுமெனவும் அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருமான சிந்திக்க அபேவிக்கிரம அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று நிலைய உத்தியோகத்தர் பிற்பகல் இரண்டு மணிக்கு அறிக்கை இட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு நிலையத்திற்கு போவதற்கான போக்குவரத்து விபரங்களும் உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து திருமலையில் தெளிவூட்டல் நிகழ்வு

*கிண்ணியா மத்திய நிருபர்*

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி, பிரசைகளால் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை உள்ளூர் அரசியல்வாதிகளுடன் பகிர்ந்து கொள்ளல் எனும் கருப் பொருளில் நிகழ்வொன்று கடந்த திங்கள் (10) திருகோணமலை, உப்புவெளி தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




இதன் போது, அரசியல்வாதிகளின் தேர்தல் விஞ்ஞாபனம் என்றால் என்ன? பிரசைகளின் தேர்தல் விஞ்ஞாபனம் என்றால் என்ன? போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதன் வளவாளர்களாக, கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மது புஹாரி மற்றும் சட்டத்தரணி எம். எம். அசாட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## புதிய வளத்தாப்பிட்டியில் சஜித்தின் தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு

*காரைதீவு குறூப் நிருபர்*



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் பிரசார அலுவலகம் அம்பாறை புதிய வளத்தாபிட்டியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளர் வெ. வினோகாந்த் தலைமையில் திறந்து வைக்கப்பட்ட இவ் வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை நகர சபை, பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள் உட்பட புதிய வளத்தாபிட்டி, பழைய வளத்தாபிட்டி, பளவெளி, மல்வத்தை போன்ற கிராமங்களைச் சேர்ந்த ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# காருண்ய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள்



இஸ்லாத்தில் கருணை, அன்பு, இரக்கம் தொடர்பில் குறிப்பிடப்படுகின்ற அறிவுரைகளையும், வழிகாட்டல்களையும் உற்றுநோக்கும் போது ஒரு மனிதனுடைய ஈடேற்றத்துக்குரிய ஆணிவேராக அவை பார்க்கப்படுகின்றன. அன்பும், கருணையும் இல்லையென்றால் அவன் இஸ்லாமியனாக இருக்க முடியாது. இதனை பின்வரும் நபிமொழி மூலம் புரிந்து கொள்ளலாம்.

'உங்களில் ஒருவர் அவருடைய குழந்தை, பெற்றோர், உலக மனிதர்கள் அனைவரை விடவும் நான் நேசத்திற்குரியவராக இல்லையென்றால் அவர் ஈமான் கொண்டவராக மாறமுடியாது'.

இந்நபிமொழி ஒரு மனிதனது ஈமான் நபி (ஸல்) அவர்கள் மீது அவர் வைத்திருக்கின்ற அன்பை வைத்து அளவிடப்படுகின்றது என்பதை தெளிவுபடுத்துகிறது.

இவ்வுலக வாழ்வு அருள் நிறைந்ததாகவும் மகிழ்ச்சியானதாகவும் மாற வேண்டுமெனில் பூமியிலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பையும், இரக்கத்தையும் பரிமாறி கருணை உள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும். ஒருவருக்கொருவர் இரக்கத்தோடும் கருணையோடும் வாழ்கின்ற போது அவர்கள் மீது அல்லாஹ் அவனது கருணையைப் பொழிகின்றான்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'இரக்கம் காட்டக் கூடியவர்கள் மீது கருணையாளனாகிய அல்லாஹ் இரக்கம் காட்டுகின்றான். பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள். வானில் உள்ளவர்கள் உங்கள் மீது இரக்கம் காட்டுவார்கள்' என்று கூறினார்கள். (ஆதாரம்: சுனன் அத் திர்மிதி)

இந்நபிமொழியின் மூலம் இரக்கம் காட்டுவதற்கும், கருணை கொள்வதற்கும் இனம், மதம், மொழி என்ற எந்த அடையாளமும் தேவையில்லை என்பதை நபி (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். 'பூமியில் உள்ளவர்கள் மீது' என்று பொதுப்படையாகவே கூறியுள்ளார்கள். குறிப்பிட்ட ஒரு சாராரை நபி (ஸல்) அவர்கள் முற்படுத்தவில்லை. உயிரினங்களுக்கிடையில் அன்பு காட்டுவதில் எவ்வித பாகுபாடோ, பக்கச்சார்போ இல்லாத நிலையில் சமநிலை பேணி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் இஸ்லாம் பணிக்கிறது. எதிலும் எல்லை மீறிச் செயல்படுவதையோ அல்லது பொடுபோக்காக செயல்படுவதையோ இஸ்லாம் வன்மையாக கண்டிக்கிறது.

அல்லாஹ் அவனது திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் '(நபியே) உம்மை அகிலத்தாருக்கு அருட்கொடையாகவேயன்றி நாம் அனுப்பவில்லை'.

(சூரா அல் அம்பியா:107)

மற்றொரு வசனத்தில் '(விசுவாசிகளே..)! உங்களிலிருந்து திட்டமாக ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார், (உங்களுக்கு யாதொரு துன்பமும் ஏற்பட்டு) நீங்கள் கஷ்டப்படுவது அவருக்கு மிக வருத்தமாக இருக்கும். அவர் உங்கள் மீது மிக்க பேராசை கொண்டவர் விசுவாசிகளோடு மிக இரக்கமுள்ளவர்' (சூறா அத் தவ்பா:128) என்றும் குறிப்பிட்டுள்ளான்.

இவ்விரண்டு வசனங்களிலும் நபி (ஸல்) அவர்களது கருணையின் கனதியையும், அதன் எல்லையும் மிகத் தெளிவாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான். 'றஹ்மதுல்லில் ஆலமீன்' என்ற வாசகத்திலிருந்து, அவர் மனித குலத்திற்கு மாத்திரமல்ல இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து படைப்புகளுக்கும் 'ரஹ்மத்' கருணையாக அனுப்பப்பட்டுள்ளார் என்பது புலனாகின்றது. இதை நிரூபணம் செய்யும் வகையில் தான் அவரது முழு வாழ்வுமே அமைந்திருந்தது. கருணையின் மறு உருவாக வாழ்ந்ததால்தான் மிகக் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் இவ்வுலகமே வியந்து பார்க்க கூடியளவு உன்னதமான ஒரு சமூகத்தை உருவாக்க கூடியதாக இருந்தது.

கருணை நபி (ஸல்) அவர்கள் மற்றவர்களோடு தொடர்புபடுகின்ற போது எவ்வளவு ஆழமான அன்போடும் கருணையோடும் நடந்துள்ளார்கள் என்பதை தெளிவுபடுத்துகின்ற ஓர் நிகழ்வை அனஸ் (ரலி) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

'நாங்கள் எல்லோரும் நபி (ஸல்) அவர்களுடன் மஸ்ஜிதுந் நபவியில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அப்பொழுது நாட்டுப்புற அரபி ஒருவர் அங்கு வந்து பள்ளி வாசலுக்குள் சிறுநீர் கழிக்க ஆரம்பித்து விட்டார். இதனை கண்ணுற்ற நபித்தோழர்களில் சிலர் வெறுப்போடு அந்த மனிதனை விரட்ட ஆரம்பிக்கிறார்கள். இதனை கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள் அவரை விட்டு விடுங்கள் என்றார்கள். அவர் முழுமையாக சிறுநீர் கழித்து முடியும் வரை விட்டு விட்டார்கள். பின்பு நபி (ஸல்) அவர்கள் அவரை அழைத்து பள்ளிவாயல்கள், சிறுநீர் கழிப்பதற்கோ, அல்லது சுத்தமற்ற வேலைகள் செய்வதற்கோ உகந்த இடங்கள் அல்ல. மாறாக அல்லாஹ்வை ஞாபகம் செய்வதற்கும், தொழுகையை நிலைநாட்டுவதற்கும், குர்ஆனை ஓதுவதற்குமான இடம் மட்டும் தான் என்பதாகக் கூறினார்கள். பின்பு அங்கிருந்தவர்களில் ஒருவரை தண்ணீர் வாளி ஒன்றைக் கொண்டு வந்து அந்த இடத்தில் ஊற்றி சுத்தம் செய்து விடும்படி வேண்டிக் கொண்டார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் முஸ்லிம்)

கருணை நிறைந்த உள்ளங்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நபி (ஸல்) அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்விலிருந்து மிகவும் தத்ரூபமாக வெளிப்படுத்தி காட்டியுள்ளார்கள். எந்த ஒரு தனிமனித, சமூக வாழ்விலும் எவ்வகையான பாதிப்போ, சங்கடமோ ஏற்படா வண்ணம் வாழ்வை வசந்தமாக்கவல்ல ஒரு அழகிய ஆயுதம் தான் அன்பு, கருணை என்பதை உலக மாந்தருக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஒரு சராசரி மனிதனால் எவ்வகையிலும் சகித்துக்கொள்ள முடியாத நிகழ்வு தான் மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வு. ஆனாலும் தனி மனிதனின் மானம், கௌரவம், நலன்கள் அனைத்தும் முறையே பேணப்பட்டு, அவனது அறியாமையின் காரணமாக அல்லது அவனது மரபு கலாசாரத்தைத் தழுவி பிற சூழலுக்கும் நாகரிகத்துக்கும் முரணாக அவனிலிருந்து வெளிப்படுகின்ற செயற்பாடுகளை முறையே அணுகி நெறிப்படுத்துவதுதான் கருணையின் இயல்பு என்பதை நபி (ஸல்) அவர்கள் எமக்கு கற்றுத்தந்துள்ளார்கள்.

இவ்விடயத்தில் சாதி, இனம், மதம், மொழி என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் அனைத்து படைப்பினமும் கருணையுடன் நடாத்தப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும். அபூ ஹுறைரா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவித்திருக்கிறார்கள், 'ஒரு மனிதன் கால்நடையாக பயணித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவனுக்கு தாகம் ஏற்பட்டு ஒரு கிணற்றுக்குச் சென்று அதிலிருந்து தண்ணீர் அருந்தி விட்டு வரும் வழியில் ஒரு நாய் கடுமையான தாகத்தின் காரணமாக மண்ணை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அப்போது அம்மனிதர் எனக்கு ஏற்பட்ட அதே நிலைதான் இந்நாய்க்கும் ஏற்பட்டிருக்கிறது என்று கூறியவராக தனது காலில் இருந்த காலுறையை கழட்டி அதை தண்ணீரில் நனைத்து அந்த நாய்க்கு நீர் புகட்டி விட்டு இக்கருமத்தை செய்வதற்கான சந்தர்ப்பத்தை தந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார். அல்லாஹ் அவரை மன்னித்து விட்டான். அதற்கு அங்கிருந்த நபித்தோழர்கள் அல்லாஹ்வின் தூதரே இவ்வாறு மிருகங்கள் விடயத்தில் (கருணை காட்டுவதிலும்) எங்களுக்கு நன்மை இருக்கின்றதா? எனக் கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உயிருள்ள ஈரலிப்பான ஒவ்வொரு பொருளிலும் கருணையோடு நடந்து கொள்வதற்கு கூலி இருக்கிறது' என்றார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் அல் புஹாரி). அதனால் ஒரு சமூகம் மனிதப் பண்பாடும் நாகரிகமும் கொண்ட சமூகமாக மாற வேண்டுமெனில் அச்சமூகத்தில் அன்பும் கருணையும் நிறைந்த மனிதர்கள் உருவாக்க வேண்டும். மனிதர்கள் தொடர்புபடுகின்ற ஒவ்வொரு விடயத்திலும் கனிவும், கசிவும், இனிமையும், இங்கிதமும் இருக்க வேண்டும். இது ஒரு பிராணியை அறுப்பதாக இருந்தாலும் சரியே என்ற இஸ்லாத்தின் உயரிய வழிகாட்டலை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு இயம்புகிறார்கள்.

'நிச்சயமாக அல்லாஹுதஆலா ஒவ்வொரு வஸ்தும் கருணையுடன் நோக்கப்பட வேண்டும் என்பதை கடமையாக்கியுள்ளான். எனவே நீங்கள் (பிராணிகளை) அறுக்கும் போது கருணையை கடை பிடியுங்கள், (பிராணிகளை அறுக்க முற்படுபவர்) கத்தியை நன்றாகக் கூர்மையாக்கி, அறுக்கப்படும் பிராணியை ஆற்றுப்படுத்தவும்.'

(ஆதாரம்: ஸஹீஹுல் முஸ்லிம்)

ஒரு மனிதன் பிற மனிதர்களோடும், ஏனைய படைப்பினங்களோடும் தொடர்புபடுகின்ற போது, அவன் கைக்கொள்ள வேண்டிய மிகப் பிரதானமான அடிப்படைகளில் ஒன்றாகக் கருணையை, அன்பை இஸ்லாம் அடையாளப்படுத்தியுள்ளது. அதற்கு மேற்குறிப்பிடப்பட்ட நபிமொழியே போதுமானது. நபி (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய வெற்றிகரமான சமூகப்புரட்சிக்கு ஆணிவேராக அமைந்தது அன்பும், கருணையுமே ஆகும்.

எனவே இனம், மதம், மொழி என்ற அனைத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் 'அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பத்தினர்' என்ற நபிமொழியை அளவுகோலாகக் கொண்டு செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும், யுத்தமற்ற, மோதல்கள் அற்ற அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த உலகை காணலாம்.

கலாநிதி, அல்ஹாபிழ்
**எம்.ஐ.எம். சித்தீக்...**
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# புன்னகையும் நகைச்சுவையும் கலந்த நபிகளாரின் வாழ்வு



இஸ்லாத்தின் இறுதித்தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியாக இருப்பதைப் போல நகைச்சுவை, விளையாட்டு கலந்த இயல்பான வாழ்க்கைக்கும் சிறந்த வழிகாட்டுதலை வழங்கியுள்ளார்கள்.

''புன்னகை பூப்பதும் ஓர் அறமே!'' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இது மிக எளிதான, எவரும் அன்றாடம் செய்யக்கூடிய ஓர் சிறந்த அறச் செயலாகும். இதற்கு எந்தச் செலவும், உழைப்பும் தேவையில்லை. இதற்குத் தேவைப்படுவது மனித நேயம் மாத்திரமேயாகும். நம்மில் பலருக்கும் முகத்தில் எளிதாக புன்னகை வந்து விடுவதில்லை. சந்திக்கும் மனிதர்களின் பதவி, செல்வம், புகழ் ஆகியவற்றைக் கணக்குப் போட்டுப் பார்த்து, பலத்த யோசனைக்குப் பிறகு புன்முறுவல் பூப்பார்கள். தம்மை விட அந்தஸ்தில் குறைந்தவர்களைப் பார்த்து எளிதில் சிரித்து விட மாட்டார்கள். நகைச்சுவையாகப் பேசுவதும் இல்லை. ஆனால் மனித நேயம் கொண்டவர்கள், எவரைப் பார்த்தாலும், எவ்வித தயக்கமும் இல்லாமல் புன்னகை புரிவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் ஆன்மிகத் தலைவர், ஆட்சியாளர், படைத்தளபதி, தத்துவஞானி எனப் பல பரிமாணங்களைக் கொண்டிருந்தாலும், எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், கலகலப்பாகவும் காணப்படக்கூடியவராக இருந்துள்ளார்கள்.

''நபிகளாரின் வாழ்வு புன்முறுவல் கலந்த ஒன்றாக இருந்தது. வளத்திலும் வறுமையிலும், இன்பத்திலும் துன்பத்திலும், வீட்டிலும் வெளியிலும், பிரயாணத்திலும் போரிலும், பள்ளிவாயிலிலும் ஏன் நோயில் வீழ்ந்திருந்த போதிலும் கூட எல்லா நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் நபிகளார் சிரிக்க மறந்ததில்லை'' என நபித்தோழர் அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: பைஹகி)

வெள்ளிக் கிழமைகளில் பள்ளிவாயிலில் நபிகளார் உணர்ச்சியோடு உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோதிலும், அதை இடை மறித்து கோரிக்கை வைத்தவருக்கு பதிலளித்தது மாத்திரம் அல்லாமல் புன்னகைக்கவும் செய்திருக்கிறார்கள் என்று அனஸ் பின் மாலி (ரழி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நபி(ஸல்) அவர்கள் இறக்கும் தறுவாயிலும் புன்னகை பூப்பவராக இருந்தார்கள். நபிகளார் நோயுற்றிருந்த காரணத்தினால் அவரது இறுதி நாட்களில் பள்ளிவாயிலுக்குச் சென்று தொழுகை நடத்த முடியாமல் போகவே, தனது நெருங்கிய தோழரான அபூபக்கர் (ரழி) அவர்களை தொழுகைக்குத் தலைமை தாங்கி நடத்துமாறு பணித்திருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் திங்கட்கிழமை அன்று முற்பகலில் மரணம் அடைந்தார்கள். அதே நாளில் வைகறைத் தொழுகையை மக்கள், அபூபக்கர் (ரழி) அவர்கள் தலைமையில் தொழுவதைத் தமது அறையில் இருந்து பார்த்து ஆனந்தமாக சிரித்தார்கள்.

இவ்வாறு வாழ்வில் எல்லாத் தருணங்களிலும் புன்னகை பூத்தவராகவே இருந்த மாமனிதர் தான் நபி(ஸல்) அவர்களாவர்.

பொதுவாக தலைவர்களும், அறிவு ஜீவிகளும் எப்போதும் அழுத்தமாகவே இருக்க வேண்டும் என்று ஒரு எண்ணம் நம்மிடத்தில் உள்ளது. நபிகளாரின் வாழ்க்கையோ இதற்கு மாறாக அமைந்திருந்தது. புன்னகை பூத்த முகத்தோடு வாழ்ந்ததோடு, நகைச்சுவை உணர்வும் ததும்பப் பெற்றவராக அன்னார் இருந்தார்கள்.

ஒருவர் நபிகளாரிடம் தாம் சவாரி செய்வதற்கு ஒரு ஒட்டகம் தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு நபிகளார், ''நான் ஒரு ஒட்டகக் குட்டியின் மீது உம்மை சவாரி செய்ய வைக்கிறேன்.'' என்றார்கள். அதற்கு அவர், ''இறைவனின் தூதரே! ஒட்டகக் குட்டியை வைத்து நான் என்ன செய்யப் போகிறேன்?'' என்று கேட்டார். ''எல்லா ஒட்டகமும் தன் தாய்க்குக் குட்டி தானே!'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

மேலும் நபிகளாரிடம் ஒரு வயது முதிர்ந்த பெண்மணி வந்து, ''இறைத் தூதரே! இறைவன் என்னை சுவர்க்கத்தில் நுழையச் செய்ய வேண்டும் என இறைஞ்சுங்கள்'' எனக் கேட்டார். அதற்கு நபிகளார், ''இன்னாரின் தாயே! சுவர்க்கத்தில் வயது முதிர்ந்த பெண்கள் நுழைவது இல்லையே!'' என்றார்கள். அந்தப் பெண்மணி உடனே அழ ஆரம்பித்து விட்டாள். ''எந்தப் பெண்களும் கிழவியாகச் சுவர்க்கத்தில் நுழையப் போவதில்லை. (எல்லாப் பெண்களும் கன்னியராகவே சுவர்க்கத்தில் நுழைவார்கள்)'' என்று கூறி அதற்கு ஆதாரமான குர்ஆன் வசனத்தையும் ஓதிக் காட்டினார்கள். (56: 36,37)

★ உம்மு அய்மன் என்ற பெண் நபிகளாரிடம் சென்று, ''என் கணவர் உங்களை அழைக்கிறார்'' என்று சொன்னபோது, நபிகளார், ''யார் அவர்? கண்ணிலே வெண்மை இருக்குமே, அவரா?'' என்று கேட்டார்கள். அப்பெண், ''இறைவன் மீது ஆணையாக, அவரது கண்ணில் வெண்மை இல்லையே'' என்றாள். நபிகளார், ''இல்லை, அவர் கண்ணில் வெண்மை உள்ளது'' என்று சொல்ல, மீண்டும் அப்பெண், ''சத்தியமாக இல்லை'' என்று சொல்ல, நபி(ஸல்) அவர்கள், ''கண்ணில் வெள்ளைப் பகுதி இல்லாத நபரே இல்லை'' என்றார்கள்.

(நபிமொழி)

இதுபோன்ற பல நகைச்சுவையான நிகழ்வுகள் நபி(ஸல்) அவர்கள் வாழ்வில் நிகழ்ந்துள்ளன. ஆனால் அவை அனைத்தும் மனிதனுக்கு நன்மை பயப்பதாகவும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்திருந்தன.

ஆனாலும் நகைச்சுவைக்கும் சில கட்டுப்பாடுகள் உண்டு என்பதையும் நபி(ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். நகைச்சுவைக்காக பொய் பேசக் கூடாது. ''நகைச்சுவை உணர்வோடு எங்களுடன் உரையாடுகின்றீர்கள் என்பதை நாங்கள் காண்கிறோம்'' என்று தோழர்கள் நபிகளாரிடம் கூறியபோது, ''ஆம்! அப்போதும் நான் உண்மையைத் தவிர வேறெதுவும் சொல்வதில்லை.'' என்று பதில் அளித்தார்கள். (ஆதாரம்: திர்மிதி)

மேலும் மக்களை மகிழ்விப்பதற்காக பொய் பேசி சிரிக்க வைப்பவனுக்குக் கேடு உண்டாகும். நகைச்சுவையாக பேசுகிறோம் என்ற பெயரில், கேலி, கிண்டலான வார்த்தைகளைக் கூறக் கூடாது.

ஆகவே, நபிகளார் நமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியாக இருப்பதைப் போல நகைச்சுவை, விளையாட்டு கலந்த இயல்பான வாழ்க்கைக்கும் சிறந்த வழிகாட்டுதலை வழங்கியுள்ளார்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அபூ மதீஹா...

# நற்பண்புகளை கடைப்பிடிப்போம்

பக்குவப்பட்ட ஒரு வாழ்வு எவ்விதமாக அமைய வேண்டுமென்பதை நற்பண்புகள் வரையறை செய்கின்றன. எமது வாழ்வில் எல்லா நிலைகளிலும் நற்பண்புகள் பிரதிபலிக்க வேண்டும். பகுத்தறிவுள்ள மனிதன் ஏனைய அனைத்து உயிரினங்களில் இருந்தும் வேறுபடுகின்றான். என்றாலும் தனித்துவமான உயர் நிலையை அடைவதற்கு நற்பண்புகள் இன்றியமையாததாகும்.

உலகில் தோன்றிய சகல சமூகங்களும் நற்பண்புகளுக்கு தனியான இடத்தை வழங்கியுள்ளதோடு நற்பண்புகள் மிக்க செயற்பாடுகளையும் பேணி வந்துள்ளன.

அந்த வகையில் இஸ்லாம் நற்பண்புகளுக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்கியுள்ளது. அல்குர்ஆனும், ஸுன்னாவும் இது தொடர்பில் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன. நற்பண்பின் சிகரமாக நபி (ஸல்) அவர்கள் விளங்கினார்கள். அன்னாரிடமே நற்பண்புகளைக் கற்றுக் கொள்ளுமாறு அல்குர்ஆனும் போதிக்கின்றது. 'நற்பண்புகளில் சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள்' என்று அல்குர்ஆன் சுட்டிக்காட்டியுள்ளது. அதன் ஊடாக நற்பண்பு மிக்கோராய் வாழ்வதன் அவசியத்தை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.



நபி (ஸல்) அவர்கள் மக்களோடு நற்பண்புகளுடன் நடந்து கொண்டார்கள். அன்னார் கைகொண்ட நற்பண்புகள் எதிரிகளைக் கூட இஸ்லாத்தில் இணைத்து அதன் காவலர்களாக மாற வழி வகுத்தன.

இஸ்லாம் பரவுவதற்கு நற்பண்புகளே காரணமாக அமைந்தன என்பதற்கு வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன. அல்குர்ஆனும் நற்பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருக்கின்றது. ஸூரா லுக்மான், ஸூரா புர்கான் ஆகிய அத்தியாயங்கள், 'ஒரு முஸ்லிமிடம் காண வேண்டிய முக்கியமான நற்பண்புகளை எடுத்துரைக்கின்றன.

'எனனருமை மகனே... அலலாஹ்வுக்கு இணை வைக்காதீர்கள். தொழுகையை நிலை நிறுத்துங்கள். நன்மையை ஏவி தீமையைத் தடுங்கள். உங்களுக்கு ஏற்படும் அனைத்து துன்பங்களின் போதும் பொறுமையைக் கடைபிடியுங்கள். மனிதர்களை விட்டும் உங்கள் முகத்தை திருப்ப வேண்டாம். பூமியில் பெருமையோடு நடக்க வேண்டாம். நடையில் நடு நிலைமையைக் கடைபிடியுங்கள். சப்தத்தைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். உரத்து கத்தும் கழுதையின் சப்தமே சப்தங்களில் வெறுக்கத்தக்கதாகும்'.

(ஸூரா லுக்மான்:1719)

மேற்குறிப்பிட்ட வசனத்தில் பெருமையோடு நடக்க வேண்டாம், நடையில் நடு நிலையைப் பேணிக் கொள்ளுங்கள் என்பதன் மூலம் நாம் படிப்பினை பெற வேண்டும். வீதியின் ஒழுங்குகளை கடைபிடித்தல், பாதசாரிகளின் உரிமைகளை அனுசரித்தல் போன்ற பல்வேறு விடயங்களை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் வீதியில் செல்லும் போது வலது பக்கமாக செல்வார்கள். அமைதியாக நடப்பார்கள். பார்வையை தாழ்த்திச் செல்வார்கள். ஏனையவர்களுக்கு இடையூன்றி நடந்து கொள்வார்கள். வீதியில் கண்டவர்களுக்கு ஸலாம் சொல்வார்கள் போன்ற விடயங்களை நபி (ஸல்) அவர்கள் நடைபாதையில் கடைபிடித்துள்ளார்கள். இது எமது வாழ்விலும் பிரதிபலிக்க வேண்டும்.

மேலும் ஸூரா புர்கானும் இறையடியார்களின் பண்புகள் அடையாளப்படுத்தி உள்ளன. 'அல்லாஹ்வின் நல்லடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள். அறிவீனர்களோடு தர்க்கிக்காமல் கண்ணியமாக விலகி விடுவார்கள். இரவில் கூடுதலான இறைவனை வணங்குவார்கள். நரக வேதனையிலிருந்து பாதுகாப்பு தேடுவார்கள். வீண் விரயமோ, உலோபித்தனமோ இல்லாமல் நடுநிலையில் செலவு செய்வார்கள். அல்லாஹ்விற்கு இணையாக வேறு எதனையும் அழைக்க மாட்டார்கள்.

நியாயமின்றி எவரையும் கொலை செய்ய மாட்டார்கள். விபசாரத்தில் ஈடுபட மாட்டார்கள், பொய்யாக எவருக்கும் சாட்சி கூற மாட்டார்கள். வீணான காரியங்களை கண்டால் கண்ணியமாக விலகிச் சென்று விடுவார்கள். அல் குர்ஆன் வசனங்களை கேட்கும்போது அவர்கள் குருடர்கள், செவிடர்கள் போல நடந்து கொள்ளமாட்டார்கள். மகிழ்ச்சியான குடும்பத்தை வேண்டி பிரார்திப்பார்கள். (ஸூரா புர்கான் 73)

மேற்குறிப்பிட்ட குர்ஆன் வசனத்திலும் பூமியில் பணிவாக நடப்பார்கள் என குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. வீதியின் சட்டதிட்டங்களை அனுசரித்து பிறருக்கு இடையூறின்றி நடப்பதை எமது நற்பண்புகளின் ஒன்றாக வாழ்வில் கடைபிடிப்பது அவசியம் என்பதை உணர முடிகின்றது.

மேற்குறிப்பிட்ட இரண்டு அல்குர்ஆன் வசனங்களின் மூலமும் எமது அன்றாட வாழ்க்கையில் நற்பண்புகளை அணிகலனாக எடுத்துச் கொள்வது கட்டாயமாகும்.

எனவே நாமும் அல்குர்ஆன், ஹதீஸ் வழி நடந்து நற்பண்புகளை எமது வாழ்வில் கடைபிடித்தொழுகுவோம்.

மௌலவி
**எம்.யூ.எம். வாலிஹ்...**
(அல் அஸ்ஹரி), வெலிகம

# பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்தால், நாட்டின் எதிர்காலத்தில் எங்களால் நம்பிக்கை வைக்க முடியாது!

இன்னும்20 வருடங்களில் சிறந்த நாட்டில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை இந்நாட்டு இளைஞர்களுக்கு வழங்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி நாட்டை உருவாக்க எரிவாயு சிலிண்



டருக்கு வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி, சஜித்துக்கும் அநுரவுக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப எந்தத் திட்டமும் இல்லை எனவும் அவர்களிடம் நாட்டை ஒப்படைத்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் மீண்டும் சீர்குலைந்தால் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எவராலும் நம்பிக்கை வைக்க முடியாது என ஜனாதிபதி வலியுறுத்தினார்.

திருக்கோவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (11) நடைபெற்ற 'ரணிலால் இயலும்' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"2004 ஆம் ஆண்டு சுனாமிக்கு பின்னர் நான் இங்கு வந்தேன். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்போது திருக்கோவில் பகுதியையும் பலப்படுத்துவோம். நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்த வேளையிலேயே நாட்டை ஏற்றேன். 2022 அத்தியாவசிய பொருட்கள் ஒன்றும் எமக்குக் கிடைக்கவில்லை. மின்சாரமும் இருக்கவில்லை. கஷ்டங்களுடன் வாழ்ந்தோம். பெண்கள் அதனை மறந்திருக்க வாய்ப்பில்லை.

அனுரவும் சஜித்தும் அன்று இருக்கவில்லை. ஆனால் நான் பொறுப்பேற்றதால் நாட்டில் தட்டுப்பாடுகள் நீங்கி நல்ல நிலைமை காணப்படுகிறது. அதனால் மக்கள் சுமுகமாக வாழ முடிந்துள்ளது. அன்று பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. ரூபாவின் பெறுமதி பெருமளவில் அதிகரித்திருந்தது.

இன்றும் மக்கள் வாழ்க்கை சுமைகளுக்கு முகம்கொடுக்கிறார்கள். இருப்பினும் எனது முயற்சிகள் ரூபாவின் பெறுமதியை அதிகரிக்கச் செய்தமையால் ஓரளவு சுமுகமான நிலைமை வந்திருக்கிறது. பொருட்களின் விலையும் குறைந்திருக்கிறது.

அடுத்த ஐந்து வருடங்களில் சுமையை மேலும் குறைக்க எதிர்பார்க்கிறோம். பொருட்களை கொள்வனவு செய்யவும் வாய்ப்பளிப்போம். இந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்திருக்கிறோம். விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை இங்கும் முன்னெடுக்கலாம்.

## நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை அடுத்த 5 வருடங்களில் தீர்க்கப்படும் – ஜனாதிபதி திருக்கோவிலில் தெரிவிப்பு

திருக்கோவில் பகுதியிலும் விவசாய அபிவிருத்திக்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இங்குள்ள கடல் வளத்தினாலும் பயனடைய முடியும். மீன்பிடித் தொழில், சுற்றுலாத்துறை, கனியவள வர்த்தகத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். விவசாயத்தை நவீனமயப்படுத்தி உலக உணவு உற்பத்தியில் பங்கெடுப்போம். திருகோணமலையில் பாரிய முதலீட்டு வலயத்தை உருவாக்குவோம். நாட்டின் அபிவிருத்தியை விரிவுபடுத்துவோம்.





மாகாண சபையை செயற்படுத்தி இப்பகுதி மக்களின் அபிவிருத்திக்கும் இளையோருக்கு நம்பிக்கை தரும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும். இன்றைய சிறுவர்களுக்கு 25 வயதாகும்போது அவர்கள் முன்னேற்றமடைந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

சஜித்தினாலும், அநுரவினாலும் அதனை செய்ய முடியாது. வாய் பேச்சினால் எவர் வேண்டுமானாலும் சாதிக்கலாம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவர்களால் முடியாது. மாறாக வீழ்த்தவே முடியும். எனவே பொருளாதார வீழ்ச்சியை விரும்பாதவர்கள் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் லிண்டரும் இருக்காது, அபிவிருத்தியும் கிட்டாது."

**அமைச்சர் அலி சப்ரி:**

"இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு பெரும் இக்கட்டான நிலைமையில் இருந்தது. அப்போது ஜஎம்எப் நாட்டில் அனைவரையும் ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு வலியுறுத்தியது. ஆனால் எதிர்கட்சியினர் அதற்கு முன்வரவில்லை. எதிர்கட்சித் தலைவர் சஜித்துக்கு பிரதமர் பதவியை வழங்கவும் தயாராக இருந்தோம். அப்போதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று மக்கள் பட்ட கஷ்டங்கள் இன்று உள்ளனவா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல வைத்தியரிடம் சென்று நீங்கள் சிகிச்சைக்கு சென்று அதனால் நல்ல பலன் கிட்டும்போது, வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதையும் மக்கள் சிந்திக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை சமூகத்துடன் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதால் நாட்டிலிருக்கும் வலுவான தலைவரே நாட்டை மீட்க வேண்டும். சஜித் கூறுவதை போல வெளிநாட்டு செல்வந்தர்களின் உதவிகளை மட்டும் நாம் நம்பியிருக்க முடியாது. ஜே.வீ.பி ஒரு கொள்கையில்லாத கட்சியாக செயற்படுகிறது. எனவே நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்ட அனுபவம் மிக்க தலைவருக்கு நாம் இடமளித்தால் அடுத்த ஐந்து வருடங்களும் செழிப்பான நாடு எமக்கு கிடைக்கும்."

**இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன்:**

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாவார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தை கட்டியெழுப்பும் போது, கிழக்கு மக்களும் அதில் பங்குதாரர் ஆக வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு 3 அமைச்சுக்களையும் நியமித்தார். மாகாண சபைத் தேர்தலையும் விரைவில் நடத்தி அதிகார பகிர்வுக்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். எனவே, யாழ்ப்பாணத்திலிருந்து சொல்வதை கேட்டுக்கொண்டு அழிவை நோக்கி நகர்வதா? ஜனாதிபதியுடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அமைச்சு ஒன்றை பெற்றுக் கொள்வதா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்."

**முன்னாள் அமைச்சர் தயா கமகே:**



"இப்பகுதி மக்களின் கஷ்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதியின் ஊடாக இப்பகுதியின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கிலேயே இன்று இங்கு கூட்டத்தை ஏற்படுத்தினோம். இப்பகுதி மக்கள் நாட்டின் நெற் உற்பத்தியில் பெருமளவான பங்களிப்பை வழங்குகிறார்கள். திருகோணமலையில் அமைக்கப்படும் தொழில் வலயத்தை அம்பாறை வரையில் விரிவுபடுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்".

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர்:**

"இந்த நாட்டின் எதிர்காலம் என்பது நாட்டின் தலைவரின் வழிகாட்டலில் உள்ளது. இன்று எமது மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரச காணிகள் அவர்களுக்கு முழு உரிமையுள்ள உறுதிப்பத்திரங்களுடன் வழங்கப்பட்டுள்ளது. வீடுகளின் உரிமைகளும் சொந்த வீடுகளாக வழங்கப்பட்டுள்ளன. இவை எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமக்கு இரண்டு வருடங்கள் சேவை செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்து இன்னும் 05 வருடங்களுக்கு ஜனாதிபதியாக தெரிவு செய்தால், நாம் உரிமையுடனும் நெஞ்சை நிமிர்த்தியும் அவர்களிடம் எமது மக்களுக்கான தேவைகளை கேட்க முடியும்.

எமது தேவைகளை கேட்டறியும் ஒருவரிடமே நாம் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். இன, மத பேதமின்றி செயற்படும் ரணில் விக்கிரமசிங்கிவிடமே எமக்கான உரிமைகளைப் பெற முடியும். நாம் இந்த ஜனாதிபதிக்கு வாக்களிக்கவில்லை என்றால் எதிர்காலத்தில் ஒவ்வொரு தமிழனும் வேதனைப்படுவான்".

(திருக்கோவிலில் இருந்து லோறன்ஸ் செல்வநாயகம்)

# சிரேஷ்ட பிரஜைகள் தேசியக் கொள்கை, ஜனாதிபதி செயலணி நிறுவப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

எமது நாட்டில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான 14,000 இற்கும் அதிகமான அமைப்புகள் காணப்படுகின்றன. இந்த சிரேஷ்ட பிரஜைகளுக்காக தனியான தேசியக் கொள்கைத் திட்டம் ஒன்றை தயாரித்து, ஜனாதிபதி செயலணி ஒன்றையும் நிறுவி, இந்த சமூகத்தின் உரிமைகளை பாதுகாப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சிரேஷ்ட பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் முகமாக அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொள்ளும் வகையில், இந்நாட்டிலுள்ள சிரேஷ்ட பிரஜைகள் அமைப்புக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதில், நாடளாவிய ரீதியியாகக் காணப்படும் 14,000 சிரேஷ்ட பிரஜைகளின் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர். இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது நாட்டுக்கு உயிரோட்டத்தையும் சக்தியையும் வழங்குகின்ற சிரேஷ்ட பிரஜைகள் நாட்டுக்காக பாரிய சேவையை ஆற்றியவர்கள். இந்த நாட்டுக்கான பிரஜைகளை உருவாக்கி நாட்டை வளப்படுத்துவதற்கு கடமையாற்றியவர்கள். இந்தச் சமூகம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். சிலருக்கு இவர்கள் சுமையாக இருந்தாலும் இவர்கள் பெறுமதியான வளங்களாவர்.

நாட்டை வளப்படுத்துவதற்காக அவர்கள் பாரிய சேவையை ஆற்றி இருக்கின்றார்கள். எமது சமூகத்துக்குள் குறைந்து வருகின்ற ஆனால் கட்டாயம் இருக்க வேண்டிய ஒரு பண்பு இருக்கின்றது. அதுதான் நன்றிக் கடன் செலுத்துவதாகும். சிரேஷ்ட பிரஜைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பொன்று இருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி அரசாங்கத்தின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளை கவனித்துக் கொள்கின்ற பண்பை நாம் சமூக மயப்படுத்துவோம்.





சிரேஷ்ட பிரஜைகளின் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்காக 15 வீத வட்டி வழங்கப்பட்டது. ஆனால் அதனை தற்போதைய அரசாங்கம் ரத்துச் செய்திருக்கிறது. இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக அதனை நாம் மீண்டும் பெற்றுக் கொடுப்போம். தமது வாழ்வின் இறுதிக் காலகட்டத்தில் வாழ்கின்ற இவர்கள் சுதந்திரமான வாழ்க்கையை வாழ வேண்டும். இந்த நாட்டிலுள்ள அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கான அமைப்புகளுக்கும் வருடாந்த நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு அவர்களுடைய செயற்பாட்டிற்கான வசதிகளைச் செய்து கொடுப்போம்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான அடையாள அட்டையின் ஊடாக சுகாதார நிவாரணங்கள் கிடைக்கப் பெறுகின்றன. அவற்றை மேலும் அதிகரிப்போம்" என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# இடதுசாரி பதாகையை காண்பித்தபடி 'டீல் அரசியல்' செய்கிறது ஜே.வி.பி

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர



தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்றபடி சம்பளத்தை அதிகரித்து தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்குத் தேவையான வேலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது என சர்வஜன ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பிரசாரக்கூட்டம் சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய, ரட பெரட என்ற கருப்பொருளை மக்கள் மயமாக்குவதற்கு நானே வித்திட்டேன். அதேபோன்று 2010 இலும் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய முன்னின்று செயற்பட்டேன். நாட்டின் எதிர்காலம் தொழிலாளர்களை பலப்படுத்தும் வேலைத்திட்டங்களுடனே அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோதும், அதனை அவர்கள் சரியாக செய்யவில்லை. இடதுசாரி கொள்கையுடன் செயற்படத் தவறினார்கள்.

நாங்கள் எப்போதும் இடதுசாரிக் கொள்கைக்காக போராடி வருபவர்கள். மக்கள் விடுதலை முன்னணி இடதுசாரி கொள்கை பதாகையை காண்பித்தபடி டீல் அரசியலை செய்து வருகிறது. அவர்கள் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள சிவப்பு நிறத்தை தற்போது மறைத்துக்கொண்டுள்ளார்கள்.

இடதுசாரிகள் எப்போதும் தொழிலாளர்களின் உரிமைக்காக போராடி வருபவர்கள். அதனால் அரசாங்கமோ அரசாங்கத்தின் பெயரால் தொழிலாளர்களின் உரிமைகளை இல்லாதொழிக்க யார் செயற்பட்டாலும் அதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

மேலும் இடதுசாரிகளின் சகோதரத்துவம் என்பது உள்ளத்தால் வருவதாகும். ஆனால் இன்று அந்த சகோதரர் என்ற வார்த்தை தங்களின் சொந்த அரசியலுக்காக பயன்டுத்தப்பட்டு வருகிறது. அதனால் அரசியல் நோக்கத்துக்காக அந்த வார்த்தையை பயன்டுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம். எனது தந்தை இடதுசாரி கொள்கையுடையவர். எனது தந்தையின் வழியிலே நானும் வந்தேன். அரசியலுக்கு வரும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை.

ஆனால் தொடர்ந்து இதனை பார்த்துக்கொண்டு இருக்க முடியாமலே இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். நாட்டைக் கட்டியெழுப்ப முறையான வேலைத்திட்டத்தை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்துக்கும் எனது வேலைத்திட்டத்துக்கும் பாரிய வித்தியசத்தைக் காணலாம். அதனால் மக்கள் எனது வேலைத்திட்டத்தை பார்த்து, நாட்டை முன்னேற்ற எனக்கு ஆதரவளிக்க வேண்டும்".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சுயேச்சை வேட்பாளரை ஆதரித்து மொறட்டுவயில் பொதுக்கூட்டம்





**பாணந்துறை மத்திய குறுப் நிருபர்**

ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக களமிறங்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மொறட்டுவ மாநகர சபை முன்னாள் மேயர் சமன்லால் பெர்னாண்டோவின் தலைமையில் மில்லோரவத்த சத்திய வரவேற்பு மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தினார்.


இந்நிகழ்வில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்னாயக்க, முன்னாள் கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மொரிஸ் விஜேரத்ன, முன்னாள் மொறட்டுவ மேயர் ரவினாத் குணசேகர, பொரலஸ்கமுவ நகர சபை முன்னாள் தலைவர் அருண பிரியசாந்த உள்ளிட்ட முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்

# புலமைப் பரிசில் பரீட்சை தரம் 05

## கடந்த வார (06.09.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 11. 2 | 21. 2 | 31. 1 |
| 02. 3 | 12. 2 | 22. 2 | 32. 2 |
| 03. 1 | 13. 2 | 23. 3 | 33. 3 |
| 04. 3 | 14. 3 | 24. 3 | 34. 2 |
| 05. 2 | 15. 3 | 25. 3 | 35. 2 |
| 06. 1 | 16. 3 | 26. 2 | 36. 3 |
| 07. 2 | 17. 1 | 27. 1 | 37. 1 |
| 08. 2 | 18. 3 | 28. 2 | 38. 1 |
| 09. 1 | 19. 1 | 29. 3 | 39. 3 |
| 10. 1 | 20. 3 | 30. 1 | 40. 2 |

# நகர்வலம்



# வட மத்திய மாகாணத்தில் நிர்மாணிக்கப்படும் சுரங்கப் பாதையை அரச அதிகாரிகள் பார்வை







**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்தில் பெரிய கால்வாய் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற "சுரங்கப் பாதையை" பார்வையிடுவதற்காக அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ரஞ்சித் விமலசூரிய உள்ளிட்ட அதிகாரிகள் குழுவொன்று நேரடி கள விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டு பார்வையிட்டனர். இத்திட்டத்தில் 28 கி.மீ., நீளமுள்ள சுரங்க நீர் வழிப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களில் இருந்து இச் சுரங்கப்பாதையூடாக வட மத்திய மாகாணத்திற்கு நீரை கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பெரிய கால்வாய் கட்டப்பட்ட பின் அதன் மொத்த நீளம் 96 கி.மீ. ஆகும். இக் கால்வாய் அமைக்கும் போது, பலுகஸ்வெவ பகுதியில் மலைப்பாங்கான இடங்கள் இருப்பதால்,முழு கால்வாயிலிருந்தும் 28 கிலோமீற்றர் தூரத்திற்கு சுரங்கப்பாதையின் மூலம் தண்ணீரை கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.குறிப்பிட்ட சுரங்கப்பாதையின் வேலைகள் நிறைவுற்றதும் இது தெற்காசியாவின் மிக நீளமான சுரங்க நீர் கால்வாயாக கணிப்பிடப்படும். இந்த சுரங்கப் பாதை 49 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந் நேரடி கண்காணிப்பில் கலந்து கொண்ட சுரங்கப்பாதை நிர்மாண பணியின் பொறியியலாளர் பி.டபிள்யூ.எம்.டபிள்யூ.செனவிரத்ன பண்டா தெரிவிக்கையில், இதுவரையில் சுமார் 39 வீதமான சுரங்கப்பாதையின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன. 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் மார்ச் 2026 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இரண்டு அகழ்வு இயந்திரங்கள் சுரங்கப்பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. புதிய தொழில் நுட்பத்துடன் இச் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின் மூலம் சுற்றாடல் பாதிப்புகள் குறைவதோடு, பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமது அறிவுத்திறனை வளர்ப்பதற்கான வாய்ப்பாகவும் இது அமைவதாக இத்திட்டத்தின் பணிப்பாளர் மாவட்ட செயலாளரிடம் தெரிவித்தார். குறிப்பிட்ட வட மத்திய மாகாண பெரிய கால்வாய் திட்டத்தை அமைப்பதன் ஊடாக இதன் கீழ் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

சுரங்கப்பாதை உட்பட வட மத்திய பெரிய கால்வாய் திட்டம் முழுவதுமாக நிறைவடைந்ததன் பின்னர் மஹகனதரவ, பதவிய, வாஹல்கட, யாங் ஓயா ஆகிய நீர்த்தேக்கங்களின் கீழ் குடிநீர் வழங்குவதற்கான வாய்ப்பும் கிடைக்கப்பெறும். மேலும் இத் திட்டத்தின் ஊடாக சிறிய ரக குளங்கள் 1505 க்கு நீரை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப் பெறவுள்ளன. இலுக்வெவ, அல்லே பொத்தான மற்றும் யாங் ஓயாவின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள அணையின் கீழ் 3000 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதியும் கிடைக்கப்பெறவுள்ளதோடு பாவற் குளம் மற்றும் இரணைமடு நீர்த்தேக்கத்தின் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கவும், நன்னீர் மீன் உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பும் ஏற்படும். மனிதயானை மோதலை குறைக்கும் நோக்கத்துடன் வன காப்பகங்களை உருவாக்குவதும், கால்நடை வளர்ப்பும், சுற்றுலாத் துறைக்கான சாத்தியமும் இதன் கீழ் கிடைக்கப்பெறும் நன்மைகளாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணிலை ஆதரித்து

# இன்று பேருவளையில் மக்கள் பேரணி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பேருவளை நகரில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (13) பி.ப 3.00 மணிக்கு முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரட்ன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்துவார். பேருவளை நகர் பீச் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ள இம் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேருவளை ஐ.தே.க அமைப்பாளர் மஸாஹிம் மொஹமட், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மாகாண சபை, நகர , பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# தர்கா நகரில் நாமல் ராஜபக்ஷவை ஆதரித்து இன்று பொதுக்கூட்டம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்ற நாமல் ராஜபக்ஷவை ஆதரித்து இன்று (13) மாபெரும் பொதுக்கூட்டம் இரவு 8.30 மணிக்கு தர்கா நகரில் நடைபெறவுள்ளது. பேருவளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இஸ்மாயில் ஹாஜியார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பேருவளை தொகுதி பொதுஜன பெரமுன அமைப்பாளர் சன்ஜீவ பிரசன்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், சன்ஜீவ எதிரிமான்ன உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவர்.

# மாத்தளையில் இலவச மருத்துவ முகாம்



















மாத்தளை (MERCS FOUNDATION) கல்வி சமய கலாசார சமூக அமைப்பின் ஏற்பாட்டில் மாத்தளை பிராந்திய சுகாதார காரியாலயத்தின் ஒத்துழைப்புடன் இலவச மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி மார்க்ஸ் அமைப்பின் தலைவரும் சர்வதேச சமாதான தூதுவருமான தேசமானிய கலாநிதி அல்ஹாஜ் எம். எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு, பக்கவாதம், வாய் மற்றும் மார்பக புற்றுநோய், பல் நோய்கள், பெண்களுடைய மார்பக புற்றுநோய் போன்ற நோய்கள் தொடர்பான பரிசோதனைகளும் அறிவுறுத்தல், வழிகாட்டல்களும் விசேட வைத்தியர்கள் மூலம் இலவசமாக இங்கு வழங்கப்பட்டன. இதில் சுமார் 400 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர். கண் பார்வையற்ற சுமார் 280 பேருக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகளும் இங்கு வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு சுகாதார போசாக்கு தொடர்பான விழிப்பூட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு மாத்தளையை சேர்ந்த விசேட வைத்தியர்கள் 15 பேர் இதில் கலந்து கொண்டனர். மேற்படி அமைப்பின் தலைவர், செயலாளர் எம். எஸ். என் .சுல்பிகார் உட்பட அமைப்பின் அங்கத்தவர் பலரும் கலந்து கொண்டு இதற்கான சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.



**படமும் தகவலும் எம் . சதூர்தீன் (JP), மாத்தளை சுழற்சி நிருபர்**

# தேவ சித்தத்தின்படி நாட்டுக்கு நல்ல தலைவரை தருமாறு வேண்டி முகத்துவாரம் மிஷ்பா ஜெப மிஷனரி ஆலயத்தில் மன்றாடல் ஜெபம்

## தேசிய போதகர் ஒன்றியம் ஒன்றிணைந்து செப்டெம்பர் 17ஆம் திகதி ஏற்பாடு

இன, மத, மொழி, பேதங்களுக்கு அப்பால் தேச மக்களின் நலன் கருதி, இலங்கையின் எதிர்காலத்தின் சிந்தையை கொண்ட தலைமை எமக்கு கிடைக்க வேண்டும் என மிஷ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமைப் போதகரும் பிரபல சுவிசேஷகருமான வண. ஜெயம் சாரங்கபாணி தெரிவித்தார்.

வண. ஜெயம் சாரங்கபாணி தலைமையில் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி முதல் 12:30 மணி வரை இலங்கை தேசத்திற்கான பரிந்து பேசும் ஜெபமானது மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியம், இல: 187/7, மோதர வீதி, கொழும்பு 15 என்ற முகவரியில் நடைபெறவுள்ளது. இந்த ஜெபத்தில் தேசிய போதகர் குழுவின் மூத்த ஊழியர்கள், இன்னும் பல ஊழியர்கள் மற்றும் தேவ ஜனங்கள் ஒன்றுகூடி இணைந்து ஜெபிக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகின்றவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கின்றவர். தானியேல் 2:21 ஞானம், ஆற்றல், காலங்களின் மேல் ஆளுகை, அரசுகளின் மீது ஆளுகை, ஞானத்தையும் அறிவையும் மக்களுக்கு கொடுக்கும் தன்மை, மறைபொருட்களை வெளிப்படுத்தும் தன்மை, ஒளியில் இருக்கும் தன்மை இவையாவும் உடைய தெய்வம் நேற்றும் இன்றும் என்றும் சதாகாலங்களிலும் மாறாதவறாய் நம்முடன் இருக்கிறார். அவரால் செய்ய கூடாத காரியம் ஒன்றும் இல்லை.

இலங்கையர்கள் என்ற வகையில் இதுவரை நமது தேசம் முகம்கொடுத்துவந்த பல்வேறுபட்ட சவால்கள், பிரச்சினைகள், நெருக்கடிகளை நன்கு அறிந்திருக்கிறோம். மக்களின் தெரிவு மற்றும் தேசத்தலைவர்களின் ஆளுகை தவறும் போது முழுநாடுமே பலவித பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். ஆகவே அரசியல் என்ற ரீதியில் தீர்மானங்கள் எடுப்பதில் அனைவருமே கவனமாக இருக்க வேண்டும். தேவனுடைய சித்தத்தின்படி ஒரு தலைவர் தேசத்திற்கு கொடுக்கப்படும் பட்சத்தில் நாடும் நாட்டு மக்களும் சிறப்புடன், சமாதானத்துடன், சந்தோஷத்துடன் வாழலாம்.

இன்னும் சில நாட்களில் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தேவன் தமக்கு சித்தமான ஒரு நபரை தலைவராக தர வேண்டும் எனவும் இந்த இக்கட்டான நிலமையை மாற்றவும் தேவ ஜனமாகிய நாம் ஒன்றுக்கூடி ஜெபிக்கும்போது தேவன் கிரியை செய்வார். எங்களுக்காகவும், எங்களுடைய தேவைகளுக்காகவுமே நம்மில் அநேகர் ஜெபிக்க பழக்கப்பட்டிருக்கிறோம். எமது தேசத்திற்காக, தேசத்தை ஆளுபவர்களுக்காக எம்மில் எத்தனைபேர் திறப்பில் நின்று ஜெபிக்கிறோம் என்று சற்று சிந்திப்போம். நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்று வேதம் சொல்லுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில், 2 நாளாகமம் 19ஆம் அதிகாரத்தில் நாம் யோசபாத் ராஜாவை குறித்து வாசிக்கிறோம், மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடு அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஆலோசித்திருக்கும் பொழுது ராஜாவாகிய யோசபாத் பயந்து கர்த்தரை தேடுகின்றதற்கு ஒருமுகப்பட்டார். யூதாவெங்கும் உபவாசத்தை கூறுவித்தான். ராஜாவும் ஜனங்களும் சேர்ந்து தேவனை நோக்கி பார்த்தார்கள். ஆகவேதான் அந்த யுத்தம் உங்களுடையது அல்ல அது என்னுடைய யுத்தம் என்று தேவன் கூறி. அந்த பெரிய யுத்தத்தை தேவனே செய்து முடிக்கிறார். காரணம் அவர்கள் ஒருமுகப்பட்டு தேவனை நோக்கிப் பார்த்தார்கள் ஆகவே அவர்களுக்கு ஜெயத்தை கொடுத்தார்.

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கின்ற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்." II நாளாகமம் 7:14 ஆம், பிரியமானவர்களே அன்று சாலமோன் ராஜாவின் ஜெபத்தை கேட்ட அதே தேவன் இன்றும் நம் ஜெபத்தை கேட்க வல்லவராய் இருக்கிறார்.

அவர் ஜெபத்தை கேட்கிற தேவன் என்பதால் நிச்சயம் பதில் கொடுப்பார். அவருடைய நாமம் தரிக்கப்பட்ட அவருடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, அவருடைய முகத்தை தேடும்பொழுது அவர் மனமிரங்காமல் இருப்பரோ? தாழ்மையுள்ளாவர்களுக்கோ அவர் கிருபையளிக்கின்றவராயிருக்கிறார். உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடும் யாவருக்கும் அவர் சமீபமாயிருக்கிறார். நாம் ஒன்றுகூடி ஜெபிக்கும் பொழுதுதான் தேவன் செயற்படுவார்.

நாம் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரோடு கூட இருப்பாராக. "தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்" யோவேல் 2:21









**தேவதாஸ் சவரிமுத்து...**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

# அனுர, சஜித், நாமல் தரப்பினரின் தியாகமும் ரணிலுக்குக் கிடைத்துள்ள அனுகூலமும்

இந்நாட்களில், சமூக ஊடக வலையமைப்புகளில் பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன, அவை ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்களின் விருப்பத்தின் வடிவத்தை தெளிவுபடுத்துவதற்காக நடத்தப்பட்ட ஆய்வுகளின் அறிக்கைகளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கருத்துக் கணிப்புகள் வாக்காளர்களின் கருத்துக்களைக் கண்டறிய உதவுவதால், பல நாடுகளில் இதுபோன்ற கருத்துக் கணிப்புகள் நடத்தப்படுவதாகத் தெரிகிறது. மேற்கத்தேய நாடுகளில் மட்டுமன்றி இந்தியா போன்ற நாடுகளிலும் இவ்வாறான ஆய்வுகள் நடத்தப்பட்டு பல சமயங்களில் முடிவுகள் அவ்வாறான கருத்துக்கணிப்புகளில் வெளிப்படும் தகவல்களைப் போன்றே கிடைத்துள்ளன. எனவே, பல வெளிநாடுகளில் கருத்துக் கணிப்புகள் பொதுமக்களின் விருப்பத்தைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தும் ஆதாரங்களாக மாறிவிட்டன.

எனினும், பெரும்பாலானவை பொது மக்களை ஏமாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் என்று இலங்கையின் தேர்தல் கணக்கெடுப்புகளைப் பற்றி கூறலாம். கருத்துக்கணிப்பு மற்றும் ஆய்வுகளின் அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும், கணக்கெடுப்புகளுக்கு பின்பற்றப்பட்ட முறை பற்றிய விளக்கமும் அவற்றில் இல்லை. அவற்றை அறிவிக்கும் மக்கள் தங்களுக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு வெற்றி அளிக்கும் வகையில் தங்கள் முடிவுகளை அறிவித்துள்ளனர். எனவே, பேச்சு வழக்கில், 'அப்பட்டமான பொய்' என்று சொல்லலாம்.


சில யூடியூப் சேனல்களில் மக்களைச் சந்தித்து கருத்துக் கணிப்பு நடத்துவதும், தொலைக்காட்சி கேமராவின் முன் கருத்து கேட்பதும் பிரபலமாகி வருகிறது. "எந்த அரசியல் கட்சியை பொதுவெளியில் ஆதரிக்கிறீர்கள்?" என்று கேட்டு அதை பதிவு செய்து ஒளிபரப்ப இலங்கையின் வாக்குரிமை விதிகள் அனுமதிக்கின்றனவா என்பதை விசாரிக்க வேண்டும்.

இருப்பினும், அவை நெறிமுறையற்றவை என்று குறிப்பிடலாம். இவ்வாறு விசாரணைக்கு வந்த ஒரு குழுவிற்கு மூத்த ஊடகவியலாளரும் நடிகருமான வசந்த துக்கண்ணரால சிறப்பான பதிலை அளித்திருந்தார்.

"இம்முறை யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள்" என்று ஒரு நேர்காணல் செய்பவர் அவரிடம் கேமராக்களுக்கு முன்னால் கேட்டபோது, "இதுபோன்ற கேள்வியைக் கேட்பது சட்டவிரோதமானது மற்றும் நெறிமுறையற்றது" என்று வசந்த பதிலளித்தார். வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தமது கருத்தை தெரிவிப்பதாகவும் அதற்கு முன்னர் அதுபற்றி விசாரிப்பது ஜனநாயகத்திற்கு விரோதமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


கருத்துக்கணிப்பு முடிவுகள் எனக் கூறி சிலர் வெளியிடும் தகவல்கள் எவ்வளவு அபத்தமானவை என்பதை நீங்களே தீர்மானிக்கலாம். யூடியூப் மற்றும் சமூக ஊடகங்களால் வெளியிடப்பட்ட சில தகவல்களில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் சதவீதம் கூட சேர்க்கப்பட்டுள்ளது. அத்தகைய தகவல்களை ஒரு கணக்கெடுப்பில் இருந்து பெற முடியாது. இதுபோன்ற நகைப்புக்கிடமான தகவல்களைக் கூட தெரிவித்து பொதுமக்களை தவறாக வழிநடத்துவதன் மூலம் 'கருத்துக்கணிப்பு' என்ற கருத்து எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகும்.

சுகாதாரக் கொள்கை நிறுவனம் (Institute of Health Policy) செப்டம்பர் 11 அன்று வெளியிட்ட ஜனாதிபதித் தேர்தல் கருத்துக் கணிப்பு முடிவுகளைப் பார்ப்பது முக்கியமாகத் தோன்றுகிறது. அதற்குக் காரணம், இலங்கை மக்களின் அரசியல் நடத்தை குறித்து முறையான மற்றும் வழமையான கருத்துக் கணிப்புகளை நடத்தும் இலங்கையிலுள்ள ஒரே நிறுவனம் இதுவேயாகும். அதன் கணக்கெடுப்பு முறை சர்வதேச தரத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.





இந்த நிறுவனம் செப்டெம்பர் 02 ஆம் திகதி வரை நடத்திய கருத்துக் கணிப்பின் படி, ஜனாதிபதி வேட்பாளர்களில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க முக்கிய இடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு 36 சதவீத மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சமகி ஜனபலவேகவின் வேட்பாளர் சஜித் பிரேமதாச இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார். மொத்த வாக்குகளில் 32 சதவீத வாக்குகளைப் பெற்றார். சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க 28 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். இதன்படி 2024 செப்டெம்பர் 2ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றுள்ளார் என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது. இதனுடன் இன்னும் நிறைய சொல்வதற்கு உள்ளது. மிகவும் முக்கியமானது அந்தத் தகவல்.

இந்தக் கணக்கெடுப்பு 2021 ஒக்டோபர் 01 அன்று தொடங்கப்பட்டது. ஜனவரி 2023 வரை, வெற்றி பெற்றவர் சஜித் பிரேமதாச. இரண்டாவது அனுரகுமார திஸாநாயக்க, மூன்றாவது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. ரணில் விக்கிரமசிங்க நான்காவது இடத்தைப் பிடித்திருந்தார். ஜனவரி 2023 இல் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமை மாறியது. மூன்றாமிடம் பெற்றார். இந்த ஆண்டு மே மாதம் முதல் பெரிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.




மே மாதம் அனுர மற்றும் சஜித்தின் வாக்குகள் சமமாக இருந்தன. 2024 மார்ச்சில் அனுரவுக்கு 41 சதவீதமும், சஜித்துக்கு 39 சதவீதமும் கிடைத்தன. மே மாதத்தில் அனுரவின் வாக்கு வீதம் 39 வீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை சஜித்தின் வாக்கு வீதம் 39 வீதமாக மாறாமல் இருந்தது. இதற்கிடையில், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக பொதுமக்களுக்கு அறிவித்ததும், இலங்கை மக்களின் அரசியல் விருப்பங்கள் மிக வேகமாக மாறத் தொடங்கின. அவரது வாக்கு சதவீதம் மார்ச் 2024 இல் 12 சதவீதமாக காணப்பட்டாலும் ஜுலையில் 22 சதவீதமாக உயர்ந்தது. மார்ச் மாதத்தில் 39 சதவீதமாக இருந்த சஜித்தின் வாக்கு சதவீதம் ஜுலையில் 36 சதவீதமாக குறைந்துள்ளது. மார்ச் மாதம் 41 வீதத்தைப் பெற்றிருந்த அனுரவின் வாக்குகள் ஜுலையில் 37 வீதமாகக் குறைந்துள்ளன.




ஓகஸ்டில், மிகப்பெரிய மாற்றம் குறிப்பிடப்பட்டுள்ளது. ரணிலின் வாக்கு எண்ணிக்கை ஒரு மாதத்தில் 22 சதவீதத்திலிருந்து 28 சதவீதமாக 6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. சஜித்தின் வாக்குகள் 36 வீதத்தில் இருந்து 32 வீதமாக 4 வீதத்தால் குறைந்துள்ளது. அனுரவின் வாக்குகள் 37 வீதத்தில் இருந்து 36 வீதமாக ஒரு வீதத்தால் குறைந்துள்ளது.

சுயேச்சையாகப் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றமை இந்த கருத்துக்கணிப்பின் மூலம் தெளிவாகக் காட்டப்படும் முதன்மையான வெளிப்பாடாகும். அதனுடன் ஒப்பிடுகையில் அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் வாக்குகள் குறைந்துள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்குகள் 2024 மார்ச்சில் 9 சதவீதமாக இருந்தது, ஆனால் ஓகஸ்ட் மாதத்தில் அது 3 சதவீதமாக குறைந்துள்ளது. அநுர, சஜித், நாமல் ஆகியோரின் வாக்குகள் குறைந்து வரும் வேளையில், ரணிலின் குவியலில் சேர்ந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த தகவல் செப்டம்பர் 02 வரை மட்டுமே. இன்றோடு 11 நாட்கள் கடந்துவிட்டன.

ஆனால், அந்தக் கருத்துக்கணிப்பின் மூலம் இன்றைய நிலை குறித்து எதுவும் கூற முடியாது. ஏனென்றால், இது வரையிலான காலகட்டத்தில் மக்களின் கருத்து எப்படி மாறியது என்பது பற்றி எந்தத் தகவலும் இல்லை. அதேநேரம், இன்று முதல் வாக்களிக்கும் நாளுக்கு இன்னும் 09 நாட்களே உள்ளன. இன்னும் கணக்கிடப்படாத நாட்களின் எண்ணிக்கை 19 ஆகும்.

எவ்வாறாயினும், ஜுலை மாதத்திற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள துரித மாற்றங்களை வைத்துப் பார்க்கும் போது, ரணிலின் வெற்றி ஏற்கனவே உறுதி யாகிவிட்டதாகவே கருதலாம். அதற்கு, 8 சதவீதம் கூடுதலாக தேவைப்பட்டது. ஏனெனில், முதலாமவருக்கும் ரணிலுக்கும் இடையிலான இடைவெளி தற்போது 8 சதவீதமாகக் குறைந்துள்ளது. இவ்வருடம் மார்ச் மாதத்தில் ரணிலுக்கும் முன்னாள் 29 வீதத்திற்கும் இடையிலான இடைவெளி இருந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட மாற்றங்களின்படி ரணில் குவியலை சேர்ப்பவராக மாறியுள்ளார். ஆனால் அவரது குவியலை அதிகரிக்க மூன்று நன்கொடையாளர்கள் இருப்பதாகத் தெரிகிறது.

அனுர, சஜித் மற்றும் நாமல். வெளிநாட்டில் இருந்து வரும் ஒருவரின் புகைப்படத்தைக்கூட தங்களின் பிரசாரத்திற்கு பயன்படுத்தப்படும் அளவிற்கு முதலாமவர் அநாதரவாகி விட்டார். ரணிலிடம் தலதா சென்ற இணைப்பை, கீதாவை இணைத்துக் கொண்டு சஜித்தால் ஈடு செய்ய முடியாது. நாமலின் வேட்புமனுவின் பின்னர் வாக்குகள் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தொடர்ந்து வாக்குகள் குறைவடைந்துள்ளதாகத் தெரிகிறது. அதன்படி ரணில் நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வருவதை யாராலும் தடுக்க முடியாது என்பது தெளிவாகும்.

**மக்கள் நேசன்...**

# தலைவர் அஷ்ரஃப் அவர்களும் தவிசாளர் பாரூக் அவர்களும்

## சவால்களும் சாதனைகளும் – 08

**எமது அரசியல் வழிகாட்டல்களும் எமது செயற்பாடுகளும் எமது இளம் அரசியல் தலைமுறையினர்களுக்குச் சென்றயடைய வேண்டியுள்ளது. தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் கட்சியின் பெயரை மக்கள் மனதில் பதிவு செய்து எவ்வாறு புகழை ஓங்கச் செய்தார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். பொதுவாக 1981 இல் கட்சியின் உதயம் மற்றும் அதற்குப் பிந்தைய சூழல்களில் இருந்து வரும் அரசியல் காய் நகர்த்தல்களை அறிந்து கொள்வதற்கான ஆர்வமும் எதிர்பார்ப்பும் இன்றைய தலைமுறையினர்களிடம் இருந்து கொண்டே இருக்கின்றது.**

**இது 1989 இல் அஷ்ரஃப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் அவர் அம்பாறை செல்வதற்கு விமானத்தில் ஏறுவதற்கு முதலில் இறுதியாக தவிசாளர் எச். எம். பாரூக் அவர்களிடம் விடைபெற்று செல்லும் வரையுமுள்ள செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றன.**

**அஷ்ரஃபுடைய தலைமைத்துவப் பண்புகள் தவிசாளர் எச். எம். பாரூக்கிடத்தில் இயல்பாகவே காணக் கூடியதாக இருக்கும். அஷ்ரஃப் மரணம் எய்திய பிந்திய காலத்தில் தவிசாளர் எச். எம். பாரூக் அதிகளவிலான சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார். உண்மையில் தவிசாளர் எச். எம். பாரூக் அரசியல் சமூகச் செயற்பாட்டை தேடி ஆராய்வு செய்வதன் மூலம் திரை மறைவிலுள்ள அஷ்ரஃபுடைய நல்ல தலைமைத்துவ குணாம்சங்களை மேலும் அறிந்து கொள்ள முடியும்.**

**அதேபோல், ஹசன் அலி, எஸ். எம். ஏ. கபூர், கவிஞர் வேதாந்தி சேகு இஸ்ஸதீன், வபா பாரூக், மசூர் மௌலானா, தொப்பி முகைதீன், பொறியியலாளர் இஸ்மாயீல், மருதூர்க்கனி, அதாவுல்லாஹ், ஜவாத், நிஸாம் காரியப்பர், ஹிஸ்புல்லாஹ், ரவூப் ஹக்கீம், டொக்டர் இல்யாஸ், சுந்தர மூர்த்தி அபூபக்கர், புஹார்தீன் ஹாஜியார், அன்வர் இஸ்மாயீல், ஹரீஸ், புத்தளம் பாயிஸ் இன்னும் பலருடைய நீண்ட பெயர் பட்டியலைக் கொண்ட பிரபலங்கள் உள்ளன. இந்த போக்கு அதிகரிக்க வேண்டும். அதே நேரம் நமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு, உரிமைகள், முஸ்லிம் சமூகத்திற்கான தனித்துவம், நமது இருப்பு, நமது வாழ்வியல், பண்பாடு, பாதுகாப்பு போன்ற விடயங்களில் காத்திரமான தன்மை வெளிப்பட செயற்பட வேண்டும். அது மாத்திரமல்ல இந்தப் பன்முகத்துவ அடையாளங்களை இந்நாட்டில் வாழும் பல்லின மக்கள் மதிக்கின்ற மற்றும் உறுதிப்படுத்துகின்ற விதம் சமூக நல்லிணக்கத்தை பேணுகின்ற தன்மையை தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் பணியில் தமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி எம்மிடையே காணப்படும் கறைகளை அகற்றி முஸ்லிம்கள் என்னும் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வோம். அதற்கான அத்திவாரத்தைத் தான் தாபகர் எம். எச். எம். அஷ்ரப் இட்டார்கள். அந்த உட்கட்டமைப்புக்குள் வளர்ந்தவர்களில் ஒருவர்தான் தவிசாளர் எச். எம். பாரூக் . அவர் வளமான அரசியல் பயணத்திலும் அழகான வாழ்க்கைப் பயணத்திலும் கௌரவமான அடையாளத்தைப் பெற்று தன்னுடைய மேதா விலாசத்தை பதிவு செய்துள்ளார். அவர் தினகரன் பத்திரிகைக்கு தொடர்ந்து வழங்கும் பேட்டியின் போது**

முஸ்லிம்களின் தலைவர்களாக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூத், சேர் ராசிக் பரீத், ஏ. ஸீ. எஸ். ஹமீட், பாக்கீர் மாக்கார், முஸ்லிம் சமூகத்திற்கு செய்த சேவையுடன் அஷ்ரஃப் செய்த சேவையுடன் ஒப்பிட்டால் முன்னுள்ள அரசியல் தலைவர்களின் சேவைகளை விட ஒரு படி மேலாகத்தான் அவர் செய்துள்ளார் என்று கூறலாம். ஏனென்றால் கலாநிதி பதியுதீன் மஹ்மூத்தின் பணியை எடுத்துக் கொண்டால் அவை கல்வியை மட்டும் மையமாகக் கொண்டதாகத் தான் இருக்கும். இன்று முஸ்லிம் மக்கள் மத்தியில் மறுமலர்ச்சி ஏற்பட்டு இருப்பதற்கான காரணம் கலாநிதி பதியுதீன் முஹ்மூத்துடைய கல்விச் சேவையாகும். அவர் யாருடைய தேவையையும் எதிர்பார்க்காமல் அவர் தன் சமூகத்தின் மீதுள்ள பற்றின் காரணமாக இந்தக் கல்வி பணியை ஆற்றினார்.

இலங்கையின் கல்வி எழுச்சியின் தந்தையாக சி. டப்லியூ கன்னங்கராவை மதிக்கின்றதைப் போல முஸ்லிம் மக்களுடைய கல்வி எழுச்சியின் தந்தையாக கலாநிதி பதியுதீன் முஹ்மூத் அவர்களை மதிக்க வேண்டும்.



அவரிடம் இராஜதந்திர சிந்தனை இருந்தது. அந்த வகையில் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் நாட்டுக்காக பெரும் கல்விச் சேவையை ஆற்றிய போதிலும் பின்தங்கியிருந்த முஸ்லிம் சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக தூர நோக்குடன் கல்வி பணியாற்றினார்.

அவர் கல்வி அமைச்சராக இருந்த போது ஆனந்த கல்லூரியையும் நாலந்த கல்லூரியையும் மிகவும் கவர்ச்சிகரமான பாடசாலையாக உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் பாடுபட்டார். அதேபோன்று கம்பளை சாஹிராக் கல்லூரியை உயர்த்துவதற்கு பெரும் பங்காற்றினார். இன்று கண்டியிலுள்ள கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரி அவரால் தாபிக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் கல்விப் பணிமனை இருந்தது. கண்டி புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உயர் தொழில் நுட்பக் கல்லூரிய இருந்தது. அந்த இடத்தில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியை அருப்பொல என்ற இடத்திற்கு மாற்றிவிட்டு கல்விப் பணிமனையை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்துள்ள இடத்திற்கு கொண்டு சென்றார்.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் பாடசாலையின் வளர்ச்சிதான் கண்டியிலுள்ள முஸ்லிம் பெண்களின் கல்வி மறுமலர்ச்சியாக மாற்றம் பெற்றது.

சேர் ராசிக் பரீத்துடைய அரசியல் சேவையை பொறுத்த வரையிலும் அவர் ஆரம்ப காலத்தில் அரசியலில் ஈடுபட்டு வர்த்தக அமைச்சராக இருந்தார். அதன் பின்பு கிழக்கு மாகாணத்தில் போட்டியிட்டு தோல்வியுற்றார். ஆனால் அவர் கிழக்கு மாகாணத்தை மறக்கவில்லை. இன்று அட்டாளைச்சேனையில் இருக்கின்ற ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அவருடைய சிந்தனையில் உருவாக்கப்பட்டது. இன்று கொழும்பு பம்பலப்பிட்டியில் இருக்கின்ற முஸ்லிம் மகளிர் கல்லூரியானது சேர் ராசிக் பரீத் தனது சொந்தக் காணியை அன்பளிப்புச் செய்து அப்பாடசாலையை உருவாக்கினார். ஆகப் பெரிய தனவந்தரின் மகனாப் பிறந்த சேர் ராசிக் பரீத் அவர் மரணிக்கும் போது அவருக்கென்று எந்தவொரு சொத்தும் இல்லாமல் மரணம் எய்தினார்.

அதே போன்றுதான் தாபகத் தலைவர் அஷ்ரஃப், கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் தேவையறிந்தவராகக் காணப்படுகின்றார். அவர் கிழக்கு மாகாணத்தில் ஒலுவிலுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை உருவாகக்கினார். அவர் அவற்றை பல சவால்களுக்கும் அர்ப்பணிப்பு தியாங்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பினார். இன்று அந்தப் பல்கலைக்கழகம் இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு சமனாக வளர்ந்து வீறு நடைபோடுகின்றது.

இப்பல்கலைக்கழகம் முழு நாட்டிலும் உள்ள முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி மறுமலர்ச்சிக்காகவும் ஏனைய சகோதர சிங்கள, தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காகவும் சிறந்து விளங்குகின்றன.

கிழக்கு மாகாணத்திலுள்ள கடற்றொழில் துறையை ஊக்குவிப்பதற்காக ஒலுவிலில் துறைமுகத்தைக் கொண்டு வந்தார். அவர் இதனை கட்டியெழுப்புவதில் பெரும் சவால்களை எதிர்நோக்கினார். அதை நான் அவருடன் அருகில் இருந்து அறிந்தவன் என்ற வகையில் கூறலாம். அவரிடம் தொலை தூர சிந்தனை இருந்தது. அவர் கிழக்கு மாகாணம் செல்லும் போதெல்லாம் அவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மீது மிகுந்த கவனம் செலுத்தி அங்கு சென்று பார்வையிட்டு வருவார். 1990 களில் தமிழ் தீவிரவாதிகளால் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா போன்ற பிரதேசங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அவர் பெரு எண்ணிக்கையிலான மக்கள் புத்தளம் பிரதேசத்திலேயே மீள் குடியேற்றப் பட்டார்கள். இந்த அகதி மக்களை புத்தளத்தில் குடியேற்றிய தருணத்தில் அஷரஃப் அவர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. அவற்றை முறியடித்து அம்மக்கள் தங்குவதற்கான இடைத் தங்கல் முகாமைகளையும் அவர்களுடைய வாழ்வாதார அடிப்படை வசதிகளையும், உலருணவு வசதிகளையும் மீள் குடியேற்ற வீடமைப்பு வசதிகளையும் கல்வி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் அதற்கு முகம் கொடுத்து அதை மதி நுட்பத்தோடு கையாண்டு வெற்றிபெறச் செய்கின்ற சாணக்கியம் அஷ்ரஃப் அவர்களுக்கு இயல்பாகவே தொடர்ந்து இருந்து வந்துள்ளதை நான் அவதானித்து வந்துள்ளேன்.

ஏனென்றால், அவருடன் எல்லா விடயங்களிலும் இருந்துள்ளேன்.

இன்றுவொரு எந்தக் கட்சியைச் சார்ந்த முஸ்லிம் தலைவராக இருந்தாலும் அவற்றை இலகுவாக வெற்றிக் கொள்கின்ற தன்மை கிடையாது. அதனால்தான் பல பிரச்சினைகளுக்கு சமகாலத்தில் முகம் கொடுக்க இயலாமற் போயிற்று. அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸின் என்ற கட்சியின் தலைவராக இருக்கவில்லை. அவர் சிறந்த ஆளுமையுடன் செயற்பட்டதன் காரணமாக இந்நாட்டின் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் தலைவராக மாறினார். இந்த உயர் நிலையை இதற்கு முன்னுள்ள அரசியல்வாதிகளாலும் எட்ட முடியாது. அது யாராக இருக்கலாம். எல்லா மூத்த அரசியல்வாதிகளையும் விஞ்சிய தலைவராக மதிக்கப்பட்டார். அவர் மரணம் எய்தும் வரையிலும் முஸ்லிம்களுடைய தலைவராக அவர் பேசப்பட்டார். அவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகப் பேசப்படவில்லை. முஸ்லிம்களின் தலைவராகப் பேசப்பட்டார்.

அவர் பாராளுமன்றத்தில் மிகவும் நீண்டதொரு உரையினை ஆற்றி இந்நாட்டிலுள்ள சகல சிங்கள, தமிழ். முஸ்லிம், கிரிஸ்தவ அனைத்து மக்களினதும் அபிமானத்தைப் பெற்றார். அவர் முஸ்லிம்களுடைய உரிமைகளையும் அபிலாஷைகளையும். முஸ்லிம்களுடைய எதிர்காலத்தையும், விருப்பு வெறுப்புக்களையும் பற்றி பேசி ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுடைய தலைவர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார். அவருடைய நடவடிக்கைகளால் எங்களுடைய உரிமைகளுகம் மதிக்கப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முதல் தினத்தில் ஆர். பிரேமதாசவுடன் அஷ்ரஃப் இடையே முக்கியமான சந்திப்பு இடம்பெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆர். பிரேமதாசவுடன் சேர பெற வேண்டுமாயின் விகிதாசாரத் தேர்தல் முறையில் இருக்கின்ற 12 விகித வெட்டுப் புள்ளியை ஐந்து விகிதமாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்தார். அந்தவகையில் ஆர். பிரேமதாச அதற்கு இணக்கம் தெரிவித்தார். அன்று இரவே நள்ளிரவு 12.30 மணியளவில் உரிய அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மறுநாள் பாராளுமன்றத்தில் அந்த மசோதா சமர்ப்பிக்கப்பட்டு பாராமன்றத்தில் ங்கீகாரத்துடன் அத்தினத்தில் வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதனால் தான் இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை எல்லாவிடயங்களிலும் நேரடியாக கண்டவன், பங்குபற்றியவன் என்ற வகையில் இப்படி அஷ்ரஃப் அவர்களுடைய ஆளுமையும் அரசியல் சாணக்கியம் பற்றி கூறுவது என்றால் எவ்வளவோ நிறையக் கூறலாம்.

அப்பொழுது நிறையக் காலங்களை கொழும்பிலும் கண்டியிலும்தான் களித்தேன். கொழும்பில் இரவு நள்ளிரவு 12 மணி வரையும் வேலை செய்து விட்டு மீளவும் கண்டிக்கு வருவேன். இப்படி அங்குமிங்கும் ஓடுவதால் பல பொருளாதார கஷ்டங்களும் இருந்தன. எனது இல்லத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், அவருடன் வருபவர்கள் அல்லது அந்தக் கட்சியின் சாதாரண போராளியாக இருந்தாலும் தங்க வைத்து ஆதரவு செய்து அனுப்பி வைப்பேன். என்னை எனது வீட்டுக்கு வாருங்கள், ஒருவேளை சாப்பாடு தின்று விட்டுச் செல்லுங்கள் என்று கூறுவதற்கு யாருமில்லை. ஒரு நாள் இரவு கூட்டத்தை முடித்து விட்டு கொழும்பில் இருந்து கண்டிக்கு வந்தேன். மாவனல்லைக்கு வரும் போது எனக்கு சரியான தூக்கம். வாகனத்தை ஓரமாக நிறுத்தி வைத்து விட்டு நானும் துணைவியாரும் தூங்கினோம் அப்பொழுது என் மனைவியும் கூட வந்திருந்தார். பொலிஸார் வந்து வாகனத்தின் யன்னலைத் தட்டி எழுப்பினார். யாரோ புதிய ஜோடி ஒன்று வாகனத்தில் உட்கார்ந்து இருந்து கதைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற யோசனையில் விசாரித்தார். அதற்கு நான் தூக்கம் காரணமாக சற்று ஓரமாக இங்கு தரித்து நிற்கின்றோம் என்றேன். அதாவது குறிப்பாக சாரதி ஒருவரை வைத்துக் கொண்டு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலே பொருளாதார நெருக்கடியான சூழலில் அதிகளவு தூக்கத்தைத் துறந்து கட்சிக்காக அயராது பாடுபட்டுள்ளேன். அஷ்ரஃப் இது குறித்து நன்கு அறிந்திருந்தார். ஆதலால்தான் அவருடைய மனதில் நல்ல இடத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டேன்.

ஆனால் கட்சிக்காக தியாகம் செய்தவர்கள் நான் மட்டுமல்ல. ஹஸன் அலியாக இருக்கலாம். அதாவுல்லாவாக இருக்கலாம், இப்படி எத்தனையோ பேர் இருந்தார்கள். அவர்கள் இப்பொழுது கட்சியுடன் இல்லை. ஆதலால் கட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது.

எங்களுடைய கட்சியின் மேன்மைக்காக உழைத்தவர்களில் நான் ஹஸன் அலி அவர்களைப் பார்க்கின்றேன். அஷ்ரஃப் அமைச்சராக இருந்த போது அவர் பிரத்தியேகச் செயலாளராக இருந்தார். அந்த இடத்தில் பேரியல் அஷ்ரஃப் இல்லை. அவர் கட்சி வேலைகளுடன் அமைச்சுப் பணிகளையும் செய்து கொண்டிருந்தார்.



அவர் சிறிய சம்பளத்துடன் துறைமுக அதிகார சபையில் கடமையாற்றினார். அஷ்ரஃப் அவர்கள் மரணம் அடையும் வரையிலும் ஹஸன் அலியுடன் மிகுந்த நம்பிக்கையோடு கொண்டிருந்தார். அதே போன்று ஹஸன் அலியும் நானும் மிகுந்த நட்புறவோடு கட்சியின் மேம்பாட்டுக்காக பங்காற்றினோம். அதே போன்று ரவூப் ஹக்கீம் அவர்களுடனும் மிகுந்த விசுவாசத்தோடு நடந்தார். அதே போன்று என்னை விடவும் ரவூப் ஹக்கீமுடன் மிகுந்த உறவைக் கொண்டிருந்தார். ஆனால் அந்த விசுவாசம் நட்புறவு நீண்ட நாள் தொடர்ந்து இருக்க முடியவில்லை. ஆகவே அவர் கட்சியின் செயலாளராக கடமையாற்றியவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.



கட்சியின் வளர்ச்சிக்காக தொண்டாற்றியவர்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்க வேண்டும். அது நடைபெறாமையின் காரணமாக கட்சி வீழ்ச்சியடைந்தது.திரும்பவும் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் கட்சி விட்டு கட்சி தாவும் அங்கத்தவர்களாக காணப்பட்டு வருகின்றார்கள். கட்சியின் தலைமைத்துவம் கட்சியின் கட்டுப்பாட்டை இல்லாமற் செய்து விட்டது என்று தான் கூறலாம்.

ஒரு தடவை முஸ்லிம் காங்கிரஸின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மதுபானசாலை திறப்பதற்கான அரசாங்க அனுமதிப் பத்திரம் ஒன்றை அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்டு ஒரு தமிழ் வியாபாரிக்கு பெரும் தொகைப் பணத்திற்கு அதனை விற்பனை செய்து விட்டார். அந்தச் சம்பவத்தை அஷ்ரப் கேள்வியுற்றதுடன் உயர் கட்சி பீடத்தை அவசரமாகக் கூட்டி அவரை அழைத்து மிகவும் காரசாரமாகப் பேசியதுடன் கடினமான முறையில் பெற்ற பணத்தை நாளைக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். தனக்கு வழங்கிய மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை இல்லாமற் செய்ய வேண்டும் என்று கடுமையான உத்தரவினைப் பிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து அவர் மறுநாள் காலையில் அதனைச் செய்தார். அவர் கட்சியை விட்டு விலகிப் போகவில்லை.

அஷ்ரஃப் பற்றி இன்னுமொரு விடயத்தையும் கூறலாம். அதாவது மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தொப்பி முகைதீன் அவர்கள் அடிப்படையில் ஸ்ரீ லாங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தவர். அவர் ஏதோ ஒரு கூட்டத்தில் அதிகளவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பற்றி உரையாற்றியுள்ளார். அவர் இதனை எங்கேயோ ஓர் இடத்தில் இருந்து இவருடைய பேச்சை அவதானித்து மறுகணம் கட்சியின் உயர் பீடக் கூட்டத்தைக் கூட்டி அவரை அழைத்து அவர் பேசியதற்காக மன்னிப்புக் கூறவைத்தார், அப்பொழுது கட்சியில் இருப்பது என்றால் கட்சிக்கு விசுவாசமாக இருங்கள் இல்லா விட்டால் கட்சியை விட்டு வெளியேறுங்கள் என்று சொன்னார். இதற்குப் பிறகு அவ்வாறு நடக்கமாட்டேன். மன்னித்துக் கொள்கின்றேன் என்று அவர் எல்லோர் முன்னிலையும் கருத்து தெரிவித்தார்.அஷ்ரஃப் அவர்கள் மிகவும் நுணுக்கமாவும் கட்சியின் ஒழுக்கத்தையும் கட்சியின் கட்டுப் பாட்டையும் வைத்திருந்தார் அஷ்ரஃப் அவர்கள். அதனால் தான் கட்சி படிப்படியாக கட்சி மேலே நகர்ந்து வந்தது. அவருடைய காலத்தில் எத்தனையோ சவால்களையும் வெற்றிக் கொண்டு மாற்றங்களையும் தரிசித்து விட்டோம் என்றார்.

**தொடரும்....**

**இக்பால் அலி**

## உதவி விவசாய பணிப்பாளர் பாராட்டி கௌரவிப்பு



**(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த ஒன்பது வருடங்களாக ஆசிரியர் சேவையாற்றி வந்த ஆசிரியர் ஏ. பேரின்பராசா விவசாயத் துறை போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு உதவி விவசாயப் பணிப்பாளராக தற்போது பதவி உயர்வு பெற்றுள்ளமையினை பாராட்டி கௌரவிக்கும் வைபவம் நேற்று (12) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவி விவசாயப் பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டு பதவி உயர்வு பெற்றுள்ள ஏ.பேரின்பரசா பாடசாலையின் ஆளணியினரால் நினைவுச் சின்னம் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பாடசாலை நலன்புரி அமைப்பின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது, பாடசாலை கல்விச் செயற்பாடுகளில் அவர் தன்னலமற்ற சேவையினை புரிந்தமை தொடர்பிலும், பாடசாலையின் ஆளணியினருடன் பரஸ்பரம் ஒற்றுமையுடனான உறவினைப் பேணியதுடன், பாடசாலை நிருவாக செயற்பாடுகளுக்கும் தன்னாலான பூரண ஒத்துழைப்புகளையும் நல்கியமை பற்றியும் இதன்போது அதிபர் தலைமையிலான ஆளணியினர் பிரஸ்தாபித்து உரையாற்றிமை குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயக பங்குதாரர்களை உருவாக்கி மக்கள் மத்தியில் தெளிவூட்டல்

**(ஆரையம்பதி தினகரன் நிருபர்)**

கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தினை உருவாக்குதல் எனும் தொனிப் பொருளில் அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பிரதேச சிவில் அமைப்புகள் இளைஞர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து 45 நாட்களுக்கு ஒரு முறை கலந்துரையாடல்களையும் ஏற்படுத்தி அவர்களின் ஊடாக மக்களுக்கு முறையான தெளிவூட்டல் சென்றடைவதற்கான வழிமுறைகளை கையாள்வதற்கு துறை சார்ந்த வளவாளர்களின் கருத்துரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி தம்பலகாமம், கந்தளாய் கிண்ணியா போன்ற பிரதேசங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழச்சேனை, வாகரை,செங்கலடி, வெல்லாவெளி பிரதேசமும் உள்வாங்கப்பட்டு வெல்லாவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்திலும் அண்மையில் இச்செயலமர்வு இடம் பெற்றது.



இப்பிரதேசத்தின் குறைபாடுகள் இதன் கட்டமைப்பு மக்கள் மத்தியில் இருக்கின்ற ஆதங்கங்கள் பற்றிய தெளிவூட்டல் பற்றி ஆராயப்பட்டதுடன் அவர்களுடைய குறைபாடுகளும் கேட்டறியப் பட்டன.

இந்நிகழ்வு அகம் மனிதாபிமான வளநிலைய பிரதி இணைப் பாளர் ஏ. மதன் தலைமையில் இடம்பெற்றது.

## நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது மக்களின் கடமை



நம் இலங்கைத் திருநாடு ஒரு காலத்தில் வளம் கொழிக்கும் நாடாக இருந்தது. பொருளாதாரத்தில் மிக வலிமையான நாடாக திகழ்ந்தது. பின்னர் இத்தனையும் தலை கீழாக மாறிவிட்டன. இது வேதனையான விஷயம்.

இத்தனைக்கும் காரணம் கடந்த ஆட்சியாளர்களின் நிர்வாக திறனற்ற ஆட்சியாகும். இந்த அவல நிலை மாற வேண்டும். நம் இலங்கைத் திருநாடு பொருளாதாரத்தில் வளமாக வேண்டும். விலைவாசி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். அந்நிய செலாவணி மூலம் நாட்டில் ரூபாயின் மதிப்பு உயர வேண்டும். அந்நிய நாட்டு மூதலீடுகள் ஈர்க்கப்பட்டு பல புதிய தொழில்களுக்கு வித்திடப்பட வேண்டும்.

இதற்கு எல்லாம் தீர்வு ஏற்பட வேண்டும் என்றால் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி நீடிக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் விலைவாசி கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பொருளாதாரம் வலுவாக உள்ளது. இறக்குமதிக்கான தடையின் பெரும் பகுதி நீக்கப்பட்டு விட்டது. அமைதிப் பூங்காவாக நம் நாடு மாறிவிட்டது. இனவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டது. அண்டை நாடுகளுடன் சுமுகமாக உறவு பேணப்படுகிறது.

பல்வேறு நாடுகளுடன் உறவு பலப்படுத்தப்பட்டு நல்லுறவு நிலவுகிறது. பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தருகின்றனர். அதனால் நாட்டிற்கு வருமானம் எட்டப்பட்டுள்ளது. ம

ஆகையால் மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளிப்பது மக்களின் கடமையாகும்.

***அஷ்ஷெய்க் மௌலவி சதீக் (முப்தி)***
***தலைவர் சிறீலங்கா ஐக்கிய முன்னணி கட்சி***

## தேசிய ஷூரா சபை சஜித் பிரேமதாசவுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிப்பு



தேசிய ஷூரா சபை பிரதிநிதிகளுக்கும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்குமிடையிலான விசேட சந்திப்பொன்றுநேற்று(12)கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

தேசிய மட்டத்தில் செயற்படும் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியமான தேசிய ஷூரா சபை ஜனாதிபதி வேட்பாளர்களை சந்தித்து மகஜரை கையளிக்கும் தொடரிலே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான இருபத்தேழு விடயங்கள் அடங்கிய மகஜர் ஒன்று ஷூரா சபையால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு கையளிக்கப்பட்டது.

கொவிட் ஜனாசா மற்றும் பலஸ்தீன் விவகாரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் எடுத்த தீர்மானங்கள், நடவடிக்கைகளுக்காக முஸ்லிம் சமூகம் சார்பாக தேசிய ஷூரா சபையின் பிரதிநிதிகள் தமது நன்றியையும் பாராட்டுக்களையும் இதன் போது தெரிவித்துக் கொண்டனர்.

முஸ்லிம் சமூகத்தை பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் தாம் ஏற்கனவே தலையிட்டு பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்பியுள்ளதாக சஜித் பிரேமதாச இந்த சந்திப்பின் போது தெரிவித்தார். கொவிட் தொற்று பரவல் ஏற்பட்ட சமயத்தில், பல தலைவர்கள் மௌனம் காத்து வந்த சந்தர்ப்பத்தில், முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதற்கு எதிராக, அந்த அநீதிக்கும் பாகுபாட்டுக்கும் எதிராக வீதியில் இறங்கிப் போராடினோம். இவ்வாறு போராடிய ஒரே தேசியக் கட்சியும், அரசியல் தலைமையும் தாமே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேசிய ஷூரா சபையின் பிரதித் தலைவர் எச்.எம்.எம்.ஹசன், தேசிய ஷூரா சபையின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், தேசிய ஷூரா சபையின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர் என். எம். ஷாம் நவாஸ், செயற்குழு உறுப்பினர் பாஹிம் உள்ளிட்டோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் எதிர்க்கட்சித் தலைவரின் சமூக நல மேம்பாடு மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள் தொடர்பான ஆலோசகர் கலாநிதி ரூமி ஹாசிமும் இதில் கலந்து கொண்டார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இலக்கியக்களம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியக்குழுச் செயலாளர் தெ. மதுசூதனன் தலைமையில் இன்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "கலாயோகி ஆனந்தக் குமார சுவாமியின் கலைச்சிந்தனைகள்" எனும் தலைப்பில் பேராசிரியர், ஓவியர், கலை விமர்சகர், மருத்துவர் கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன் உரை நிகழ்த்துவார்.

## கொழும்பு சென்ரல் வீதியில் 34ஆவது மௌலீத் மஜ்லிஸ்

உத்தம் தூதர் (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள மௌலீத் தமாம் மஜ்லிஸ் வைபவம் மத்திய கொழும்பு 12, பிரதான வீதி, சென்ட்ரல் ரோட் 139ஆவது ஒழுங்கையில் இவ்வருடமும் அதாவது, 34ஆவது வருடமாக எஸ். எம்.ஏ. முத்தலிப் தலைமையில் இடம்பெற்று வருகிறது.

ரபியுல் அவ்வல் 12 நாட்களாக உலமாக்கள் மௌலீத் ஓதி இம் மஜ்லிஸ் ஏற்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள், தோட்டத்து மக்கள் அனைவர்களினதும் ஒத்துழைப்போடு எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு இல. 139 ஆம் தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றை தினம் இந்நிகழ்ச்சியில் பெருமானார் ஸல் அவர்களின் குண நலங்கள், வாழ்க்கை வரலாற்றைப் பற்றி மௌலவி மபாஸ் நூழாரி (விரிவுரையாளர், அரூஸியா மகளிர் அரபிக் கல்லூரி) அவர்கள் சிறப்புரை யாற்றுவார்.

## எதுன்கஹகொட்டுவ மு. கல்லூரியில் ஊடகப்பிரிவு அங்குரார்ப்பணம்



குருணாகல் மாவட்டம், குளியாப்பிடிய எதுன்கஹகொடுவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் ஊடகப்பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வும் ,மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வும் கல்லூரி அதிபர் எம். ஆர். எம். ரிப்கான் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக ஜே. எம். மீடியா நிறுவனத்தின் தலைவர் சட்டமாணி ராஷிட் மல்ஹர்தீன் கலந்து சிறப்பித்தார்.அவர், மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்தி பாடசாலை ஊடகப் பிரிவை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கான அறிவுரைகளை வழங்கியதோடு, தலைமைத்துவப் பண்புகள் மற்றும் ஊடகத்தின் முக்கியத்துவம் பற்றியும் தெரிவித்தார்.



இவ்வருடம் இடம்பெற்ற அகில இலங்கை முஸ்லிம் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கலாசார போட்டி நிகழ்ச்சியில் இறக்காமம் கமு /சது/ அல் அஷ்ரப் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மர்ஹபா பைத் போட்டி நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது. இதனை வழிபடுத்தி நடத்திய உதவி அதிபர் ஏ.எம்.எஸ். இர்பானா, ஆசிரியர் ஐ. ரபீக் பயிற்றுவிப்பாளர்களான எம்.எம். ஹிஜாஸ் அஹமட், அஹமட் அர்சித், ரீ.இல்ஹாம் அஹமட் மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய பாடசாலை மாணவர்களையும் படத்தில் காணலாம்.

**(படம் இறக்காமம் தினகரன் நிருபர்)**


**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கட்டிடங்கள் திணைக்களம்**

### கேள்விகளுக்கான அழைப்பு

**இரத்தினபுரி, ''எஹெல்லேபொல வளவ்வ'' தேசிய நூதனசாலை கூரை புதுப்பித்தல் வேலைகள் (வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதன் பிரகாரம் வடிவமைப்பு மற்றும் நிர்மாண அடிப்படையின் மீது இரத்தினபுரி, ''எஹெல்லேபொல வளவ்வ'' தேசிய நூதனசாலை கூரை புதுப்பித்தல் வேலைகள் (ஒப்பந்த இல. BD-0092sp01-Z6/CT 060/24) எனும் வேலைகளுக்காக தகைமையும் தகுதியும் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை கட்டிடத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகிறார். நிர்மாணக் காலம் 274 நாட்கள்.
2. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் முறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கேள்விகள் மூடப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) விசேடத்துவ நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். குறித்த பதிவானது ஒப்பந்தம் வழங்கும் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம். தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 091-2222583, தொலைமடல்: 091-2234838
5. மீளளிக்கப்படாத கட்டணமாக இருபதாயிரம் ரூபாவை (ரூபா 20,000.00) 2024-09-18ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் காலி, இல. 10, அப்பர் டிக்சன் வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 6), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. கேள்விகளை 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கட்டிடங்கள் திணைக்களம், 2ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பத்தரமுல்ல, செத்சிறிபாய, 2ம் மாடி, கட்டிடங்கள் திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் கேள்வியில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலம் முதல் 91 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் V பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 1,500,000.00 ரூபா தொகைக்கு
   * 2025 பெப்ரவரி 05ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. K.G.S. குமுதினி,**
**கட்டிடங்கள் பணிப்பாளர் நாயகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**''செத்சிறிபாய'',**
**பத்தரமுல்லை.**



### பெறுகை அறிவித்தல்

**தேசிய மனநல நிறுவனம் - முல்லேரியா புதிய நகரம்**

**விலைக்கோரலுக்கான அழைப்பு**

01. தேசிய மனநல நிறுவனத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்காக முன் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | உருப்படி | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | Ultrasound Therapy Machine | 01 | ரூ, 2,000.00 | ரூ. 40,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைக்கோரல் இடம்பெறும்.

03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களை 2024-10-02ஆம் திகதி வரையான அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை முல்லேரியா புதிய நகரம், தேசிய மனநல நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2024-10-02ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரைக்கிடையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, தேசிய மனநல நிறுவனம் எனும் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் செய்யப்படும் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைக்கோரல் பிணை முறியை விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி வரையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''Ultrasound Therapy இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல்'' எனவும் மற்றும் பெறுகை இலககத்தையும் குறிப்பிட்டு 2024-10-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே (2024-10-03) பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. விலைக்கோரல் படிவங்கள் தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112-578234/5/6/7 (நீடிப்பு 406/404) எனும் தொலைபேசி இலக்கத்தில் தேசிய மனநல நிறுவனத்தின் கண்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் படிவங்கள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது விலைக்கோரல் மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத இந்த பெறுகை விடயங்களுக்கு இயைபான எந்தவொரு விடயம் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய மனநல நிறுவனத்தின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

08. விலைமனுக்களைத் தயாரித்தல் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்காகவும் பெறுகைக் குழு பொறுப்புகூறாது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியா புதிய நகரம்.**



### பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்லல் 2025ஆம் ஆண்டு**

சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2025ஆம் ஆண்டிற்காக சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக அவற்றில் அனுபவமுள்ள நபர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி விண்ணப்பங்கள், கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர்/காசாளரிடம் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுடன், தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2024.09.03ம் திகதி முதல் 2024.10.03 வரை மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்வி விண்ணப்பங்கள் மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியாக தயாரித்து இரு உறைகளில் இட்டு அவ்உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு பொறியிட்டு இடது பக்க மேல் மூலையில் 2025ம் ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல் மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம் என்று குறிப்பிட்டு 2024.10.04 பி.ப. 10.00 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
3. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ்இடத்திலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ் இடத்திற்கு சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
4. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
5. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களை அழையுங்கள்.

   (தொ. பே. இலக்கம் - 032 2222261, 032 2222721)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**



**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**சப்ரகமுவ**

### கேள்வி கோரல்

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | கேள்விப் பிணை (ரூ.) | காலம் |
|---|---|---|---|
| RDA/SAB/PD/TEN/CON/2024/12 | புளத்கொஹுபிட்டிய தேதுஹல வீதி கார்பட் 500MT வழங்கி பரப்புதல் (10+707km-11x694km) | 242,500.00 | 01 மாதம் |

பிரதம பொறியியலாளர் கேகாலை அலுவலகத்திற்குச் சொந்தமான மேற்படி வீதியின் பராமரிப்பிற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 செப்டெம்பர் 13 முதல் 2024 செப்டெம்பர் 29 பிற்பகல் 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் இருந்து கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் கீழ்க்காணும் தொ.பே. இலக்கம் அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாகாண பணிப்பாளர் பணிமனை (சப்ரகமுவ),**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இரத்தினபுரி.**

**தொ.பே. இல. 045-2222608**

தினகரன் THINAKARAN தினகரன்

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், வட மத்திய மாகாணம்
### உலக வங்கி மற்றும் ஐ.ஒ. நிதியளிக்கப்பட்டது

**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP)**

**PROJECT ID P-163305**

1. உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்ட செலவை நோக்கி உலக வங்கியிடம் இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு பின்வரும் ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்தப் பகுதியை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
   - ➢ மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய **8 Ton Double Drum Vibrator Roller** இன் வழங்கல்
   - ➢ மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய **Motor Grader** இன் வழங்கல்
   - ➢ மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய **Tractor Mounted Low Bed Trailer** இன் வழங்கல்
   - ➢ கஹட்டகஸ்திகிலிய, கெக்கிராவ, தலாவ மற்றும் நுவரகம்பலாத்த மத்திய பிரதேச சபைக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையங்களுக்காக தளபாடங்களை வழங்கல்
   - ➢ கல்நேவ, கெக்கிராவ மற்றும் தலாவ பிரதேச சபைகளுக்கு **Multi Play Station** இன் வழங்கல் மற்றும் பொருத்துதல்
   - ➢ அலுவலக உபகரணங்களின் வழங்கல்
2. மேல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்திற்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் சார்பில் மாகாண திட்டப் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. ஒப்பந்தம் வழங்குதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஆர்வமுடைய வழங்குநர்கள் வார நாட்களில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை அநுராதபுரம், ஹரிச்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து (தொலைபேசி: 025-2234728, தொலைநகல் - 025-2234738, மின்னஞ்சல்: ncplg2020@gmail.com) மேலதிக விபரங்களை பெறலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000.00 ரூபாவை செலுத்தி 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒக்டோபர் 03 ஆம் திகதி வரை அநுராதபுரம், ஹரிச்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிட வளாகம், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்கள, பிரதிப் பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர் இடமிருந்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
7. 2024.10.04 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் பிரதி பணிப்பாளர் நாயகம்/ ஆணையாளர், வ.ம.மா. – உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபை கட்டிட வளாகம், ஹரிச்சந்திர மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். தொடர்புடைய திட்டங்களுக்கான விலைமனு பிணை தொகை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


| உருப்படி இல. | பொருட்களின் உருப்படி விபரம் | அளவு | வலைமனு செல்லுபடி | விலைமனு பிணைக்கான தொகை (ரூபா) | விலைமனு பிணையின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய 8 Ton Double Drum Vibrator Roller இன் வழங்கல் | 01 | 05.12.2024. | 100,000.00 | 02.01.2025 |
| 02 | மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய Motor Grader இன் வழங்கல் | 01 | 05.12.2024. | 200,000.00 | 02.01.2025 |
| 03 | மிஹிந்தலை பிரதேச சபையில் புத்தம் புதிய Tractor Mounted Low Bed Trailer இன் வழங்கல் | 01 | 05.12.2024. | 50,000.00 | 02.01.2025 |
| 04 | கஹட்டகஸ்திகிலிய, கெக்கிராவ, தலாவ மற்றும் நுவரகம்பலாத்த மத்திய பிரதேச சபைக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையங்களுக்காக தளபாடங்களை வழங்கல் | - | 05.12.2024. | 45,000.00 | 02.01.2025 |
| 05 | கல்நேவ, கெக்கிராவ மற்றும் தலாவ பிரதேச சபைகளுக்கு **Multi Play Station** இன் வழங்கல் மற்றும் பொருத்துதல் | 03 | 05.12.2024. | 50,000.00 | 02.01.2025 |
| 06 | அலுவலக உபகரணங்களில் வழங்கல் | - | | | |
| | கூறு 01 புத்தம் புதிய மடிக் கணினி | 19 | 05.12.2024. | 53,000.00 | 02.01.2025 |
| | கூறு 02 புத்தம் புதிய மேசைக் கணினி | 21 | 05.12.2024 | 59,000.00 | 02.01.2025 |
| | கூறு 03 Branded UPS | 36 | 05.12.2024 | 3,000.00 | 02.01.2025 |
| | கூறு 04 டுப்ளோ அச்சுப்பொறி | 1 | 05.12.2024 | 5,000.00 | 02.01.2025 |
| | கூறு 05 Duplex Ink Jet Printer | 11 | 05.12.2024 | 6,100.00 | 02.01.2025 |
| | கூறு 06 Smart Interactive Panel | 4 | 05.12.2024 | 18,000.00 | 02.01.2025 |
| | கூறு 07 DPL Multi Media Projector | 3 | 05.12.2024 | 5,000.00 | 02.01.2025 |

9. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 செப்டெம்பர் 27 ஆம் திகதி மு.ப. 11.00க்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம், மாகாண சபை கட்டிட வளாகம், ஹரிச்சந்திர மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரியில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் தமது சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

**பிரதித் திட்டப் பணிப்பாளர் (LDSP),**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**மாகாண சபை கட்டிட வளாகம்,**
**தர்மபால மாவத்தை,**
**அநுராதபுரம்.**

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல்மாகாணம்)

**பப/ஜய/மாதிபெல ஸ்ரீராஹுல கல்லூரி விளையாட்டு மைதானத்தின் புல் வளர்ப்பு தளத்தை தயாரிப்பதற்கான மூலப் பொருட்களை வழங்குதல்**

**PRDA/WP/PRO/2024/61**

| S/No | Item | Unit | Quantity | கேள்விப்பிணை பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக (ரூ.) | வங்கி/காப்புறுதி பிணை மூலம் |
| 01 | Supplying of Bermuda Grass Including Transport | Sqm | 1200 | | |
| 02 | Supplying Suitable Top Soil for (Turfing) Including pilling & Transport | Cum | 135 | | |
| 03 | Supplying Poultry Manure Including Pilling & Transport | Cum | 45 | | |
| 04 | Supplying River Sand Including Pilling & Transport | Cum | 45 | 25,000.00 | 50,000.00 |
| 05 | Supplying Coir Dust Including Pilling & Transport | Cum | 45 | | |
| 06 | Supplying Dolomite (50kg Bags) Inclucing Transport | Bag | 15 | | |
| 07 | Supplying Phosphate (50kg Bags) Including Transport | Bag | 15 | | |
| 08 | Supplying Atermonice Liquid Including Transport | Ltr | 15 | | |

02. மேற்படி கேள்வி ஆவணத் தொகுதியை 2024.09.13 முதல் 2024.09.27ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணம் . 1209.50 இற்கு உட்பட்டு இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல.03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றல் மற்றும் திறத்தல் 2024.09.30 மு.ப. 10.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல. 59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12,**

**தொலைபேசி இலக்கம்: 011 - 5676903**

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

**புத்தசாசன, மதவிவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

### தேசிய சுவடிகள் திணைக்களத்திற்கு நடமாடும் ராக்கை அமைப்பை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்

**ஒப்பந்த இலக்கம்: DNA/2/MA2/1/1/5**

2024 ஆகஸ்ட் 28ஆம் திகதிய தினகரன், தினமின மற்றும் டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கான அழைப்பில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| IFB 4ஆம் பந்தியின் 3ஆம் Bullet | விலைமனுதாரர் பின்வருவனவற்றில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>கடந்த பன்னிரண்டு (12) வருடங்களில் ராக்கை அமைப்புகளில் வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் ஆகக் குறைந்தது 35 மில்லியன் ரூபா பெறுமதியான, ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்தத்தை செய்த அனுபவத்தை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>நிறுவும் காலம் முழுவதும் ராக்கை அமைப்பை நிறுவுவதற்கு உற்பத்தியாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு திறமையான நபர்/ நபர்கள் நியமிக்கப்படல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட நபர்/ நபர்கள் நிறுவுதல் பணியைக் கையாள்வதற்கும், திருப்திகரமாக நிறைவடைந்ததை சான்றளிப்பதற்கும் உற்பத்தியாளரிடமிருந்து ஒரு கடிதத்தை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். |
| IFB 6ஆம் பந்தி | ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.08.28ஆம் திகதியிலிருந்து 2024.10.02ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000.00 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள தேசிய சுவடிகளுக்கான பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். |
| IFB 7ஆம் பந்தி | விலைமனுதாரர்கள் 2024.08.28ஆம் திகதியிலிருந்து 2024.10.02ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சுவடிகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரின் (நிர்வாகம்) அலுவலகத்தில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். (தொலைபேசி: 071-1037944, 011-2688758) |
| IFB 9ஆம் பந்தி | விலைமனுக்கள் 2025-01-02ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (விலைமனுக்கள் திறக்கப்பட்டதன் பின் 91 நாட்கள்) |
| IFB 10ஆம் பந்தி | சகல விலைமனுக்களுடனும் 2025-01-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் 8,200,000.00 ரூபாவிற்கான விலைக் கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (விலைமனுக்கள் முடிவுறுத்தல் நாள் முதல் 119 நாட்களுக்கு) |
| IFB 12ஆம் பந்தி | கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, 07ஆம் இலக்கம், புதிய கட்டிடம், 1ஆம் தளம், தேசிய சுவடிகள் திணைக்கள கூட்ட மண்டபத்தில் 2024-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு திறக்கப்படும். |

ஆவர்முள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-07, பிலிப் குணவர்தன மாவத்தை, இல. 07, தேசிய சுவடிகள் திணைக்களம், தேசிய சுவடிகள் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 071-1037944, 011-2688758, தொலைநகல்: 011-2693309).

**தேசிய சுவடிகள் பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய சுவடிகள் திணைக்களம்,**
**இல. 07, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு 07.**
2024-09-13.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

(e-NIC செயற்திட்டம்)

## விலைமனுக்கோரல் (IFB)

# Supply, Delivery, Installation & Commissioning of Hardware for Automated Biometric Identification System (ABIS)

**IFB No: DRP/e-NIC/PRO/2024/40**

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை சார்பாக, செயற்திட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **Supply, Delivery, Installation & Commissioning of Hardware for Automated Biometric Identification System (ABIS)**சேவைக்காக தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

2. இம்மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (**NCB**).

3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,** (தொலைபேசி:011-2874626) மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லையில் **2024.09.13 ஆம் திகதி** முதல் **2024.10.10 ஆம் திகதி** வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.

4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

   a. மனுதாரர், ஒரு உள்ளூர் ஏலதாரராக இருந்தால் அல்லது ஒரு கூட்டு முயற்சியில் பங்குதாரராக இருந்தால் கடந்த 5 **ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.**

   b. மனுதாரர் ஒரு உள்ளூர் நிறுவனமாக இருந்தால் அல்லது ஒரு கூட்டு முயற்சியில் பங்குதாரராக இருந்தால் இந்த மனுக்கோரலுக்கு **பணிப்பாளர் குழு மற்றும் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட (POA) சான்றிதழ்** உடன் மனு மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நபருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   c. மனுதாரர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த மனுதாராக இருப்பின் அனைத்து உறுப்பினர் **ISO 9001-2015 (தர மேலாண்மை)** தரத்தில் சான்றிதழைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

   d. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த அனைத்து மனுதாரர்களும் **ISO 27001:2022 (தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புகள்)** சான்றளிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்.

   e. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த அனைத்து மனுதாரர்களும் மனுதாரர் உற்பத்தியாளர் இல்லையென்றால், இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலினை சமர்ப்பிக்கும்போது 1987 **ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ்** பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

   f. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த அனைத்து உறுப்பினர்களும் கடந்த ஐந்து (5) ஆண்டுகளாக **(2020-2024)** இந்த ஒப்பந்தத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளின் தன்மையின்படி வணிகத்தில் இருந்திருக்க வேண்டும்.

   g. மனுதாரர் (தனி மனுதாரர் எனின்) அல்லது கூட்டு முயற்சியில் ஈடுபட்டவராயின் இணைந்த பங்குதாரர் அனைவரும் கடந்த **ஐந்து (05) ஆண்டு காலத்தில் (2019/2020 – 2023/2024).** குறைந்தபட்சம் **LKR 600** மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட வருமானத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

   h. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்தயில் இணைந்த மனுதாரர் குறைந்தபட்சம் **(400 மில்லியன்) நிகர திரவ சொத்துக்கள்** தற்போதைய சொத்துக்கள் - இருப்புநிலை - நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான **கடன் வசதிகளை** வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

   i. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த மனுதாரர் அல்லது அனைத்து உறுப்பினர்களும் கடந்த **ஐந்து (05) ஆண்டுகளாக (2019/2020-2023/2024)** நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட (இலாபம் மற்றும் நஷ்டம் மற்றும் **நிதிநிலை அறிக்கைகளின்** சான்றளிக்கப்பட்ட நகல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

   j. மனுதாரர் இந்த தயாரிப்பின் அசல் உபகரண உற்பத்தியாளரின் **அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக** இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரம் அசல் உபகரண உற்பத்தியாளர்களின் தொடர்பு விவரங்கள் மனு ஆவணத்தில் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பொருந்தினால் அவற்றின் உள்ளூர் முகவர் / விநியோகஸ்தர்கள் மனுதாரரால் தயாரிக்கப்படாத / வழங்கப்படாத உபகரணங்கள், அசல் உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதங்கள் இந்த ஏல ஆவணத்துடன் வழங்கப்பட வேண்டும்.

   k. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த முன்னணி மனுதாரர் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான **திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக்** கொண்டிருத்தல் வேண்டும்.

   l. இந்த கொள்முதலுக்கான மனுக்கோரலில் மனு எடுத்தவர் அல்லது கூட்டு முயற்சியில் இணைந்த முன்னணி மனுதாரர் **பெருநர் கோரியபடி கொழும்பு மற்றும் நுவரெலியா DRDC மற்றும் தரவு நிலையத்திற்கு தேவையான தொடர்ச்சியான சேவைகளை (24 மணிநேரம் மற்றும் 365 நாட்கள்) வழங்க மனுதாரர் ஒரு கிளை வலையமைப்பின் மூலம் செயற்படும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.**

   m. கடந்த **ஐந்து (05) ஆண்டுகளில்** (2020-2024) மனுதாரர் அல்லது மனுதாரர் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள், எதேனும் வழக்குகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றை முன்வைக்க வேண்டும்.

   n. **கடந்த (05) ஐந்து ஆண்டுகளில்** (2020-2024) மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் கறைநிரைப் பட்டியலில் இடம்பெற்றிருக்ககூடாது.

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.10 ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் 09.00 மணியிலிருந்து 03.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.50,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்ட பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.

6. மனுவிற்கு முந்தைய கூட்டம் 2024.09.27 ஆம் திகதி **பி.ப 02.30** மணிக்கு **e-NIC செயற்திட்டம்,ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** கேட்போர் கூடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைத்து ஏலதாரர்களும் முன் ஏல கூட்டத்தில் பங்கேற்கலாம்

7. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.10.11 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **91 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.4,500,000/- மனுக் காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்திட்ட கொள்முதல் குழு,**
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
**"B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**
2024.09.13

SELACINE

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus

Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை - பொலன்னறுவை

பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் கட்டிடத் திருத்தவேலைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் தேசிய சிறுநீரக விசேடத்துவ வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2024-10-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கட்டிட திருத்தவேலைகள்

| இல. | ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | ICTAD தரம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | C சத்திரசிகிச்சையகத்தின் திருத்தவேலைகள் | THP/ACC/F8/ 20-06/2024 | 3,500.00 | C8, C7 மற்றும் C6 | 133,500.00 |
| 2 | புதிய நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் மிகுதி பிரிவுகளில் சீலிங் அமைத்தல் | THP/ACC/F08/ 20-7/2024 | 3,500.00 | C9, C8 மற்றும் C7 | 70,000.00 |

02. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

| இல. | உபகரணத்தின் பெயர் | எண்ணிக்கை | குறிப்பீட்டிலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | Infant Incubator | 05 | THP/ACC/F12/ME/In.Incusa 01/2024 | 3,500.00 | 200,000.00 |
| 2 | Neonatal C-PAP Machine | 03 | THP/ACC/F12/ME/NEO. C-PAP M02/2024 | 3,500.00 | 240,000.00 |
| 3 | Ultrasound Scanner Portable | 01 | THP/ACC/F12/ME/Ul.Sc.P 03/2024 | 3,500.00 | 300,000.00 |
| 4 | Transport Ventilator Neonatal | 01 | THP/ACC/F12/ME/NE.TR.Ve 04/2024 | 3,500.00 | 80,000.00 |
| 5 | Dental Unit Floor Mount | 02 | THP/ACC/F12/Denta.U 05/2024 | 3,500.00 | 160,000.00 |
| 6 | Ultrasonic Scelar Machine | 04 | THP/ACC/F12/ME/Ul.Sc. 06/2024 | 3,500.00 | 40,000.00 |
| 7 | Double Phototherapy Unit LED | 02 | THP/ACC/F12/ME/D.Pho.U.LED 07/2024 | 3,500.00 | 24,000.00 |
| 8 | Single Phototherapy Unit LED | 05 | THP/ACC/F12/ME/S.Pho.U.LED 08/2024 | 3,500.00 | 40,000.00 |
| 9 | Multipara Monitor Basic | 08 | THP/ACC/F12/ME/Mu.Pa.B 09/2024 | 3,500.00 | 128,000.00 |
| 10 | Suction Apperator Double Jar | 01 | THP/ACC/F12/ME/Suc.A.Du.J 10/2024 | 3,500.00 | 8,000.00 |
| 11 | Suction Unit (Vacuum Pump) | 01 | THP/ACC/F12/ME/S.Un 11/2024 | 3,500.00 | 40,000.00 |
| 12 | Anesthetic Machine | 03 | THP/ACC/F12/ME/A.M.Ven 12/2024 | 3,500.00 | 480,000.00 |
| 13 | Microscope Binocular | 03 | THP/ACC/ME/Mic.Bin 13/2024 | 3,500.00 | 36,000.00 |
| 14 | Lontophoresis Machine | 01 | THP/ACC/F12/ME/lon. Ma.14/2024 | 3,500.00 | 8,000.00 |
| 15 | Cystourethroscope | 01 | THP/ACC/F12/ME/Cys.co 15/2024 | 3,500.00 | 90,000.00 |
| 16 | Phaco Machine | 01 | THP/ACC/F12/ME/Pha.ma. 16/2024 | 3,500.00 | 700,000.00 |
| 17 | Q Switched ND YAG Dermatological Laser System | 01 | THP/ACC/F12/ME/D.L.M. 17/2024 | 3,500.00 | 300,000.00 |
| 18 | Air Rotor Hand Piece | 04 | THP/ACC/F12/ME/AI.R.H.P. 18/2024 | 3,500.00 | 6,000.00 |
| 19 | Light Curing Machine | 04 | THP/ACC/F12/ME/Lig.Cu.Ma 19/2024 | 3,500.00 | 40,000.00 |
| 20 | Electro Surgical Unit (Diathemy) | 01 | THP/ACC/F12/ME/ Ele.U.20/2024 | 3,500.00 | 80,000.00 |

03. மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - தேசிய சிறுநீரக விசேட வைத்தியசாலை

| இல. | உபகரணத்தின் பெயர் | எண்ணிக்கை | குறிப்பீட்டிலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | Lead Apron- Large | 05 | NNSH/ACC/F04/L.A.L. 01/2024 | 3,500.00 | 15,000.00 |
| 2 | Lead Apron - Medium | 05 | NNSH/ACC/F04/ L.A.M. 02/2024 | 3,500.00 | 15,000.00 |
| 3 | Lead Apron - Small | 05 | NNSH/ACC/F04/L.A.S. 03/2024 | 3,500.00 | 15,000.00 |
| 4 | Thyroid Shield | 05 | NNSH/ACC/F04/T.S. 04/2024 | 3,500.00 | 12,500.00 |
| 5 | Hat | 05 | NNSH/ACC/F04/Hat 05/2024 | 3,500.00 | 5,000.00 |
| 6 | Goggles | 05 | NNSH/ACC/F04/Gogg. 06/2024 | 3,500.00 | 5,000.00 |

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்காக விலைகளைக் கோருகையில் 50 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த நிர்மாணங்களுக்கு பிராந்திய முன்னுரிமையாக 05% மற்றும் CIDA முன்னுரிமை (Regional Preference) 4/2016(II) அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

02. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விலைமனு ஆவணக் கட்டணமாக இந்த வைத்தியசாலையின் கணக்காளருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது கதுருவெல இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 7040277, DIRECTOR – DISTRICT GENERAL HOSPITAL POLONNARUWA என்ற கணக்கிற்கு பணத்தை வைப்பிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்களைக் கொள்வனவு செய்யும் போது கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள் தவிர கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் உருப்படிக்கு இயைபான விலைக்கோரல் பெறுமதி 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டால், விலைமனுதாரர் அல்லது அவர் சார்பான பிரதிநிதியொருவர், உப பிரதிநிதியொருவர் அல்லது முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் கொழும்பு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்த விலைக்கோரலுக்கு இயைபான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2024-09-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் 02ஆம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ள உத்தேசிக்கும் வழங்குநர்கள் நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் ஊடாக 2024-09-26ஆம் திகதிக்கு முன் dghpolonnaruwapro@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

05. விலைக்கோரல் தனி உருப்படியாக முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் தனி உருப்படியாகவே விலைக்கோரல் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது பதிலீடுகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கூடாது என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

07. ஆர்வம் கொண்ட மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள் / முகவர்கள் அல்லது பெயரிடப்படுபவர்களால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியில் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    i. பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வரையப்பட்ட கடிதத் தலைப்பிலான எழுத்து மூலக் கடிதம்
    ii. மேற்காணும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை பொலன்னறுவை போதனா வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு

08. பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கணக்காளரின் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 362) எனும் தொலைபேசி இலக்கங்களின் வாயிலாக விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-10-07ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கடமை நாட்களில் மட்டும் இந்த வைத்தியசாலையின் பெறுகை மற்றும் மொத்தச் செலவு முகாமைத்துவ பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

09. பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பொலன்னறுவை போதனா வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2024-10-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து (அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு) பொலன்னறுவை போதனா வைத்தியசாலையில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் கலந்து கொள்வாரானால் அதை உறுதி செய்யும் ஆவணத்தை நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. இந்தப் பெறுகை தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**பொலன்னறுவை.**

2024-09-11.

# 2025ஆம் வருடத்திற்கான கேள்வி மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்யும் அறிவித்தல்

## கொடக்கவெல பிரதேச சபை

கொடக்கவெல பிரதேச சபைக்கு சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாரச்சந்தை, மாட்டிறைச்சிக் கடை, மீன் தட்டு கடை அறைகளை 2025.01.01 திகதி முதல் 2025.12.31ஆம் திகதி வரையும் மற்றும் கடை அறைகளை நீண்டகால குத்தகை அடிப்படையிலும் வழங்குவதற்காக என்னால் கேள்விப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் 2025ம் வருடத்துக்காக பொருள் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பதிவு மேற்கொள்ளப்படுகின்றன என்பதுடன் அது தொடர்பான தகவல்களை கொடக்கவெல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப் படிவம் விநியோகித்தல் : 2024.09.11ஆம் திகதி முதல் 2024.09.26ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை
2. கேள்வி ஏற்றுக் கொள்ளல் : 2024.09.11ஆம் திகதி முதல் 2024.09.30ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை
3. கேள்வி திறத்தல் : 2024.09.30ஆம் திகதி மு.ப 11.30 மணிக்கு

கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளாக பூரணப்படுத்தி மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான தபாலுறையினுள் இட்டு மீண்டும் ஒரு தபாலுறையினுள் இட்டு முத்திரை குறியிட்டு 2024.09.30ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக தலைவர், கொடக்கவெல பிரதேச சபை, கொடக்கவெல என்ற முகவரிக்கு அனுப்பலாம் அல்லது பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் உள்ளிடலாம். உங்களால் கேள்விப் பத்திரம் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், சமர்ப்பிக்கப்படும் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

**அட்டவணை இல 01**

| தொ. இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப்படும் கேள்வி பிணை வைப்பு | ஆகக் குறைந்த விலைக் கோரல் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கொடக்கவெல வாரச்சந்தை சனி/ செவ்வாய் | 800.00 | 205017. 50 | 4100350. 00 |
| 02 | இறக்குவானை வாரச்சந்தை ஞாயிறு/ புதன் | 800. 00 | 49620. 00 | 992400. 00 |
| 03 | இறக்குவானை மாட்டிறைச்சிக் கடை | 800. 00 | 65150. 00 | 130300. 00 |
| 04 | கொடக்கவெல வாரச்சந்தை மீன் தட்டு இல. 01 | 800. 00 | 23500. 00 | 470000. 00 |
| | மீன் தட்டு இல. 02 | 800. 00 | 23100. 00 | 462000. 00 |
| | மீன் தட்டு இல. 03 | 800. 00 | 19875. 00 | 397500. 00 |
| | மீன் தட்டு இல. 04 | 800. 00 | 22850. 00 | 457000. 00 |
| | இறக்குவானை பஸ் நிலைய பொது மலசலகூடம் | 800. 00 | 18000. 00 | 360 000. 00 |

**அட்டவணை இல. 02**

| கடை அறைகள் அமைந்திருக்கும் சந்தைக் கட்டிடத் தொகுதி மற்றும் கடை அறை இலக்கம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) ரூபா | ஆகக் குறைந்த விலைக் கோரல் ரூபா |
|---|---|---|---|
| மாதம்பே மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி கடை அறை இலக்கம் 13 | 750. 00 | 6000 | 120 000 |
| கடை அறை இலக்கம் 21 | 750. 00 | 6000 | 120 000 |
| கடை அறை இலக்கம் 22 | 750. 00 | 6000 | 120 000 |

**அட்டவணை இல. 03**

| கடை அறைகள் அமைந்திருக்கும் சந்தைக் கட்டிடத் தொகுதி மற்றும் கடை அறை இலக்கம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபா | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) ரூபா | ஆகக் குறைந்த விலைக் கோரல் ரூபா |
|---|---|---|---|
| மாதம்பே மீன் சந்தைக் கட்டிடத்தொகுதி களஞ்சியசாலை அறை - அறை இலக்கம் 01 | 750. 00 | 6000 | 120000 |
| அறை இலக்கம் 02 | 750. 00 | 6000 | 120000 |
| அறை இலக்கம் 05 | 750. 00 | 6000 | 120000 |
| அறை இலக்கம் 06 | | 6000 | 120000 |

**அட்டவணை இல. 04**

2025ஆம் வருடத்திற்கான பொருள்/ சேவை வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல் - கொடக்கவெல பிரதேச சபை 2025ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையிலுள்ள பொருள், சேவை வழங்கல்கள் மற்றும் நிர்மாண ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக தகுதி வாய்ந்த உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் நபர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக 2024.12.31ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01 பொருள், சேவை வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிப்பவர்கள் கொடக்கவெல பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொண்டு அந்த விண்ணப்பத்துடன், வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழின் பிரதி, நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் துறையில் (வாகனங்கள் உட்பட) பதிவுச் சான்றிதழ் பிரதியுடன் 2024.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக ''தலைவர், கொடக்கவெல பிரதேச சபை, கொடக்கவெல'' எனும் முகவரிக்கு நேரில் கிடைக்கும் வகையில் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம். பதிவுக் கட்டணம், முத்திரைக் கட்டணம் அடங்கலாக 1100.00 ரூபாவாகும். அதனை செயலாளர், கொடக்கவெல பிரதேச சபை என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் அல்லது காசாக செலுத்தலாம் என்பதுடன் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் "வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல் - 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பத்தின் மூலம் ஒரு சேவை வழங்கல், ஒப்பந்தத்துக்காக மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**01 பொருள் வழங்கல்**

1. அலுவலக காகிதாதிகள், நுகர்வுப் பொருள், துப்புரவேற்பாட்டுப் பொருள்கள், கணனி மற்றும் தொலைநகல் காகிதாதிகள்
2. அலுவலக இயந்திரங்கள், தட்டச்சுப் பொறி, ரோணியோ இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம் மற்றும் நேரப்பதிவு இயந்திரம்
3. கணனி (இறக்குமதி செய்யப்பட்ட) (ஒருங்கிணைக்கப்பட்ட), அச்சுப்பொறி டோனர், காட்லேஜ், ரிபன் போன்றவை
4. அலுவலக மரத் தளபாடங்கள் மற்றும் உருக்குத் தளபாடங்கள்
5. கணனி துணைப்பாகங்கள், மென்பொருள்கள்
6. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், வீதி விளக்குத் தொகுதி, மின் குமிழ்கள்
7. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டீசல், பெற்றோல், நிர்மாண இயந்திரங்கள்)
8. டயர், டியுப் மற்றும் பெற்றரிகள்
9. இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் மற்றும் பெயர்ப்பலகை வழங்குதல் மற்றும் தயாரித்தல்.
10. அச்சுத் தாள்கள் மற்றும் மை
11. நூலக புத்தகங்கள்
12. துணி வகைகள், அலுவலக திரைச்சீலைகள் வழங்குதல்
13. உணவு பான வகைகள், உபசரணைக்கு தேவையான துணைப்பாகங்களை வழங்குதல்
14. அலுவலக பை மற்றும் தோற் பொருட்கள் வழங்குதல்
15. நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, இரும்பு, சுண்ணாம்பு, டயில், நிறப் பூச்சு, நீர்க்குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள்)
16. நிர்மாணப் பொருட்கள் (கல், சிறு கற்கள், மணல், செங்கல், சீமெந்துக் கல், செடலின் பலகை, ஓடு, மூங்கில் பலகை, அரிந்த பலகை, தென்னோலை மற்றும் விறகு போன்றவை)
17. நிர்மாண பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் (லொறி, டிரக்டர் மற்றும் டிபர் போன்றவை)
18. நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் (வீல் லோடர், லோடர், டோசர் க்ரேடர், த்ரோல டிரக்டர் போன்றவை)
19. களைநாசினி, பீடை நாசினி, இழையான் கொல்லி மற்றும் துர்நாற்ற நாசிகள் வழங்குதல்

**02 சேவை வழங்கல்**

1. மோட்டார் வாகன திருத்தவேலைகள் (டீசல், பெற்றோல், நிர்மாண இயந்திரங்கள்)
2. மோட்டார் வாகன குஷன் வேலை மற்றும் கூடார வேலை மற்றும் மோட்டார் வாகன தகடு வர்ணம் தீட்டுதல், சிலிண்டர் துளையிடல், க்ரேங்க் வெட்டுதல், சக்கர சமப்படுத்தல்
3. வாகனம் சர்விஸ் செய்தல்
4. அலுவலக இயந்திர உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (தட்டச்சுப் பொறி, கணிப்பொறி, ரோணியோ இயந்திரம், தொலைநகல், கணனி, நேரப்பதிவு இயந்திரம் போன்றவை)
5. கதிரை இழைத்தல் மற்றும் தளபாட திருத்தவேலைகள் (மரத் தளபாடங்கள் மற்றும் உருக்காலான தளபாடங்கள், கதிரை, அலுமாரி போன்றவை)
6. கடைசல் பட்டறை வேலை, உருக்கி இணைத்தல் வேலை ஹய்டொலிக் ஹோஸ் புதுப்பித்தல்
7. மின்சார திருத்தவேலைகள் (AC/ DC வாகனம்)
8. மின்சார திருத்தவேலைகள் (அலுவலகம்/ வீடு)
9. வளிச்சீராக்கி, குளிர்சாதன திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (அலுவலகம்/ வீடு)
10. வளிச்சீராக்கி, குளிர்சாதன திருத்தவேலைகள் மற்றும் சர்விஸ் செய்தல் (வாகனம்)
11. அலுமினிய நிர்மாணப் பணிகள்
12. பூங்கா அலங்காரம்
13. அச்சிடல் சேவைகள் (டிஜிட்டல், ஒப்செட்)
14. தீயணைக்கும் கருவி பொருத்துதல் பராமரித்தல் மற்றும் சர்விஸ் செய்தல்
15. உபசரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான சேவைகள் வழங்குதல்
16. நில அளவை வேலைகள்
17. ஒலி பெருக்கி, மின் மற்றும் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்
18. பயணிகள் போக்குவரத்து சேவை வழங்குதல் (கார், வேன், கெப், பஸ் வண்டி)
19. தகனச்சாலைக்கான எரிவாயு வழங்குதல்

**03 நிர்மாண ஒப்பந்ததாரர்கள்**

1. நிர்மாண ஒப்பந்தம் ரூபா 100,000.00 வரை
2. நிர்மாண ஒப்பந்தம் ரூபா 100,000.00 தொடக்கம் 250,000.00 வரை
3. நிர்மாண ஒப்பந்தம் ரூபா 250,000.00 தொடக்கம் 500,000.00 வரை
4. ரூபா 500,000.00 க்கு மேல்
   (மேலுள்ள துறையில் பதிவு செய்தவர்கள் மட்டும்)

இதற்கு மேலதிகமாக 10% முத்திரை வரி செலுத்த வேண்டும் என்பதுடன் இது கேள்வி பிணை கட்டணத்திற்கு ஏற்புடையதல்ல. மேற்கூறப்பட்ட கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை கொடக்கவெல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு 045-2240031 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**திஸ்னா நில்மினி ரத்நாயக்க,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த**
**கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கொடக்கவெல பிரதேச சபை.**

2024-09-06ஆம் திகதி
**கொடக்கவெல பிரதேச சபையில்.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### ஏல விற்பனை அறிவித்தல்

### இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை

### ஏல விற்பனைத் திகதி: 18.09.2024

எனது இல.: **LD/S/CICT/2024/08/PC-05,** **LD/S/CICT/2024/09/PC-01**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க உட்செல்லும் வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2024.09.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக CICT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ள **Fresh Potato, Fresh Onion and Fresh Cabbage** ஐ அடக்கியுள்ள தடையகற்றப்படாத இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு அடைக்கப்பட்ட மூன்று கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2024.09.13 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ மற்றும் **SSCL** உடனான 1,000 ரூபாவையும் மீளளிக்கப்படும் கட்டணமான 200,000,00 ரூபாவையும் ஒவ்வெரு அம்சத்திற்கும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி 15 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம். (விலைமனுதாரர் ஒருவர் இரு அம்சங்களுக்கு விலைமனுவை சமர்ப்பிக்க விரும்பினால் மொத்த மீளளிக்கப்படும் வைப்பாக 400,000 ரூபாவை மேலுள்ளவாறு செலுத்துதல் வேண்டும்)

2024.09.18 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**13.09.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

## திவுலப்பிட்டிய பிரதேச சபை

### 2025ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை 2025.01.01ஆம் திகதி முதல் 2025.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் என்னால் ஏற்கப்படும்.

2. **கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் - 2024.09.13ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை)**
   **கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2024.10.04 மு.ப. 10.00 மணி வரை**
   **கேள்விகள் திறக்கப்படுதல் - 2024.10.04 மு.ப. 10.30 மணிக்கு**
3. ஒவ்வொரு மீன் கடையையும் குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை என்பவற்றை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கட்டணத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அவ்வாறான கேள்விதாரர்களின் வைப்புத் தொகை மற்றும் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்களின் வைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2024.10.10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி 2024.09.13ஆம் திகதி முதல் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
6. பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி 2024.09.13ஆம் திகதி முதல் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வர்த்தக உரிமையை குத்தகைக்கு பெற்று உடன்படிக்கைகளை மீறியுள்ள குத்தகைதாரர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
8. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாக பூர்த்தி செய்த பின்னர் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி"யை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் பின்பக்கம் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி" என்று குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் இன்னுமொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை "திவுலப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி, திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய" எனும் முகவரிக்கு 2024.10.04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
9. 2024.10.04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
10. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவித்து 07 நாட்களுக்குள் தம்மால் விண்ணப்பிக்கும் தொகையில் 25% பாதுகாப்பு பிணையை வைப்பாக சபையில் வைப்புச் செய்து குத்தகை உடன்படிக்கைக்கு வரவேண்டும். இதற்கு மேலதிகமாக தாம் விண்ணப்பிக்கும் தொகையில் 75% இற்கு சமமான சொத்துப் பிணையை வைத்தல் வேண்டும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
12. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறியலாம்.

**திருமதி ஐ.ஆர்.சீ.எம். குருப்பு,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகாரம் வாய்ந்த வேலைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டியவில்.**
**2024-09-10.**

**தொலைபேசி இல. : 031-2246275**
**தொலைநகல் இல : 031-2243865**

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | ஆதனத்தின் தன்மை | 2024ஆம் ஆண்டிற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) (ரூபா) | படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாத) (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 01 | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 2 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 02 | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 3 | திவுலப்பிட்டிய மீன் கடை இல. 03 | 50,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 4 | திவுலப்பிட்டிய மாட்டிறைச்சிக் கடை | 550,000.00 | 55,000.00 | 1,000.00 |
| 5 | மரதகஹமுல பன்றியிறைச்சிக் கடை | 173,500.00 | 17,350.00 | 1,000.00 |
| 6 | மரதகஹமுல மீன் கடை இல. 01 | 44,000.0 | 4,400.00 | 1,000.00 |
| 7 | மரதகஹமுல மீன் கடை இல. 02 | 44,000.00 | 4,400.00 | 1,000.00 |
| 8 | மரதகஹமுல மீன் கடை இல. 03 | 44,000.00 | 4,400.00 | 1,000.00 |
| 9 | மரதகஹமுல மீன் கடை இல. 04 | 44,000.00 | 4,400.00 | 1,000.00 |
| 10 | கொட்டதெனியாவ மீன் தட்டு 01 | 225,000.00 | 22,500.00 | 1,000.00 |
| 11 | கொட்டதெனியாவ மீன் தட்டு 02 | 225,000.00 | 22,500.00 | 1,000.00 |
| 12 | கொட்டதெனியாவ கோழியிறைச்சிக் கடை | 180,000.00 | 18,000.00 | 1,000.00 |
| 13 | கொட்டதெனியாவ பன்றியிறைச்சிக் கடை | 240,220.00 | 240,022.00 | 1,000.00 |
| 14 | படல்கம மீன் கடை இல. 01 | 56,000.00 | 5,600.00 | 1,000.00 |
| 15 | படல்கம மீன் கடை இல. 02 | 56,000.00 | 5,600.00 | 1,000.00 |
| 16 | படல்கம மீன் கடை இல. 03 | 56,000.00 | 5,600.00 | 1,000.00 |
| 17 | படல்கம மாட்டிறைச்சிக் கடை இல. 01 | 206,000.00 | 20,600.00 | 1,000.00 |

The Housewives' companion
Classifieds on
Daily News

## பெறுகை அறிவித்தல்
### கடுவலகஸ்வெவ பிரதேச சபை

கடுவலகஸ்வெவ பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் விற்பனை உரிமையை 2025 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான கால எல்லைக்கு குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட 2024.09.13 முதல் 2024.10.03 வரை சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் வசிப்பவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

இதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் தொ.பே.இலக்கத்தை அழைத்து அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தொ.பே.இலக்கம் : 032 - 2267917**
**மின்னஞ்சல் : karuwalagaswewaps@gmail.com**
**செயலாளர்**
**கடுவலவஸ்வெவ பிரதேச சபை**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளின் ஏல விற்பனை

வ/ப யட்டியந்தொட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யட்டியந்தொட்ட, கிதுல்கல, பெரண்னாவ, புனுகல, தெலிகம, கல்பாத்த, மத்தமகொட ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.12.31 வரை அடகு வைக்கப்பட்ட ஏலவிற்பனை தினம் வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2024 ஒக்டோபர் 12 மற்றும் 13ம் திகதிகளில் மு.ப. 9.30 முதல் சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்**
**வ/ப யட்டியந்தொட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**யட்டியந்தொட்ட**

## பெறுகை அறிவித்தல்
### கழிவுப் பொருட்கள் அகற்றும் உறைகளை கொள்வனவு செய்தல் - 2024
### டி சொய்சா மகளிர் மருத்துவமனை – கொழும்பு – 08

டி சொய்சா மகளிர் மருத்துவமனையில் 2024ம் ஆண்டிற்காக கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் உறைகளை கொள்வனவு செய்வதற்காக இல. 2034/35 எனும் 2017.09.01ம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அவ் விலைமனுக்கள் எம்மால் வழங்கப்படும் ஆவணத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2024.09.13 முதல் 2024.10.04 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை நிதிப்பிரிவிற்கு சமர்ப்பித்து விலைமனுக்களை வழங்குவதற்கு தேவையான ஆவணத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் 2024.10.04 மு.ப. 10.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கழிவுப்பொருள் அகற்றும் உறைகளை கொள்வனவு செய்தல் 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024.10.04 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை அழையுங்கள் (தொ.பே.இல. 011 - 2697315/ 2696224 - 25)

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை - கொழும்பு - 08.**

### நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையம்
## பெறுகை அறிவித்தல்

**1. 2025ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**
**2. 2025ஆம் வருடத்திற்கான பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**

1. நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்திற்கு 2025ஆம் வருடத்தில் சுத்திகரிப்புச் சேவை மற்றும் பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலையத்தின் சார்பில் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைக்கோரல் விண்ணப்பங்களை 2024-09-14ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இல. 011-2369626) மீளளிக்கப்படாத 2000.00 ரூபாவைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ''பிரதேச செயலாளர், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம், இல. 563, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05'' எனும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ஆம் வருடத்தில் நாராஹென்பிட்டி விசேட பொருளாதார நிலையத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல்'' மற்றும் ''2025ஆம் வருடத்தில் நாராஹென்பிட்டி விசேட பொருளாதார நிலையத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு 2024-10-16ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து மேற்கூறிய முகவரியிலுள்ள நில மெதுர கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கணக்குப் பிரிவிலுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம்.
4. சகல விலைமனுக்களுடனும் மீளளிக்கப்படும் 30,000.00 ரூபாவுக்கான பெறுகைப் பிணை வைப்பொன்றை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய முகாமையாளர் பொறுப்பு பெயரில் நாராஹென்பிட்ட இலங்கை வங்கியில் பேணப்படும் 77533972 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புப் செய்து அந்தப் பற்றுச்சீட்டை நாராஹென்பிட்ட விசேட பொருளாதார நிலைய அலுவலகத்திற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் வேண்டும்.
5. விலைக்கோரல் ஆவணங்களை 02 பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024-10-16ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு திம்பிரிகஸ்யாய செயலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் விண்ணப்பதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
7. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
8. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச செயலகம்,**
**திம்பிரிகஸ்யாய.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு
### மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - 2024

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலை திட்டங்களுக்காக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி, நேரம் மற்றும் இடம் | 2024-09-13ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை<br>இலக்கம் 01 முதல் 07 வரை மற்றும் 11 முதல் 16 வரையான வேலை விடயங்களுக்கு கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில்<br>இலக்கம் 08 முதல் 10 வரை மற்றும் இலக்கம் 20 வேலை விடயங்களுக்கு மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில்<br>இலக்கம் 17 முதல் 19 வரையான வேலை விடயங்களுக்கு கண்டி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில். |
| 02 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரம் | 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் விலைமனுக்களைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் பதிவுத் தபாலில் அல்லது ஒவ்வொரு நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். |
| 03 | விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் | 2024-10-04ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து |
| 04 | விலைக்கோரல் பிணை முறி | இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது காப்புறுதிச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில் அல்லது நிர்மாண காப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை சகல விலைமனுக்களுடனும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லை வரை இருத்தல் வேண்டும். |
| 05 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடம் - இல. 01 முதல் 07 வரை மற்றும் 11 முதல் 16 வரையான வேலை விடயங்களுக்கு | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், த.பெ. இல. 56, எஹெல்லேபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி. |
| 06 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடம் - இல. 08 முதல் 10 வரை மற்றும் 20ஆம் இலக்க வேலை விடயங்களுக்கு | பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மாநகர சபை வீதி, மாத்தளை. |
| 07 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இடம் - இல. 17 முதல் 19 வரையான வேலை விடயங்களுக்கு | மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இல. 163, சங்கராஜ மாவத்தை, கண்டி. |
| 08 | விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் | இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென பெயரிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். |
| 09 | விலைக்கோரலுக்கு இயைபான விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு | • இலக்கம் 01 முதல் 07 வரை மற்றும் 11 முதல் 16 வரையான வேலை விடயங்களுக்கு கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கணக்காளரின் தொலைபேசி இல. 081-2236452<br>• இலக்கம் 08 முதல் 10 வரை மற்றும் இலக்கம் 20 வேலை விடயங்களுக்கு மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகக் கணக்காளரின் தொலைபேசி இலக்கம்: 066-2222734<br>• இலக்கம் 17 முதல் 19 வரையான வேலை விடயங்களுக்கு கண்டி மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள கணக்காளரின் தொலைபேசி இல. 081-2222856<br>• சகல வேலை விடயங்களுக்கும் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின், பிரதி மாகாண பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்), சுகாதாரக் கட்டிடங்கள், தொலைபேசி இல. 081-2201624 |

**மருத்துவ வழங்கல் பிரிவின் ஒதுக்கீடு (MSD) - 2024**
**கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

| தொ. இல. | வேலை விடயம் | பெறுகை மூலோபாயம் | வெட் இன்றி பொறியியல் அளவுப்பத்திர தொகை (ரூபா) | பதிவு (CIDA Grade) | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரொக்கப் பணமாக செலுத்தாவிட்டால் (ரூபா) | ரொக்கப் பணமாக | |
| 1 | கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 1,976,731.48 | C9, C8 | 2,000.00 | 39,600.00 | 19,800.00 | 77 |
| 2 | தெல்தொட்ட பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 1,827,015.70 | C9, C8 | 2,000.00 | 39,600.00 | 18,300.00 | 77 |
| 3 | மாரஸ்ஸன பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 2,303,603.36 | C8 ,C7 | 3,000.00 | 46,100.00 | 23,050.00 | 91 |
| 4 | தொலொஸ்பாகே பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 3,165,880.07 | C8 , C7 | 3,000.00 | 63,400.00 | 31,700.00 | 91 |
| 5 | ஹசலக்க பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 3,319,565.11 | C8 , C7 | 3,000.00 | 66,400.00 | 33,200.00 | 91 |
| 6 | அக்குரணை பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 3,291,476.13 | C8 , C7 | 3,000.00 | 65,900.00 | 32,950.00 | 91 |
| 7 | கலகெதர பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 1,438,107.93 | C9 , C8 | 2,000.00 | 28,800.00 | 14,400.00 | 77 |

**மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | கோன்கஹவெல பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலைக்கு ராக்கைகளை அமைத்தல் | MSD | 1,116,390.00 | C9,C8 | 2,000.00 | 22,400.00 | 11,200.00 | 77 |
| 9 | ஹெட்டிபொல பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலைக்கு ராக்கைகளை அமைத்தல் | MSD | 781,473.00 | C9,C8 | 2,000.00 | 15,700.00 | 7,850.00 | 77 |
| 10 | மாதிவெல பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலையை நவீனமயப்படுத்துதல் | MSD | 3,277,326.53 | C8,C7 | 3,000.00 | 65,600.00 | 32,800.00 | 91 |

**மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கீடு - PSDG**
**கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

| தொ. இல. | வேலை விடயம் | பெறுகை மூலோபாயம் | வெட் இன்றி பொறியியல் அளவுப்பத்திர தொகை (ரூபா) | பதிவு (CIDA Grade) | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரொக்கப் பணமாக செலுத்தாவிட்டால் (ரூபா) | ரொக்கப் பணமாக | |
| 11 | கலகெதர பிரதேச வைத்தியசாலையின் எல்லைச் சுவரை புனரமைத்தல் | PSDG | 2,888,584.50 | C8 , C7 | 3,000.00 | 57,800.00 | 28,900.00 | 91 |
| 12 | பன்விலதென்ன பிரதேச வைத்தியசாலையின் மருந்து களஞ்சியசாலைக்கு மேலதிக பகுதியொன்றை இணைத்தல் | PSDG | 2,242,657.60 | C8 , C7 | 2,000.00 | 44,900.00 | 22,450.00 | 91 |
| 13 | பம்பரதெனிய பிரதேச வைத்தியசாலையில் வார்ட்டுகளுக்கு பின்புறத்தில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | PSDG | 5,191,904.77 | C7 , C6 | 5,000.00 | 103,900.00 | 51,950.00 | 105 |
| 14 | பட்டியபல்லேகம பிரதேச வைத்தியசாலையில் பெண்கள் மற்றும் ஆண்கள் வார்டுகளின் திருத்தவேலைகள் (1ஆம் கட்டம்) | PSDG | 3,337,159.00 | C8 , C7 | 3,000.00 | 66,800.00 | 33,400.00 | 91 |
| 15 | மினிபே பிரதேச வைத்தியசாலையின் தாய்மார் வார்டின் திருத்தவேலைகள் | PSDG | 6,984,355.55 | C7 , C6 | 5,000.00 | 139,700.00 | 69,850.00 | 105 |
| 16 | கட்டுகஸ்தொட்ட பிரதேச வைத்தியசாலையில் தற்போதுள்ள மின்சார முறைமையை மின்பிறப்பாக்கியோடு இணைப்பதற்கான புனரமைப்பு வேலைகள் | PSDG | 2,931,501.59 | C8, C7 | 3,000.00 | 58,700.00 | 29,350.00 | 91 |
| **மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்** | | | | | | | | |
| 17 | கெலிஓய பிரதேச வைத்தியசாலையில் பற் சிகிச்சையகத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | PSDG | 13,574,178.73 | C5, C6 | 7,500.00 | 272,000.00 | 136,000.00 | 105 |
| 18 | மெதவல பிரதேச வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவு மற்றும் பற் சிகிச்சை கட்டிடத்தை புனரமைத்தல் | PSDG | 11,815,604.83 | C6 , C5 | 7,500.00 | 236,000.00 | 118,000.00 | 105 |
| 19 | மாரஸ்ஸன பிரதேச வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தவேலைகள் | PSDG | 10,963,436.53 | C5, C6 | 7,500.00 | 220000 | 110,000.00 | 105 |

**அமைச்சின் நேரடி ஒதுக்கீடு 2024**
**மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்**

| தொ. இல. | வேலை விடயம் | பெறுகை மூலோபாயம் | வெட் இன்றி பொறியியல் அளவுப்பத்திர தொகை (ரூபா) | பதிவு (CIDA Grade) | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ரொக்கப் பணமாக செலுத்தாவிட்டால் (ரூபா) | ரொக்கப் பணமாக | |
| 20 | கலேவல பிரதேச வைத்தியசாலையின் புதிய வெளி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தின் முதலாம் மாடிக்கு தரையோடுகள் பதித்தல் | LMF | 4,223,751.12 | C8 , C7 | 3,000.00 | 84,000.00 | 42,300.00 | 91 |

- ➢ விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாகச் செலுத்தாவிட்டால்,
  - i. இலக்கம் 01 முதல் 07 வரை மற்றும் 11 முதல் 16 வரையான வேலை விடயங்கள் - ''கண்டி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்'' பெயரிலும்,
  - ii. இலக்கம் 08 முதல் 10 வரை மற்றும் இலக்கம் 20 வேலை விடயங்கள் - ''மாத்தளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்'' பெயரிலும்,
  - iii. இலக்கம் 17 முதல் 19 வரையான வேலை விடயங்கள் - ''மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்'' பெயரிலும் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால், இயைபுடைய அலுவலகங்களின் கணக்காளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- ➢ சகல விலைமனுக்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும்.
- ➢ விலைக்கோரலை வழங்கும் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
- ➢ விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (2024-09-13ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**2024-09-11ஆம் திகதி.**

**மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 163, சங்கராஜ மாவத்தை,**
**கண்டி.**

www.adz.lk it's what you want

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்)

## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல்

### நிதி வளம்: இலங்கை அரசாங்கம்

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிர்மாண வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விக் கோரல்களை மத்திய மாகாண பொறியியல் சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக எதிர்பார்க்கப்படும் ஒப்பந்தக்காரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கீழே குறிப்பிட்டவாறான தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணங்களின் 4 ஆம் பிரிவின் தகைமைத் தகவல் வடிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன (தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் ஏனைய தகைமைகளின் தேவைப்படும் அனைத்து ஆவணச் சான்றுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்). அத்துடன் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் 3 ஆம் இலக்க சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கண்டி, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை, 230/3 ஆம் இலக்கத்திலுள்ள மத்திய மாகாண பொறியியல் சேவைகள் (தொலைபேசி இல.: 081-2203931) பிரதான பொறியியலாளர் (சிவில்) இடமிருந்து பெற்று பொது வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.03 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 3,500 ரூபாவை செலுத்திய பின்னர் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பிரதிப் பணிப்பாளரிடமிருந்து (நிதி) கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் பிரதிப் பணிப்பாளரிடம் (நிதி) மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. 2024.10.04 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பிரதிப் பணிப்பாளரின் (நிதி) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி தினத்திற்குப் பின்னர் 77 நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. 2025.01.17 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கை மத்திய வங்கியினல் அங்கீகரிக்கப்பட்டதும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட தொகைக்காகவுமான கேள்விப் பிணையொன்றுடனும் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான தொகைக்கான ரொக்கப் பணவரவுத் துண்டின் நிழற்படப்பிரதியொன்று பொறியியல் சேவைகளின் பிரதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. இது தொடர்பான விலைமனுக்கோரலானது 2024.09.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நடைபெறும்.விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

**பிரதான பொறியியலாளர் (சிவில்) அலுவலகம்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்)**
**இல.: 230/3, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை,**
**கண்டி.**

11. இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016(iii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
12. பொறியியல் சேவைகள் திணைக்களமானது (மத்திய மாகாணம்) எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையையும் கொண்டுள்ளதுடன் விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு கடப்பாட்டையும் சுமத்தாமல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அனைத்து விலைமனுக்களையும் எந் நேரத்திலும் இரத்துச் செய்வதற்கான உரிமையையும் கொண்டுள்ளது.

| அம்ச இல. | வேலை | பெசேவ நீங்கலாக BOQ தொகை (ரூபா) | தேவைப்படும் CIDA பதிவு | நிர்மாணக் காலம் - வாரங்களில் | கேள்விப் பிணையின் பெறுமதி | கேள்விப் பிணைக்கான ரொக்கப் பணப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | கிரகம தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் புதுப்பித்தல் வேலைகள் **(Bid No. CPC/CS/11/06/06/05/01/2024** | 9,904,409.76 | சி6 அல்லது சி7 | 12 | 150,000.00 | 75,000.00 |
| 2. | பலபத்வெல தொழில்நுட்ப கல்லூரியில் உத்தேசிக்கப்பட்ட இரு மாடி கட்டிட நிர்மாணம் (1 ஆம் படிநிலை) - தரை மாடி **Bid No.: CPC/CS/11/06/06/05//02/2024** | 10,146,634.00 | சி5 அல்லது சி6 | 12 | 150,000.00 | 75,000.00 |

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம் (மத்திய மாகாணம்),**
**இல.: 230/3, S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை,**
**கண்டி.**

# கேள்வி ஆலோசனைகள் கோரல் (இரட்டை உறைமுறை) ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

## 52 ஆவது தேசங்களுக்கிடையிலான மிளகு சமூக மாநாட்டிற்கு நிகழ்வு முகாமையாளர் (Event Manager) தேர்ந்தெடுத்துக் கொள்ளல்

உலகில் மிளகு உற்பத்தி செய்யும் பிரதான நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய பசுபிக் லயங்களில் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் கீழ் சர்வதேச மிளகு சமூக கூட்டத்தை (international pepper community) இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, இலங்கை, வியட்நாம் போன்ற பிரதான மற்றும் நிரந்தர நாடுகள் மற்றும் பிலிப்பீன், பப்புவா நியூகினி போன்ற உதவி நாடுகளின் பங்களிப்பில் வருடாந்தம் நடத்தப்படும். 2024ம் ஆண்டில் 52ஆம் நாடுகளுக்கிடையிலான, மாநாட்டை 2024.11.18 முதல் 2024.11.20 வரை தொடக்க நிகழ்வு உட்பட 03 நாட்கள் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இம் மாநாடு சார்பாக நிகழ்வு முகாமையாளரை (Event Manager) தேர்ந்தெடுத்துக் கொள்வதற்காக ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தினால், கீழுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள நிறவனங்கள்/ தனிநபர்களிடமிருந்து பொறியிடப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நிதி ஆலோசனைகள் அடங்கிய கேள்விகள் இரட்டை உறை முறையில் கோரப்படுகின்றன.

01. கேள்விதாரர் பூர்த்தி செய்திருக்க வேண்டிய அடிப்படைத் தகைமைகள்.
தேசிய மற்றும் தேசங்களுக்கிடையிலான மட்டத்தில் நிகழ்ச்சித் திட்ட முகாமை செய்தலில் சிறந்த அனுபவம் மற்றும் குறைந்தபட்சம் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமமான சர்வதேச மட்டத்திலான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையாவது வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்திருத்தல்.

02. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (National Competitive Bidding) இரட்டை உறை முறைமை (Two Envelop System) பிரகாரம் நடைபெறும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களால் கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை செலுத்தி கீழ்க்காணும் அலுவலகங்களில் 2024.09.13 முதல் 2024.10.04 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கட்டணங்கள் செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம்.

| இல. | அலுவலகம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | ஏற்றுமதி விவசாயத் திணைக்கள தலைமையகம் | இல. 1095, சிரிமாவோ பண்டார நாயக்க மாவத்த, கெட்டம்பே, பேராதனை | 081 - 2388651<br>081 - 2386018<br>081 - 2386019 |
| 02 | ஏற்றுமதி விவசாய மாவட்ட அலுவலகம் கொழும்பு | ஏற்றுமதி விவசாய மாவட்ட அலுவலகம், 09ம் மாடி, iiம் கட்டம், செத்சிரிபாய பத்தரமுல்ல | 011 - 2867275 |

04. பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களப் பெயரில் இலங்கை ரூபா ஒரு இலட்சம் (100,000/-) பெறுமதியுடைய 30 நாட்கள் வரை செல்லுபடியாகும் நிபந்தனையற்ற மீளளிக்கப்படாத கேள்விப் பிணையொன்றை வழங்குதல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.10.07 பி.ப. 2.30 ஆகும். அந்நேரத்தின் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். இங்கு தொழில்நுட்ப கேள்விகள் மட்டும் திறக்கப்படுவதுடன், தொழில்நுட்ப விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்வுகள் இடப்பெறுவதுடன், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விகளில் மாத்திரம் நிதி ஆலோசனைகள் பின்னர் திறக்கப்படும்.

06. இது சம்பந்தமான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.09.26 மு.ப. 10.00 இற்கு பத்தரமுல்ல, iiம் கட்டம், செத்சிரிபாய, 08ம் மாடியில் அமைந்துள்ள விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

07. சகல தொழில்நுட்ப மற்றும் நிதி ஆலோசனை கேள்விகளை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகளின் வலது மேல் மூலையில் தொழில்நுட்ப மற்றும் நிதி ஆலோசனைகள் என வேறுவேறாக குறிப்பிட்டு அவ் உறைகள் இரண்டையும் வேறு ஓர் உறையில் இட்டு, பொறியிட்டு, அதன் இடது பக்க மேல் மூலையில் "Event Manager for International Pepper Community Meeting 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

08. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.10.07 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு,

**தலைவர்,**
**பெறுகை அலகு,**
**ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,**
**1095, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்த, பேராதனை**

என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து தலைமையகத்தின் பெறுகை அலகில் பதிவு செய்த பின்னர் கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும்.

09. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் பற்றி மேற்கொள்ளப்படும் இறுதித் தீர்மானம் எடுத்தல் ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,**
**1095, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்த,**
**பேராதனை,**
**தொ.பே.இலக்கம் : 081 - 2388651**

# கேள்விமனுக் கோரல்

### சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

### வருடாந்த தேவைகளுக்கான கொள்வனவு 2024/25

## பராமரிப்பு சேவை, பாதுகாப்பு சேவை மற்றும் நலன்புரி சிற்றுண்டிக்கான சேவையைப் பெறல்

**கேள்வி மனு இலக்கம் :** SD/IV/2024

01. நில அளவைத் திணைக்களத்தின் 2024/25ம் வருடத்துக்கான தேவைகளுக்கு பின்வரும் சேவையை கொள்வனவு விலைமனுவுக்குரிய முத்திரையிடப்பட்ட கேள்விமனுக் கோரல்களை வழங்குநர்களிடமிருந்து முன்வைப்பதற்கான அழைப்பு

| விபரம் | கேள்விமனு இலக்கம் 01 | கேள்விமனு இலக்கம் 02 | கேள்விமனு இலக்கம் 03 |
|---|---|---|---|
| | நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கான பராமரிப்பு சேவையினை பெறுதல் (2024/25ம் வருடத்துக்கான ஒரு வருட காலத்துக்கு) | நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கான பாதுகாப்பு சேவையினை பெறுதல் (2024/25ம் வருடத்துக்கான ஒருவருட காலத்துக்கு) | நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கான நலன்புரி சிற்றுண்டிச் சேவையினை பெறுதல் (2024/25ம் வருடத்துக்கான ஒரு வருட காலத்துக்கு) |
| கேள்விமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | 100,000.00 | 100,000.00 | 50,000.00 |
| மீள்செலுத்த முடியாத கேள்விமனுக் கட்டணம் (ரூபா) | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| கேள்விமனு விண்ணப்பப் படிவங்களை அலுவலக நாட்களில் பெறவேண்டும் | 2024.10.09ந் திகதி பி.ப 02.30 வரை | 2024.10.10ந் திகதி பி.ப 02.30 வரை | 2024.10.08ந் திகதி பி.ப 02.30 வரை |
| ஏலத்துக்கு முந்தைய கூட்டம் | 2024.09.26ந் திகதி மு.ப. 10.00 திணைக்களத்தின் பழையகேட்போர் கூடம் | | |
| கேள்விமனு நிறைவு | 2024.10.10ந் திகதி மு.ப. 11.00 | 2024.10.11ந் திகதி மு.ப. 10.00 | 2024.10.09ந் திகதி மு.ப. 10.00 |
| கேள்விமனு திறப்பு | 2024.10.10ந் திகதி மு.ப. 11.05 பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் | 2024.10.11ந் திகதி மு.ப. 11.05 பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் | 2024.10.09ந் திகதி மு.ப. 11.05 பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் |

02. கேள்விமனுக் கோரல் தேசிய போட்டியளவிலான கேள்விமனுக் கோரல் விதிமுறைகளுக்கு அமைவாக மேற் கொள்ளப்படும்.
03. இதற்காக அக்கறையுள்ள கேள்விமனு முன்வைப்பாளர்கள் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து அலுவலக வேலை நேரத்தில் இது தொடர்பான ஆவணங்களைப் பரீட்சிக்கும் அதேவேளை, 011-2368106 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி கட்டணம் செலுத்தி பின்வரும் முகவரியிலிருந்து பெறலாம்.
05. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கேள்விமனுக்கோரலானது உரிய திகதிக்கு முன்னர், கடித உறையின் இடது மூலையில் மேலே சொல்லப்பட்ட தலைப்பை இட்டு, உள்ளே பூரணப்படுத்தப்பட்ட விலை மனுக்கோரல்களை வைத்து ( இரண்டு பிரதிகள் வைக்கப்படவேண்டும்) கடித உறை உரியவாறு மூடப்பட்டு, பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே அட்டவணையில் சொல்லப்பட்ட விபரங்களின்படி கேள்வி மனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விமனு முன்வைப்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். அனைத்து கேள்வி மனுக்களும் மேற்காட்டிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக் காப்புத்தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
06. கோரப்பட்ட இரண்டு சேவைகளுக்கும் தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும், இல்லையெனில் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
07. தங்களால் வழங்கப்படும் கேள்வி மனுக்களின் செல்லுபடிக்காலம் 90 நாட்களுக்கு குறைவாக இருக்கக்கூடாது.
08. தங்களின் விலைமனு தெரிவு செய்யப்பட்டு மேற்படி சேவையினை வழங்குவதற்கு உரியவராக தாங்கள் தெரிவு செய்யப்பட்டால், இரண்டு வாரங்களின் பின்னர் தங்களது சேவையை ஆரம்பித்து தொடர்ந்து 1 வருடத்துக்கு தங்களது சேவை வழங்கப்படவேண்டும்.
09. சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்), நில அளவைத் திணைக்களம், 150, கிருள வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரியில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**நில அளவையாளர் நாயகம்,**
**தலைவர்**
**திணைக்கள கொள்வனவு சபை**
**2024.09.13**

# பாதுகாப்பு அமைச்சு

## (Ministry of Defence)

## இலங்கை, பாதுகாப்பு அமைச்சிற்கு ஒரு வருடத்திற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் எட்டு (8) கார்களை வாடகைக்கு அமர்த்துதல்

### (Contract No.: MOD/FD/PB/24/04/2024

1. பாதுகாப்பு அமைச்சிற்காக ஒரு வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் எட்டு (8) கார்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. கேள்விகோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விகோரல் முறையின் மூலம் நடாத்தப்படும்.
3. வாகனங்களின் உற்பத்தியாண்டானது 2016 இற்கு பின்னர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவைகள் சிறந்த செயலாற்றும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. குத்தகையாளர் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு பெற்ற நிதிசார் நிறுவனமொன்றாகவும் இலங்கையிலுள்ள வாகன வர்த்தக உரிமைப் பெயர்களின் விற்பனையாளராகவும் ஆகக்குறைந்தது 05 வாகனங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையையுடைய வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் கம்பனியொன்றாகவுமிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுடைய கேள்விதாரர்கள் மேலதிக தகவலை பாதுகாப்பு அமைச்சின் பெறுகைக்கான கணக்காளரிடமிருந்து பெற்று 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.04 ஆம் திகதியன்று வரையும் பொது மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலாக எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் கேள்விகோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.09.13 ஆம் திகதியிலிருந்து 2024.10.04 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 4,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விகோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

**பிரதான நிதிசார் அலுவலர் I**
**இரண்டாம் மாடி, பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

**தொலைபேசி : 011-2390719**
**தொலைநகல் இலக்கம் : 011-2390720**
**மின்னஞ்சல் : procurement@defence.lk**

7. 2024.10.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மேலேயுள்ள முகவரியில் கேள்விகோரல்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்விகோரல்கள் நிராகரிக்கப்படும். கேள்விகோரல்கள் அவைகளை மூடிய பின்னர், 2024.10.07 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பாதுகாப்பு அமைச்சின் 2 ஆம் மாடியின் மாநாட்டு மண்டபத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரரின் சார்பாக சமுகமளிக்கும் பிரதிநிதிகள் அவர்களின் நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட சட்டபூர்வமாக கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
8. அனைத்து கேள்விகோரல்களும் 280,000 இலங்கை ரூபாவிலமைந்த கேள்விப்பிணையுடன் இணைக்கப்பட்டு 'பாதுகாப்பு அமைச்சிற்கு' முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பிணையானது (ITB 20.2) இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி உத்தரவாதமொன்றாகவுமிருத்தல் வேண்டும். கேள்விப் பிணையானது கேள்வி கோரல்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் கேள்விக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவானதாகவுமிருத்தல் வேண்டும்.
9. கேள்விகோரல்களை திறக்கும் நாளுக்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக கேள்விக்கோரல் திறத்தலில் பங்குபற்றும் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற நபரானவர் அவரது பெயர், தேஅஅ/ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் I ஆம் பிரதான நிதிசார் அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி கேள்விதாரர் அறிவுரை வழங்கப்படுகின்றனர்.
10. மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**கணக்காளர் (பெறுகை),**
**பாதுகாப்பு அமைச்சு.**
**தொலைபேசி : 011-2390719**

**பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து மற்றும் AFW)**
**பாதுகாப்பு அமைச்சு**
**தொலைபேசி : 011-2389021**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு.**
**13.09.2024**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# கேள்வி அறிவித்தல்

## அகற்றப்படாத கப்பற்சரக்கின் விற்பனை

### கேள்வித் திகதி: 2024.09.26 ஆம் திகதியன்று

**கேள்வி இலக்கங்கள்.: 458 மற்றும் 458-ஏ**

கொழும்புத் துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் திறந்த வெளிகளிலுள்ள பின்வரும் கப்பற் சரக்கை கொள்வனவு செய்து மற்றும் அகற்றுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

கேள்வி இல.: 458

| | | |
|---|---|---|
| Tile | Dark Blue Jerry | Fabric |
| PVC Raw Materials | Uni Cooler Condensing Unit | Nonwoven Bag making Machine |
| Gypsum Powder | Security Tags and Hangers | Compressors |
| Cinnamon | Ammonia Ice | Areca nuts |
| Odorless Reclaimed Rubber | Stationary & Sports Items | Other Merchandise etc |

கேள்வி இல: 458-ஏ

| | | |
|---|---|---|
| Electrical Accessories | Green Marble | Calcium Carbonate |
| Green Coffee | Household Items | Car Lift |
| Food stuff | Water Pumps | Used machinery |
| Baby Car Seat | Beedi Leaves | Fabric |
| Motor Spare Parts | Food items | Other merchandise etc |

2024.09.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2024.09.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் முறையே கேள்வி இல. 458 இன் கீழ் பட்டியலிடப்பட்ட உருப்படிகளுக்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 ரூபாவை (பெசேவ மற்றும் SSCL) மற்றும் கேள்வி இல. 458-ஏ இன் கீழ் பட்டியலிடப்பட்ட உருப்படிகளுக்காக 1000 ரூபாவை (பெசேவ மற்றும் SSCL) செலுத்திய பின்னர் கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் யாட், ஆவணமாக்கல் நிலையத்தின் வன்-ஸ்டொப் இல் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைகள் லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் அலுவலகத்திலிருந்து கேள்வி பட்டியல்களை பெற்றுக் கொள்ளலாம்.

458 ஆம் இலக்க கேள்வி படிவங்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 1,000,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் வழங்கப்படுவதுடன் 458-ஏ ஆம் இலக்க கேள்வி படிவங்கள் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 50,000/=, 200,000/= அல்லது 500,000/= ரூபாவை உங்கள் முன்வைப்புக்கமைவாக 2024.09.25 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னர் தேவைப்படும் வகையில் செலுத்திய பின்னர் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**13.09.2024**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

**இறுதி விருப்பாவணம் இல்லாத ஆதனத்திற்காக உரிமைத்துவத்தை முன்வைக்குமாறு விடுக்கும் அறிவித்தல்**

**1998 இல. 21 எனும் உரிமைத்துவம் பதிவு செய்யும் சட்டம்**
**55வது அத்தியாயம்**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் மாகம்மன கிராமத்தில் கெடஸ்தர் வரைபடம் இலக்கம் 520004 வலய இலக்கம் 08 துண்டு இலக்கம் 0334 எனும் காணிகளுக்குச் சொந்தக்காரரான இல. 132, சீன கொட்டுவ, மாகம்மன, ஹோமாகம எனும் முகவரியில் வசித்த கொத்தலாவலகே பியசிறி என்பவர் 2017-07-04ஆம் திகதி இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் 2024-10-13ஆம் திகதிக்கு முன் இல. 06, முதலாவது ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, ஹோமாகம முகவரியில் அமைந்துள்ள காணி உரிமைத்துவ நிருணய பிரதேச அலுவலகத்திற்கு முன் தோன்ற வேண்டும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரிமைத்துவ நிருணயத் திணைக்களம்.**

## பகிரங்க அறிவித்தல்

2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப் படுகிறது.

**கம்பனியின் பழைய பெயர்:**
நைல் கோர்ப் (பீவீடி) எல்டீடி

**பதிவு இலக்கம்:**
PV 00250920

**பதிவு அலுவலகம்:**
இல. 73/1, காலி வீதி, கல்கிசை

**கம்பனியின் புதிய பெயர்:**
டெஸ்டினேஷன்ஸ் ப்ளஸ் (பீவீடீ) எல்டீடி

பெயர் மாற்ற சான்றிதழ்

**திகதி:**
2024.08.22

எயிமன்ஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் செயலாளர்கள்**

**Repeat Your ad For Better Offers**

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

# அறிவித்தல்

## இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136ஆம் அத்தியாயம்) 30ஆம் பிரிவின் கீழ் இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இவ் அறிவித்தலின் அகத்தேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தீர்மானங்கள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவென சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29(3)ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிவு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி.ஏ. விமலவீர**
**செயலாளர்,**
**தொழில் மற்றும் வெளிநாட்டு**
**வேலை வாய்ப்பு அமைச்சு.**

**'மெஹெவர பியச',**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு -05.**
2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆந் திகதி

**அட்டவணை**

இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1949 ஆண்டு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் அட்டணையின் 11ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி11**
**நாளாந்த நேரவேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதம்**

I. ஆகக்குறைந்த நாளாந்த சம்பளம் - ரூபா. 1350.00
(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்கின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்.)

II. ஒவ்வொரு மேலதிக கிலோகிராமிற்கான விகிதம் - ரூபா. 50.00

இந்த முடிபுகளை 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதியிலிருந்து தொடங்கி மூன்று வருட காலத்திற்கு அமுல்படுத்துவதென சம்பளச் சபை தீர்மானித்துள்ளது.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## 2025ஆம் ஆண்டில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

### ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

ஆரச்சிகட்டுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள இறைச்சிக் கடைகள், தெங்கு விளைச்சல்களை 2025.01.01ஆம் திகதி தொடக்கம் 2025.12.31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடும் பொருட்டு முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகைகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பெறுகை ஆவணங்கள் வழங்கல் - 2024-09-18ஆம் திகதி முதல் 2024-10-08ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை

பெறுகை ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2024-09-18ஆம் திகதி மு.ப. 9.00 முதல் 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.30 வரை

பெறுகை ஆவணங்கள் திறக்கப்படுதல் - 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.45 மணிக்கு

பெறுகை மேற்கொள்ளப்படுகின்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மட்டும் வருகை தந்து அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்தில் தெரிந்துகொள்ளலாம். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்திய பின் ஆரச்சிகட்டுவ பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். சித்திகரமான பெறுகையாளர்கள் சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், பெறுகையை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை

பெறுகை ஆவணத்தை பெற்றுக்கொள்ளும்போது,

- நிர்ணயிக்கப்பட்டுள்ள பிணைத் தொகை மற்றும் படிவக் கட்டணத்தை செலுத்திய பின்னர் இந்த அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் மாதிரிப் படிவத்தில் மாத்திரமே பெறுகையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரரின் ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என்பதோடு அதற்காக தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வெளிநாட்டு கடவுச்சீட்டு என்பவற்றைச் சமர்ப்பிக்கலாம்.
- வதிவிடத்தை உறுதி செய்வதற்காக கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பப்பத்திரத்தை பூர்த்தி செய்து பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைக்கலாம்.

**2025ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் அட்டவணை**

| தொ. இல. | ஆதனங்களின் விபரம் | 2025 குறைந்தபட்ச விலைமனு | விலைக்கோரல் வைப்பு | மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரச்சிகட்டுவ பன்றியிறைச்சிக் கடை | ரூபா 176,987.56 | ரூபா 14,159.00 | ரூபா 5,000.00 |
| 2 | ஆரச்சிகட்டுவ கோழியிறைச்சிக் கடை | ரூபா 176,987.56 | ரூபா 14,159.00 | ரூபா 5,000.00 |
| 3 | ராஜகந்தலுவ பன்றியிறைச்சிக் கடை | ரூபா 69,441.56 | ரூபா 6,944.16 | ரூபா 2,888.83 |
| 4 | கருக்குபனே பன்றியிறைச்சிக் கடை | ரூபா 31,436.16 | ரூபா 3,143.62 | ரூபா 1,628.72 |
| 5 | தெமட்டபிட்டிய பன்றியிறைச்சிக் கடை | ரூபா 67,201.51 | ரூபா 6,720.15 | ரூபா 2,844.03 |
| 6 | பங்கதெனிய பன்றியிறைச்சிக் கடை | ரூபா 28,012.44 | ரூபா 2,801.24 | ரூபா 1,560.25 |
| 7 | 61 சந்தி பன்றியிறைச்சிக் கடை | ரூபா 91,299.73 | ரூபா 9,129.97 | ரூபா 3,325.99 |
| 8 | பத்துலுஓய மாட்டிறைச்சிக் கடை | ரூபா 137,114.67 | ரூபா 10,969.17 | ரூபா 4,242.29 |
| 9 | தாரவில்லுவ மாட்டிறைச்சிக் கடை | ரூபா 73,567.97 | ரூபா 7,356.80 | ரூபா 2,971.36 |
| 10 | புளிச்சாகுளம் மாட்டிறைச்சிக்கடை | ரூபா 162,344.71 | ரூபா 12,987.58 | ரூபா 4,746.89 |
| 11 | விஜயகட்டுபொத பன்றியிறைச்சிக் கடை | ரூபா 29,309.29 | ரூபா 2,930.93 | ரூபா 1,586.19 |
| 12 | புருத்தகெலே பன்றியிறைச்சிக் கடை | ரூபா 27,234.30 | ரூபா 2,723.43 | ரூபா 1,544.69 |
| 13 | வில்பத பன்றியிறைச்சிக் கடை | ரூபா 47,606.97 | ரூபா 4,760.70 | ரூபா 1,952.14 |
| 14 | வில்பத 5ஆம் கட்ட பன்றியிறைச்சிக் கடை | ரூபா 52,912.33 | ரூபா 5,291.23 | ரூபா 2,558.25 |
| 15 | அகுணவில மாட்டிறைச்சிக் கடை | ரூபா 29,049.91 | ரூபா 2,904.99 | ரூபா 1,581.00 |
| 16 | அகுணவில பன்றியிறைச்சிக் கடை | ரூபா 17,118.70 | ரூபா 1,711.87 | ரூபா 1,342.37 |
| 17 | கெலேகம பன்றியிறைச்சிக் கடை | ரூபா 12,968.73 | ரூபா 1,296.87 | ரூபா 1,259.37 |
| 18 | மடம கெலே பன்றியிறைச்சிக் கடை | ரூபா 15,562.46 | ரூபா 1,556.25 | ரூபா 1,311.25 |
| 19 | கோட்டபிட்டிய பன்றியிறைச்சிக் கடை | ரூபா 15,562.46 | ரூபா 1,556.25 | ரூபா 1,311.25 |
| 20 | ஆனவிலுந்தாவ பன்றியிறைச்சிக் கடை | ரூபா 52,912.33 | ரூபா 5,291.23 | ரூபா 2,558.25 |
| 21 | வில்பத கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 22 | உடப்பு கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 23 | ஆடிமுனை கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 24 | பத்துலுஓய கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 25 | விஜயகட்டுபொத கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 26 | வில்பத 5ஆவது கட்ட கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 27 | புருதகலே கோழியிறைச்சிக் கடை | ரூபா 21,435.89 | ரூபா 2,143.59 | ரூபா 1,428.72 |
| 28 | தேவாலய சந்தி பன்றியிறைச்சிக் கடை | ரூபா 16,105.10 | ரூபா 1,610.51 | ரூபா 1,322.10 |
| 29 | தேவாலய சந்தி கோழியிறைச்சிக் கடை | ரூபா 8,052.55 | ரூபா 805.26 | ரூபா 1,161.05 |
| 30 | குமாரகட்டுவ பன்றியிறைச்சிக் கடை | ரூபா 26,409.01 | ரூபா 2,640.90 | ரூபா 1,528.18 |
| 31 | வீரகுமன்தாலுவ கோழியிறைச்சிக் கடை | ரூபா 22,787.17 | ரூபா 2,278.72 | ரூபா 1,455.74 |
| 32 | புளிச்சங்குளம் ஆட்டிறைச்சிக்கடை | ரூபா 29,282.00 | ரூபா 2,928.20 | ரூபா 1,585.64 |
| 33 | புளிச்சங்குளம் மாட்டிறைச்சிக்கடை II | ரூபா 66,550.00 | ரூபா 6,655.00 | ரூபா 2,331.00 |
| 34 | பெனடிக்டா தோட்டம் பொதுக் காணி | ரூபா 12,325.64 | ரூபா 1,232.56 | ரூபா 1,246.51 |
| 35 | ஆரச்சிகட்டுவ பிரதேச சபை காணி | ரூபா 2,143.59 | ரூபா 214.36 | ரூபா 1,042.87 |
| 36 | பங்கதெனிய கோழியிறைச்சிக் கடை | ரூபா 19,487.17 | ரூபா 1,948.72 | ரூபா 1,389.74 |
| 37 | ஜயரத்னபுர பன்றியிறைச்சிக் கடை | ரூபா 39,930.00 | ரூபா 3,993.00 | ரூபா 1,798.60 |
| 38 | மானவேரிய ஹெல போஜுன் சாலை | ரூபா 44,000.00 | ரூபா 4,400.00 | ரூபா 1,880.00 |
| 39 | பஹல அத்தங்கனய பன்றியிறைச்சிக்கடை | ரூபா 19,800.00 | ரூபா 1,980.00 | ரூபா 1,396.00 |
| 40 | ஆரச்சிக்கட்டுவ வாரச்சந்தை | ரூபா 5,225,000.00 | ரூபா 209,000.00 | ரூபா 5,000.00 |
| 41 | மானவேரிய மலசலகூட முறைமை | ரூபா 36,000.00 | ரூபா 3,600.00 | ரூபா 1,720.00 |
| 42 | ஆனவிழுந்தாவ மீன் கடை | ரூபா 66,451.25 | ரூபா 6,645.13 | ரூபா 2,829.03 |
| 43 | குமாரகொட்டுவ குருமிதென்ன பொதுக் காணி | ரூபா 8,052.55 | ரூபா 805.26 | ரூபா 1,161.05 |
| 44 | குமாரகொட்டுவ 8 ஏக்கர் தோட்டக் காணி | ரூபா 5,500.00 | ரூபா 550.00 | ரூபா 1,110.00 |
| 45 | ஆரச்சிகட்டுவ வொலிபோல் கோட் அமைந்துள்ள காணி | ரூபா 14,520.00 | ரூபா 1,452.00 | ரூபா 1,290.40 |

**செயலாளர்,**
**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை,**

**ஆரச்சிகட்டுவ பிரதேச சபை அலுவலகத்தில்.**
**2024-09-12.**
**தொலைபேசி இல. 0322259783**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| Tender No. | Name of the Tender | Bid Security Amount (Rs.) | Document fee (Inclusive of VAT) | Closing Date &Time |
|---|---|---|---|---|
| CES/FP/02/ PT/6614(MP) | 08 Nos. Catenary Trolley Wire Ropes for 65T STS Cranes at ECT | 28,000.00 | 1,000.00 | 24/10/2024 10.00hrs |
| CMS/LP/24/PT/08/013 | 01 No. Scanner A2 Flatbed Color | 30,000.00 | 1,000.00 | 03/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/10/011 | 02 Nos. of Low Bed Trailer ( 80 Ton ) | 240,000.00 | 3,500.00 | 03/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/14/055 | 01 No. Bilge Pump for Tannac Tug | 30,000.00 | 1,000.00 | 03/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/16/058 | Spares for UD Nissan PF – 06 Engines | 70,000.00 | 1,000.00 | 04/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/02/054 | 02 BRL Radiator Coolant for Cummins Engines | 25,000.00 | 1,000.00 | 04/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/16/056 | 30 Nos. Sealed Type Battery 12V 200 AMPH ( Semi – Maint , Free) | 25,000.00 | 1,000.00 | 04/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/08/063 | 30 Nos. Leaf Spring Assembly | 16,000.00 | 1,000.00 | 07/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/18/054 | Filter Element / Water Separator ( T 13016578 ) | 18,000.00 | 1,000.00 | 07/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/08/065 | Spares for JCB 1 CX Backhoe Loader | 25,000.00 | 1,000.00 | 07/10/2024 13.30hrs |
| CMS/LP/24/PT/04/064 | Spares for Caterpillar C – 15 Engines of ZPMC 41T RTGC ( TC – 60 ) at JCT | 45,000.00 | 1,000.00 | 08/10/2024 13.30hrs |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 செப்டெம்பர் 13 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் மூடும் திகதிக்கு முன்னைய நாள் வரையும் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

கொபெய்கனே பிரதேச சபைக்குச் சொந்தமான 43-4450 பதிவு இலக்கம் கொண்ட டொயோட்டா ஹைஏஸ் வகை வேன் இற்காக 32 வகை என்ஜின் மற்றும் கியர் பெட்டியை புதிதாக பொருத்துவதற்காக 2024.10.04 மு.ப. 10.00 வரை என்னால் விலைமனுக்கள் ஏற்கப்படுவதுடன் அன்றே மு.ப. 10.30 இற்கு பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் ஏற்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளுடன் தயாரிக்கப்பட வேண்டியதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு ஒரே உறையில் உட்படுத்தி அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘43-4450 இலக்க வேன் இற்காக புதிய என்ஜினை பொருத்துதல்’ என்று குறிப்பிட்டு செயலாளர், பிரதேச சபை, கொபெய்கனே என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம். மேலதிக விபரங்களை சபைக்கு வருகைதந்து அல்லது 037-2293076 தொ.பே. இலக்கத்தை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**பிரதேச சபை, கொபெய்கனே.**

2024.09.10ம் திகதி
**கொபெய்கனே பிரதேச சபையில்.**

## 2024/2025 ஆம் ஆண்டுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களின் பதிவுக்கான அழைப்பு

**(20,000,000.00 ரூபாவுக்கு மேற்படாத ஒப்பந்தங்கள்)**

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு (20,000,000.00 ரூபாவுக்கு மேற்படாத ஒப்பந்தங்களுக்காக) 2024/2025 ஆம் ஆண்டுக்காக பராமரிப்பு ஒப்பந்ததாரர்களின் பதிவுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடம் இருந்து கொழும்பு 10, சங்கைக்குரிய விமலவன்ச தேரர் மாவத்தை, 385, ‘சுவசிறிபாய’, சுகாதார அமைச்சின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (C), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட முன் தகைமை ஆவணங்கள் கோரப்படுகின்றன.
2. வேலைத் தளங்கள் சுகாதார அமைச்சுக்குள் அமைந்திருப்பதோடு கட்டிட வேலைகள் நிறுவனங்களின் வழக்கமான செயற்பாடுகளுக்கு இடையூறு இன்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குறித்த வேலையின்படி ஒப்பந்தக் காலம் அமையலாம். நாளாந்த அவசர பழுதுபார்த்தல்கள், குழாய் பொருத்தல், கழிவு நீர், மின், வர்ணம் பூசுதல், கொங்கிறீற், வளிச்சீராக்கி, நீர்க் காப்பு, அலுமினியம் வேலைகள் முதலிய இதர வேலைகள் அடங்கும்.
3. தேசிய பெறுகை நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 2006, பெறுகை வழிகாட்டல் நடைமுறையை பின்பற்றி, ஆவணத்தில் தரப்பட்ட தகுதிக்கான தேவைகளுக்கு அமைய முன் தகைமை அமையும்.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான ஒப்பந்ததாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்:

   **சிறப்புத் தன்மை:** கட்டிடம், மின், குழாய் பொருத்தல்

   **தரம்:** C5 மற்றும் அதற்கு மேல், EM5 மற்றும் அதற்கு மேல்
5. பராமரிப்பு/ பிரதான ஒப்பந்ததாரர் ஒருவராக குறைந்தது கடந்த இரண்டு ஆண்டுகளின் பணி அனுபவம் ஒப்பந்தம் வழங்குவதற்கு தேவையான தகுதியில் உள்ளடங்கும். ஒப்பந்ததாரர் பராமரிப்பு வேலைக்கும் உடன் வருகை தர முடியுமாக இருத்தல் மற்றும் வெற்றிகரமான அந்த வேலையை பூர்த்தி செய்தல் வேண்டும். வேலை அனுபவத்திற்காக அத்தாட்சி ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 1500.00 ரூபாவை செலுத்தி சாதாரண அலுவலக நேரங்களில் 2024.09.13 ஆம் திகதி தொடக்கம் 2024.10.03 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சு, பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (ஏற்பாட்டியல்) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய ஒப்பந்ததாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான முன் தகைமை விண்ணப்ப ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம். சுகாதார அமைச்சு, சிறாப்பருக்கு கட்டணத்தை ரொக்கப்பணத்தில் செலுத்த வேண்டும்.
7. முன் தகைமை விண்ணப்பங்களை 2024.10.04 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 10, சங்கைக்குரிய விமலவன்ச தேரர் மாவத்தை, 385, ‘சுவசிறிபாய’, சுகாதார அமைச்சு, பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (ஏற்பாட்டியல்) அலுவலகத்திற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. அனைத்து விண்ணப்பங்களும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரினால் முறையாகக் கையொப்பமிட்டு தரப்பட்ட வடிவத்தில் அறிவிப்பு ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**பிரதி பணிப்பாளர் நாயகம் (ஏற்பாட்டியல்),**
**சுகாதார அமைச்சு,**
**‘சுவசிறிபாய’,**
**385, சங்கைக்குரிய விமலவன்ச தேரர் மாவத்தை,**
**கொழும்பு 10.**

අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### செயற்பாட்டு நீண்டகால குத்தகை முறையின் கீழ் நான்கு (04) வேன்கள் மற்றும் மூன்று (03) கெப் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பெறுகைக் குழுத் தலைவரினால் செயற்பாட்டு நீண்டகால குத்தகை முறையின் கீழ் நான்கு (04) வேன்கள் மற்றும் மூன்று (03) கெப் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

01. (i) வாகனத்தின் கொள்ளளவு - 2500 - 3000 CC ஆகவிருத்தல் வேண்டும்.
    (ii) இதன்பொருட்டு ஏழு வாகனங்களுக்கும் அல்லது அதற்குக் குறைவான எண்ணிக்கைக்கும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
02. வாகனத்தின் நிலைமை: வாகனம் புத்தம்புதிய நிலைமையில் அல்லது வாடகைக்கு பெறப்படும் வேளையில் 175,000 கி.மீற்றருக்கு குறைவாக ஓடியிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்தக் காலம்: அறுபது (60) மாதங்கள்.
04. தகைமை வாய்ந்த வழங்குநர்கள் மோட்டார் வாகனங்களை வாடகைக்கு வழங்கும் சேவையை நடாத்திக்கொண்டு செல்லும் நிறுவனமாக அல்லது நபராக இருத்தல் வேண்டும்.
05. வழங்க வேண்டிய சேவைகள்: திடீர் விபத்து, திருத்தவேலை செலவுகள் என்பவற்றை வழங்குநர் ஏற்றுக்கொள்ள வேண்டும். திருத்தவேலை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைளுக்காக 24 மணி நேரத்திற்கும் மேற்பட்ட காலம் எடுக்குமானால் வழங்குநர் அந்த வாகனத்திற்குச் சமமான வாகனமொன்றை வழங்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 2024-10-10ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கணக்காளரிடமிருந்து (பெறுகை) 011-2588004 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள உரிய விலைமனுக்களை 2024-09-18ஆம் திகதி முப. 9.00 மணி முதல் 2024-10-10 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத 3000.00 ரூபா வைப்பைச் செலுத்தி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பிரதான கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை கொழும்பு-07, மலலசேகர மாவத்தை, 36ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு புதிய கட்டிடத்தின் 03ஆம் மாடியிலுள்ள சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை தலைவர், பெறுகைக் குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு-07 எனும் முகவரிக்கு 2024-10-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த ஆணைக்குழுவின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘ செயற்பாட்டு நீண்டகால குத்தகை முறையின் கீழ் நான்கு (04) வேன்கள் மற்றும் மூன்று (03) கெப் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல்’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,**
**இல. 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.**
**தொலைபேசி: 0112582864, 0112596365 தொலைநகல்: 0112058346**

**நீர்ப்பாசன அமைச்சு**

## இலங்கை மகாவலி அதிகார சபை

## கேள்வி அறிவித்தல்

1. இலங்கை மகாவலி அதிகார சபையின் (MASL) திணைக்களப் பெறுகைக் குழுத் தவிசாளரின் சார்பில் கொழும்பு-10, இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை, 09வது மாடி, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் 2024-10-04ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு பின்வரும் வேலைகளுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த இல. | விபரங்கள் | ஒரு தொகுதி ஆவணங்களுக்கான மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை | கேள்வி முன்னோடிக் கூட்டத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | DDG/TS/CON/ E&M/ SOLAR/01 | இலங்கை மகாவலி அதிகார சபைக்குரித்தான பின்வரும் பிரதேச அலுவலகக் கட்டிடங்களுக்கு வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் - கட்டம் I<br>B வலயம் (வெலிகந்த) - 40kW<br>G வலயம் (பக்கமூன) - 40kW<br>EIC மாபாகந்த - 20kW<br>EIC மாதுருஓய - 20kW<br>RPM ரம்பக்கென்ஓய - 40kW<br>C வலயம் (தெஹியத்தகண்டிய) - 20kW<br>D வலயம் (மெதிரிகிரிய) - 50kW | 10,000.00 | 670,000.00 | திகதி:<br>2024-09-23<br><br>நேரம்:<br>மு.ப. 10.00 மணி<br><br>இடம்:<br>மினி கூட்ட மண்டபம், 09ஆம் மாடி, இல. 500, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 |
| 02 | DDG/TS/CON/ E&M/ SOLAR/02 | இலங்கை மகாவலி அதிகார சபைக்குரித்தான பின்வரும் பிரதேச அலுவலகக் கட்டிடங்களுக்கு வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் - கட்டம் II<br>E&F (கொத்மலை) - 70kW<br>DMD&RO (திகன) - 10kW<br>EIC பொல்கொல்ல - 50kW<br>EIC கொத்மலை - 50kW<br>EIC ரன்தெனிகல - 20kW | 10,000.00 | 580,000.00 | |
| 03 | DDG/TS/CON/ E&M/ SOLAR/03 | இலங்கை மகாவலி அதிகார சபைக்குரித்தான பின்வரும் பிரதேச அலுவலகக் கட்டிடங்களுக்கு வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் - கட்டம் III<br>EIC உடவளவ - 80kW<br>EIC போவதென்ன - 20kW<br>EIC மொரகஹகந்த - 100kW<br>RBM மடதுகம - 40kW | 10,000.00 | 680,000.00 | |
| 04 | DDG/TS/CON/ HO/ SOLAR/09 | தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு 100 மறு வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 8,000.00 | 350,000.00 | |
| 05 | DDG/TS/CON/ HW/ SOLAR/34 | விக்டோரியா - EIC அலுவலகக் கட்டிடத்திற்கு 25kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 2,000.00 | 85,000.00 | |
| 06 | DDG/TS/ CON/W/ SOLAR/71 | வளவ விசேட அதிகாரப் பிரதேசம் - RPM அலுவலகத்தின் விடுமுறை பங்களாவிற்கு 20kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமை மற்றும் பிரதான கட்டிடத்திற்கு 80kW வலையமைப்புடன் தொடர்புள்ள கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 8,000.00 | 310,000.00 | |
| 07 | DDG/TS/ CON/C/ SOLAR/22 | வலயம் C - RPM அலுவலகக் கட்டிடத்திற்கு 50kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 5,000.00 | 160,000.00 | |
| 08 | DDG/TS/ CON/E/ SOLAR/03 | வலயம் E - RPM அலுவலகக் கட்டிடத்திற்கு 25kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 2,000.00 | 85,000.00 | |
| 09 | DDG/TS/ CON/H/ SOLAR/51 | தம்புத்தேகம - RPM அலுவலகத்தின் கலாவெவ விடுமுறை பங்களாவிற்கு 25kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமை மற்றும் பிரதான கட்டிடத்திற்கு 25 மறு வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 5,000.00 | 175,000.00 | |
| 10 | DDG/TS/ CON/L/ SOLAR/37 | வலயம் L - RPM அலுவலகக் கட்டிடத்திற்கு 50kW வலையமைப்புடன் தொடர்புள்ள (Grid) கூரைக்கு மேலான சூரிய சக்தி பெனல் முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் | 5,000.00 | 160,000.00 | |

2. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும்.
3. இயைபுடைய விலைமனுதாரர்கள் 2024-09-13ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களுக்கான ரொக்கப் பணமாக மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மற்றும் கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 3ம் மாடியின் (தொழில்நுட்ப சேவைகள்) பிரதிப் பணிப்பாளருக்கு நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் சமர்ப்பித்து இவ்வேலைகளுக்கான கேள்விப் படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு கேள்விதாரரும் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப் படிவங்களைச் சுதந்திரமாகச் சமர்ப்பிக்கலாம். கேள்வி முன்னோடிக் கூட்டம் பின்வரும் முகவரியில் உள்ள 09ஆம் மாடியில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் இடம்பெறும்.
4. கேள்வி ஆவணங்களை 2024-09-13ஆம் திகதி முதல் 2024-10-03ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 3ம் மாடியின் (தொழில்நுட்ப சேவைகள்) பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் மற்றும் http//mahaweli.gov.lk எனும் இணையதளத்தில் கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. மேற்கூறிய கேள்விகளுக்கான வேலைத் தள விஜயம் இயைபுடைய அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. திகதி, நேரம் மற்றும் ஏனைய விபரங்களுக்கு 011-2505675 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பணிப்பாளர் (மின்சாரம் மற்றும் இயந்திரவியல்) பணிப்பாளரை தயவு செய்து தொடர்புகொள்ளவும்.
6. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு, முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியுடன் 2024-10-04ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கொழும்பு-10, டீ.பி. ஜாயா மாவத்தை, இல. 500இல் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகார சபையின் 9ஆம் மாடியின் பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாகக் கையளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யலாம். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதிகளான இரண்டுக்கு (2) மேற்படாத நபர்கள் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளலாம்.
7. கேள்விப் படிவங்களுடன் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. இது தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கை மகாவலி அதிகார சபையின் மின்சாரம் மற்றும் இயந்திரவியல் பிரிவைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-2505657, மின்னஞ்சல்: enmunit@gmail.com.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை மகாவலி அதிகார சபை,**
**இல. 500, டீ.பி. ஜாயா மவாத்தை,**
**கொழும்பு-10.**

# 2025ஆம் வருடத்தில் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்

## பிரதேச சபை - இப்பாகமுவ

இப்பாகமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களை 2025 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து 2025 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் படிவம் விநியோக ஆரம்பத் இறுதித் திகதி - 2024-09-18ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல்
02. கேள்விப் படிவம் விநியோக இறுதித் இறுதித் திகதி - 2024-10-08ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
03. கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கும் திகதி - 2024-09-18ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல்
04. கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2024-10-09ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை
05. கேள்விகளைத் திறக்கும் திகதி - 2024-10-09ஆம திகதி பி.ப. 1.30 மணிக்கு

பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணைத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணமான 1000.00 ரூபாவைச் செலுத்தி இப்பாகமுவ பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தினால் மட்டும் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை பிழையின்றி மற்றும் தெளிவாகப் பூர்த்தி செய்து கேள்வி நிபந்தனைகளின் 04ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் சபையில் ஒப்படைத்தல் வேண்டும்.

### கேள்வி நிபந்தனைகள்

01. கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும்போது தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. இப்பாகமுவ பிரதேச சபை மூலம் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட நபர்கள் மற்றும் இப்பாகமுவ பிரதேச சபையின் ஆதனங்கள் மற்றும் சொத்துகளை குத்தகைக்கு பெற்று இடை நடுவே கைவிட்ட அல்லது பிரதேச சபையுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மீறியுள்ள நபர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.
03. கேள்வி விண்ணப்பப் படிவங்கள் முறையாக பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என்பதோடு கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையில் ஆதனத்தின் பெயர் மற்றும் விலைமனுதாரரின் முகவரியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் கேள்வி விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் நிரந்தர முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணமொன்றும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (கிராம சேவையாளரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ், விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நீர், மின்சாரம், தொலைபேசி பற்றுச்சீட்டுகளில் ஒன்று)
04. கேள்வி விண்ணப்பங்கள் இரு படிவங்களை கொண்டதாக வழங்கப்படுவதோடு அந்த விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து வெவ்வேறான இரு கடித உறைகளில் இட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தெளிவாக உறையின் இடது பக்கம் குறிப்பிடல் வேண்டும். அதன் பின் இரு கடித உறைகளையும் ஒரு உறையில் இட்டு செயலாளர், பிரதேச சபை, இப்பாகமுவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகளை நேரில் ஒப்படைக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
05. 2024-10-09ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு இப்பாகமுவ பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் நிதி மற்றும் கேள்விக் குழு முன்னிலையில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
06. இப்பாகமுவ பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் மீண்டும் சமர்ப்பிக்காத மற்றும் சபையின் ஆகக் குறைந்த கேள்விக்குக் குறைவாக கேள்விகளைச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவ்வாறானவர்களினால் ஏற்கனவே செலுத்தப்பட்ட பிணைத் தொகை மீளளிப்பது தடை செய்யப்பட்டு அந்தத் தொகை சபையின் கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.
07. வெற்றிகரமான கேள்விதாரர் கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதன் பின் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் குறித்த கேள்வித் தொகையின் 04 மாதத்திற்குச் சமமான தொகையை பாதுகாப்புப் பிணை மற்றும் உடன்படிக்கை பிணையாக வைப்புச் செய்து உடன்படிக்கை ஒன்றுக்கு வர வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத் தவறும் கேள்விதாரர்களின் கேள்விப் படிவங்கள் நிர்ணயிக்கப்பட்ட தினத்தின் பின் இரத்துச் செய்யப்பட்டதாக கவனத்திற் கொள்ளப்படும்.
08. தவணை முறையில் செலுத்தப்படும் கேள்விதாரரின் கேள்வித் தொகை சமமான 10 தவணைகளில் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும் என்பதுடன் கேள்விக்காக வைப்புச் செய்துள்ள கேள்விப் பிணைத் தொகையை உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின் பெற்றுக்கொள்ளலாம்.
09. வெற்றிகரமான விலைமனுதாரர் குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின் ஏனைய விண்ணப்பதாரர்களின் கேள்விமனு பிணைத் தொகை விடுவிக்கப்படுவதோடு கேள்விமனு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொண்டு கேள்விமனுவை சமர்ப்பிக்காத நபர்களின் பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட திகதியில் உடன்படிக்கைக்கு வராத விலைமனுதாரர்களின் கேள்விமனுக்கள் பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.
10. சபைக்குரித்தான வாரச்சந்தைகள், மலசலகூடங்கள் மற்றும் காணி என்பவற்றைப் பாதுகாத்தல் அல்லது அந்த ஆதனங்களில் பாவிக்கப்படும் மின்சாரம், பராமரிப்புக் கட்டணங்களை செலுத்துவதற்கு குத்தகைதாரர் கட்டுப்படல் வேண்டும்.
11. சகல வெற்றிகரமான கேள்விதாரர்களும் மேற்கூறிய நிபந்தனைகள் மற்றும் பிரதேச சபையினால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும் என்பதுடன் நடைமுறையிலுள்ள இடைக்கால சட்டவாக்கத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.
12. எந்தவொரு கேள்வியையும் முழுமையாக அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை இப்பாகமுவ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
13. பெறுகைக் குழுவினால் விலைகள் அங்கீகரிக்கப்பட்டாலும், அங்கீகரிக்கப்பட்ட தொகைக்குப் புறம்பாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசினால் விதிக்கப்படும் எந்தவொரு வரியையும் செலுத்துவதற்கு நீங்கள் இணங்க வேண்டும்.

மேலதிக விபரங்களை இப்பாகமுவ பிரதேச சபைக்கு நேரில் வந்து அல்லது 037 2259977 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**எச்.எம். நிரோஷா ஹேரத்,**
**செயலாளர்,**
**பிரதேச சபை அலுவலகம்,**
**இப்பாகமுவ.**
2024-09-11.

| தொ. இல | ஆதனத்தின் பெயர் | குறைந்தபட்ச கேள்வி | கேள்விப் பிணை (மீளளிக்கப்படும்) ரூபா |
|---|---|---|---|
| | **வாரச் சந்தைகள்** | | |
| 01 | இப்பாகமுவ புதிய வாரச்சந்தை - திங்கள் மற்றும் வியாழக்கிழமை | 2,735,000.00 | 109,400.00 |
| 02 | மெல்சிறிபுற வாரச்சந்தை | 3,593,000.00 | 143,720.00 |
| 03 | மெல்சிறிபுற ஞாயிறு சந்தை | 4,991,800.00 | 199,672.00 |
| 04 | ஹிரிபிட்டிய புதன் வாரச்சந்தை | 543,703.05 | 27,186.00 |
| | இறைச்சிக் கடைகள் | | |
| 05 | ஹிரிப்பிட்டிய மாட்டிறைச்சிக் கடை | 849,200.00 | 42,460.00 |
| 06 | ஹிரிபிட்டிய வாரச்சந்தை பன்றியிறைச்சிக்கடை | 243,870.00 | 19,510.00 |
| | கடை அறைகள் | | |
| 07 | ஹிரிபிட்டிய உப அலுவலகத்திற்கு இடதுபுறமுள்ள கடை அறை | 66,000.00 | 6,600.00 |
| 08 | கொக்கரெல்ல உப அலுவலகத்திற்கு இணைவாகவுள்ள கடை அறை - இல. 01 | 85,525.00 | 8,552.50 |
| 09 | கொக்கரெல்ல உப அலுவலகக் காணியின் கடை அறை - இல. 02 | 85,525.00 | 8,552.50 |
| | விளைச்சல்களை குத்தகைக்கு வழங்குதல் | | |
| 10 | தம்பகல்ல மயானக் காணியின் தேங்காய் விளைச்சல் | 7,920.00 | 792.00 |
| 11 | மெல்சிறிபுற தகனச்சாலைக் காணியின் தேங்காய் விளைச்சல் | 7,590.00 | 759.00 |
| 12 | மெல்சிறிபுற தகனச்சாலைக்கு அருகிலுள்ள காணியின் தேங்காய் விளைச்சல் | 14,575.00 | 1,458.00 |
| 13 | சிறிபுறவத்த ஏலக் காணியின் தேங்காய் விளைச்சல் | 6,930.00 | 693.00 |
| 14 | வாகொல்லவத்த வயல் | 4,015.00 | 402.00 |
| 15 | வாகொல்லவத்த பொதுக் காணி 2 | 3,267.00 | 327.00 |
| 16 | பான்கொல்ல ரத்மலே வத்த | 14,775.00 | 1,478.00 |
| 17 | ஹித்தன அரலிய உயன | 7,700.00 | 770.00 |
| 18 | கொஸ்லன்தவத்த கும்புர | 6,710.00 | 671.00 |
| 19 | பன்லியத்த காணி | 1,980.00 | 198.00 |
| 20 | ஹங்கமுவ எஸ்டேட் பொதுக் காணி | 2,970.00 | 297.00 |
| 21 | ஹங்கமுவ எஸ்டேட் 1 பொதுக் காணி | 3,960.00 | 396.00 |
| 22 | ஹங்கமுவ எஸ்டேட் 2 பொதுக் காணி | 2,970.00 | 297.00 |
| 23 | அம்பேவெல வத்த 1 | 7,326.00 | 733.00 |
| 24 | அம்பேவெல வத்த 2 | 5,324.00 | 533.00 |
| 25 | கொலன்கொல்ல வத்த | 32,670.00 | 3,267.00 |
| 26 | பம்பலுவ இஹல வத்த நிம்தெர உயன (கட்டம் 1) | 6,710.00 | 671.00 |
| 27 | பம்பலுவ இஹல வத்த நிம்தெர உயன பகுதி 1 (கட்டம் 2) | 6,655.00 | 667.00 |
| 28 | பம்பலுவ இஹல வத்த நிம்தெர உயன பகுதி 2 (கட்டம் 2) | 6,655.00 | 667.00 |
| 29 | அம்பன்பொல வத்த | 3,465.00 | 347.00 |
| 30 | பான்கொல்ல கொல்லம்பவ்வ வத்த 1 | 6,820.00 | 682.00 |
| 31 | பான்கொல்ல கொல்லம்பவ்வ வத்த 2 | 6,160.00 | 616.00 |
| 32 | பத்தலகொட இஹலவத்த இலக்கம் 01 | 1,188.00 | 119.00 |
| 33 | பத்தலகொட இஹலவத்த இலக்கம் 02 | 1,188.00 | 119.00 |
| 34 | பத்தலகொட எஸ்டேட், ரணவிருகம | 990.00 | 99.00 |
| 35 | நிந்தபெல்ல உடவெலவத்த | 990.00 | 99.00 |
| 36 | கலபொத்தேயாய வத்த | 1,188.00 | 119.00 |
| 37 | தேவால லந்த வத்த | 1,188.00 | 119.00 |
| 38 | கிரிந்திகல்ல டேசிலாண்ட் வத்த | 1,980.00 | 198.00 |
| 39 | மகுல்மடுவ வத்த | 17,028.00 | 1,703.00 |
| 40 | நில்ஹார தோட்ட பொதுக் காணி | 3,630.00 | 363.00 |
| 41 | கிரீன் ரெசிடண்ட் பொதுக் காணி உஸ்ஸாவ | 3,685.00 | 369.00 |
| 42 | இப்பலவ மஹபிட்டிய வத்த பொதுக் காணி | 3,960.00 | 396.00 |
| 43 | மாய்வெல மஹவெலவத்த எஸ்டேட் 1 | 4,950.00 | 495.00 |
| 44 | மாய்வெல மஹவெலவத்த எஸ்டேட் 2 | 3,300.00 | 330.00 |
| 45 | முதுன்துவ பத்தலகொட எஸ்டேட் | 6,710.00 | 671.00 |
| 46 | மாலகமுவ எஸ்டேட் பொதுக் காணி | 4,950.00 | 495.00 |
| 47 | பன்லியத்த வத்த பொதுக் காணி 1 | 9,350.00 | 935.00 |
| 48 | பன்லியத்த வத்த பொதுக் காணி 2 | 7,623.00 | 763.00 |
| 49 | தல்கொடபிட்டிய தலுபொதே லன்தஹேன காணி | 10,395.00 | 1,040.00 |
| 50 | கப்புஹேனவத்த ஏலக் காணியின் பொதுக் காணி | 18,271.00 | 1,828.00 |
| 51 | துன்முல்லேஹேன மற்றும் கந்துபொடஹேன வத்த பொதுக் காணி (கனவ) | 9,350.00 | 935.00 |
| 52 | தியதுரே பம்புறுகடுவ பொதுக் காணி | 5,874.00 | 588.00 |
| 53 | கருவலகஸ்வெவ இஹலஹேன பொதுக் காணி (இல. 7 மற்றும் 11) | 52,800.00 | 5,280.00 |
| 54 | கருவலகஸ்வெவ இஹலஹேன பொதுக் காணி (இல. 14 பகுதி) | 2,640.00 | 264.00 |
| 55 | ஹங்கமுவ அபிமன்புர பொதுக்காணி | 22,000.00 | 2,200.00 |
| 56 | கும்பல்அங்க பரணகம்பிட்டிய சுரம்யா உயன | 8,800.00 | 880.00 |
| 57 | உடவெல தமுனுகொல்லயாய பொதுக் காணி | 8,855.00 | 886.00 |
| 58 | பொதுவில வெவகாவ ஹேன பொதுக் காணி | 3,520.00 | 352.00 |
| 59 | தம்பகல்ல குருன்னேஹேலாகே ஹேன பொதுக் காணி | 1,350.00 | 135.00 |
| 60 | சன்னானாகம கோன்கஹமுல வத்த பொதுக் காணி | 6,050.00 | 605.00 |
| 61 | தரமிட்டிபொல முவன்கல ஹேன்பொல பொதுக் காணி | 3,300.00 | 330.00 |
| 62 | கிரிந்திகல்ல டேசிலன்ட் தோட்ட II காணி | 4,050.00 | 405.00 |
| 63 | உஸ்ஸாவ லிஹினியகொல்ல தோட்ட பொதுக் காணி | 4,510.00 | 451.00 |
| 64 | தியாவ வளவ்வத்த பொதுக் காணி | 1,760.00 | 1,766.00 |
| 65 | பதலகொட சிறுவர் பூங்காவின் பாற் சாலை | 45,000.00 | 4,500.00 |
| | **பொது மலசலகூடம்** | | |
| 66 | இப்பாகமுவ நகரத்தின் பொது மலசலகூடம் | 9,900.00 | 990.00 |
| 67 | மெல்சிரிபுற நகரத்தின் பொது மலசலகூடம் | 14,850.00 | 1,485.00 |

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

# அறிவித்தல்

## தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தி தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 30 ஆம் பிரிவின் கீழ், தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு இவ் அறிவித்தலின் அகத்தேயுள்ள அட்டணையில் குறித்துரைக்கப்பட்டவாறான தீர்மானங்கள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவென சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிவு 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி.ஏ. விமலவீர**
**செயலாளர்,**
**தொழில் மற்றும் வெளிநாட்டு**
**வேலை வாய்ப்பு அமைச்சு.**

**'மெஹெவர பியச',**
**தொழில் திணைக்களம்,**
**கொழும்பு -05.**
2024ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆந் திகதி

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் அட்டணையின் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி 11**
**நாளாந்த நேரவேலைக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதம்**

I ஆகக் குறைந்த நாளாந்த சம்பளம் - ரூபா. 1350.00
(இத் தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்கின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும்.)

II ஒவ்வொரு மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் - ரூபா. 50.00

இந்த முடிபுகளை 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதியிலிருந்து தொடங்கி மூன்று வருட காலத்திற்கு அமுல்படுத்துவதென சம்பளச்சபை தீர்மானித்துள்ளது.

# பெறுகை அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு (IFB)

## பொதுக் கல்வி புதுப்பித்தல் செயற்றிட்டம் (GEMP)

## மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம்

## தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. வடமத்திய மாகாணத்தில் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள மற்றும் திறன் உடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | ஒப்பந்த இலக்கம் | உருப்படியின் பெயர் | அளவு | கேள்விப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | NCP/ED/AC9/PC/GEMP/08/2024 | Video Camera | 19 | 122,500.00 | 3,500.00 |
| 02 | NCP/ED/AC9/PC/GEMP/09/2024 | Desktop Computers | 18 | 124,800.00 | 3,500.00 |
| | | UPS (650VA) | 18 | 2,700.00 | |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் மூலம் கேள்வி கோரல் நடைபெறும்.

03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத ஒருவராக இருப்பதுடன் சட்டரீதியான அதிகாரமுள்ளவரால் விநியோகிக்கப்பட்ட குறித்த துறையில் செல்லுபடியாகும் வியாபார பதிவுச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வம் காட்டுகின்ற தகைமையான கேள்விதாரர்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களை வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் (தொ.பே. 025-2222432) இடம் 2024 செப்டெம்பர் 13ம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 04 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 பி.ப. 3.00 இற்கு இடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே அக்காலத்திற்குள் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு) செலுத்திய பின்னர் கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதிகளை கொள்வனவு செய்யலாம்.

05. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம், தகைமை மற்றும் ஏனைய குறித்த நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06. கேள்வியுடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு கேள்வி பிணைமுறி இருத்தல் வேண்டும். அத்துடன் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கிப் பிணை முறியாக இருத்தல் வேண்டும். இல்லையெனில் அதனை காசாகவும் செலுத்தலாம். குறித்த வங்கிப் பிணை முறி, கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் திகதி வரை செல்லுபடியாக இருப்பதுடன் நாட்டிற்குள் மாற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

07. இக்கேள்வி சமர்ப்பித்தல் (மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு) ஒப்பந்தம் (பெக்கேஜ்) 2ஆக செயற்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு ஒரு பெக்கேஜ் (இரு உருப்படி) அல்லது ஒரு உருப்படியாக கேள்வி வைக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

08. பூர்த்தி செய்த கேள்வி 'மூலப்பிரதி' மற்றும் 'நகல் பிரதி' என இரு பிரதிகளுடன் தயாரிக்கப்படுவதுடன் அவ் இரு பிரதிகளையும் வேறு வேறு பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் முத்திரையிடப்பட்ட உறையில் உள்ளிடல் வேண்டும். அதன் இடது பக்க மேல் மூலையில் Video கெமரா 19ஐ கொள்வனவு செய்தல் - 2024" என்று ஒரு பெக்கேஜ் உம் Desktop கணனி மற்றும் UPS இயந்திரங்கள் 18ஐ கொள்வனவு செய்தல் - 2024 என்று அடுத்த பெக்கேஜ் ஆகவும் குறிப்பிட்டு, வேறுவேறாக ஒப்பந்த இலக்கங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. கேள்விக்கு முன்னரான சந்திப்பொன்று 2024.09.25 பி.ப. 2.00 இற்கு 04ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்படும் பிரதம கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் நடத்தப்படும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம் வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி 2024 ஒக்டோபர் 07ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி குறித்த நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் ஆரம்பமாவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

11. கிடைக்கப்பெற்றுள்ள கேள்விகள் ஒன்று அல்லது சகலதையும் அல்லது ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் எவ்வேளையிலும் ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிப்பதற்கு உரிய உரிமை திணைக்கள பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணத்திற்கு உரித்தாவதுடன் அதன் காரணமாக கேள்விதாரர்/ கேள்விதாரருடன் எந்த இணக்கப்பாடும் அல்லது பொறுப்பும் கிடையாது. அத்துடன் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

CP JW-3360 PROTON WIRA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062953

NP JE-0786 HYUNDAI SONATA அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062964

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

64-7257 TOYOTA COROLLA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062962

### 109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு

300-1946 MITSUBISHI LANCER CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062949

### 113 சுசூகி கார்கள் விற்பனைக்கு

CAO-1716 SUZUKI ALTO 2015, CBK-1879 SUZUKI ALTO 2016, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210 810/ 0705999163. 062987

WP CAR-1329 SUZUKI CELERIO CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062950

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

ND-5821 ASHOKLEYLAND 2007, BUS கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே 0711210810/ 0714542958. 062982

NP ZB-2 0 45 KOBELCO WH E EL LOADER அதியுயர் விலை க்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062954

WP LM-8459 TATA LPK1615 SUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062957

WP PQ-0366 TATA ACE HT TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062952

WP ZA-2050 JCB 3CK BACKHOE LOADER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062965

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

EP BJG-5771 RANO MOTO GN125 அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062960

NW YO-3463 MAHINDRA ALFA THREEWHEEL அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062955

QZ-3510 BAJAJ 2010, THREE WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே 0711210810/ 0705999163. 062990

UP AAH-9 467 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062958

WP BJC-3209 RANOMOTO PATTAYA BIKE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 07701072 70, 07747892 16. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 062956

## வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பொலன்னறுவ ரெஸ்டூரன்ட் - கொத்து, சமோசா, ரைஸ் அன்ட் கறி கோக்கிமார் தேவை. 077-7389219. 063147

## மூடுதல் தொடர்பான அறிவித்தல்

அரச சார்பற்ற நிறுவனத்தின் தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள Stromme Foundation எனும் நிறுவனமானது, 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் இலங்கையில் தனது நிறுவன செயற்பாடுகளை முடிவுறுத்தி நிறைவு செய்து கொள்வதாக இத்தால் அறியத்தருகின்றது.

**அரச சார்பற்ற நிறுவனத்தின் பெயர் :** "ஸ்ட்ரோம் பவுன்டேஷன்" (Stromme Foundation)

**பதிவு இலக்கம் :** FL 34304

**பதிவுசெய்யப்பட்ட விலாசம் :** இல. 3ஏ, குணசேகர கார்டன்ஸ், நாவல வீதி, ராஜகிரிய

**Acting Country Coordinator**
**Stromme Foundation**

## இலங்கை தேசிய வைத்தியசாலையில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இறப்பர் கலந்த தும்பு மெத்தை / துணிமணிகள் / சப்பாத்து / செருப்பு / மெகின்டொஷ் / துணி மற்றும் இறப்பர் கலந்த உற்பத்திகளை எரித்து அழிப்பதற்கான விலைமனுகோரல் - 2023-2024ம் ஆண்டு

கொழும்பு - 10, இலங்கை தேசிய வைத்தியசாலையில் அகற்றப்பட்ட மேற்படி உருப்படிகளை எரித்து அழிப்பதற்காக குறித்தல் துறையில் அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்கள் அல்லது அரசில் பதிவு செய்த நிறுவனங்களில் இருந்து 2024.10.02 மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அன்றே ஆரம்ப வாரத்தின் நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத ரூ. 1500.00 தொகையை காசாளர் பிரிவிற்கு செலுத்தி இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் தேவையான விண்ணப்பம் மற்றும் நிபந்தனையுடனான விபரங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் இதுபற்றி 011-2691111 நீடிப்பு 2722 திரு. அகலங்கவை அழைத்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்ரமசிங்ஹ**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கிலக்கம்:** DTS/195/24
**தன்மை :** மரணசாசனம்
**நடவடிக்கை முறை:** சுருக்கம்
**பெறுமதி :** ரூ. 136,923,675.81

அவுஸ்திரேலியா, நிவ் சவுத் வேல்ஸ் 2147, லேலர் பாக், வர்த்யாஸ் வீதி, இல.55 என்ற முகவரியில் வசித்து காலம் சென்ற மய்ரா மரிய ரேமன்ட் (MYRA MARIA RAYMOND) என அறியப்படுகின்ற மய்ரா ரேமன்ட் என்பவரின் இறுதி விருப்பாவணம் மற்றும் மரணசாசனம் தொடர்பில் சுப்ரீம் கோர்ட் ஒப் நிவ் சவுத் வேல்ஸ் (Supreme Court of New South Wales) இனால்

அவுஸ்திரேலியாவின், நிவ் சவுத் வேல்ஸ் 2155, கெளிவில், வின்சர் வீதி இல.3/33 என்ற முகவரியைச் சேர்ந்த டேவிட் ஜோன் சேயர் (DAVID JOHN SAYER) என்பவருக்கு வழங்கப்பட்ட மரணசாசன அதிகாரப்பத்திரம் தொடர்பிலான சான்றிதழ் (திருத்தப்பட்டவாறான) 1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை சட்டக்கோவை அரச சபை சட்டத்தினால் திருத்தப்பட்ட குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB பிரிவின் கீழ் மீண்டும் இலச்சினை இடுவதற்கான விண்ணப்பம் தொடர்பான விடயம்.

**இறந்த நபர்**

ஜோன் டேவிட் சேயர் இல.3/33, வின்சர் வீதி, கெலிவில் நிவ் சவுத் வேல்ஸ் 2155, அவுஸ்திரேலியா (DAVID JOHN SAYER).

அவரின் அட்டோணி

தத்துவக்காரர் இல. 41/3, டெம்பலர்ஸ் வீதி கல்கிஸ்ஸ என்ற முகவரியைச் சேர்ந்த வினேஷ் எட்வர்ட் பெரேரா மூலம் தோன்றுகின்றார்.

அவுஸ்திரேலியா, நிவ் சவுத் வேல்ஸ் 2147, லேலர் பாக், வர்த்யாஸ் வீதி, இல.55 என்ற முகவரியில் வசித்து காலம் சென்ற மய்ரா மரிய ரேமன்ட் (MYRA MARIA RAYMOND) என அறியப்படுகின்ற மய்ரா ரேமன்ட் என்பவரின் மரணச் சொத்து தொடர்பில் சுப்ரீம் கோர்ட் ஒப் நிவ் சவுத் வேல்ஸ் (Supreme Court of New South Wales) இனால் அவுஸ்திரேலியாவின், நிவ் சவுத் வேல்ஸ் 2155, கெளிவில், வின்சர் வீதி இல. 3/33 என்ற முகவரியைச் சேர்ந்த டேவிட் ஜோன் சேயர் (DAVID JOHN SAYER) என்பவருக்கு வழங்கப்பட்ட மரணசாசன அதிகாரப்பத்திரம் தொடர்பிலான சான்றிதழ் (திருத்தப்பட்டவாறான) 1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை சட்டக்கோவை அரச சபை சட்டத்தினால் திருத்தப்பட்ட குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB பிரிவின் கீழ் மீண்டும் இலச்சினை இடுவதற்கான விண்ணப்பம் இதில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 28 நாட்கள் கடந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**2024 மே மாதம் 02 ஆம் திகதியாகிய இன்று**

**டீ எல் என்ட் எப் டி சேரம்**
**மனுதாரர் சார்பான சட்டத்தரணி**

## மஹவ பிரதேச சபை

## பெறுகைக்கான அறிவித்தல்

**பெறுகைக்கான அறிவித்தலும் நிபந்தனைகளும் :**

மஹவ பிரதேச சபைக்கு உரிய பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக உரிமையை 2025.01.01ஆந் திகதி தொடக்கம் 2025.12.31 ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட டென்டர் பத்திரங்களை 2024.10.07ஆந் திகதி மு.ப. 9.30 மணிவரை என்னால் பொறுப்பேற்கப்படும்.

டென்டர் மாதிரிப் படிவம் 2024.09.13 ஆந் திகதி தொடக்கம் 2024.10.04 ஆந் திகதி பி.ப. 1.00 மணி வரை வார வேலை நாட்களில் மஹவ பிரதேச சபை அலுவலகத்தில் வழங்கப்படும்.

1. டென்டர் விண்ணப்பப் படிவம் 02 பிரதிகள் வழங்கப்படுவதுடன்,உரிய டென்டர் பத்திரம் இரண்டையும் சரியாக பூர்த்தி செய்து முதல் பிரதி மற்றும் இரண்டாம் பிரதி என்ற வகையில் வெவ்வேறாக கடித உறையில் இட்டு மீண்டும் அவ் இரு கடித உறைகளையும் ஒரு கடித உறையில் இட்டு செயலாளர், மஹவ பிரதேச சபை, மஹவ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும். அவ்வாறு இல்லை என்றால் டென்டர் பத்திரத்தை நேரில் கொண்டுவந்து பொறுப்படைக்க கருதுவதாயின், இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடலாம்.
2. டென்டர் பத்திரம் இடப்படுகின்ற கடித உறையை சரியாக ஒட்டப்பட்டு, முத்திரை இடப்பட்டு இருக்க வேண்டியதுடன், கடித உறையின் இடதுமேல் மூலையில் குறித்த டென்டரின் பெயரை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். டென்டர் பத்திரம் இரண்டு பிரதிகளுடன் குறித்த நேரத்திற்கு முன்னதாக இச் சபைக்கு சென்றடைவதை உறுதி செய்யவேண்டும்.
3. அனைத்து டென்டரும் அந்தந்த பணிக்கு உரித்தாக குறைந்தபட்ச ஏலத்திற்கு அதிகமாக கோரப்படவேண்டும். டென்டர் பத்திரம் வழங்குவதற்காக காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாததுடன், குறைந்தபட்ச ஏலத்திற்கு குறைவாக ஏலம் சமர்ப்பிக்கின்ற டென்டர்பத்திரம், தாமதமாக கிடைக்கின்ற மற்றும் பூர்த்தியற்ற டென்டர்கள் நிராகரிக்கப்படுவதுடன், ஏலபிணைகள் சபைக்குரித்தாக்கப்படும்.
4. இந்த நிறுவனத்தில் முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தாக சொத்துக்களை குத்தகைக்கு பெற்று ஒப்பந்தங்களை மீறி கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கு டென்டர் பத்திரம் வழங்கப்படமாட்டாது.
5. விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொண்டு சமர்ப்பிக்காதவர்களது பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.
6. டென்டர் விண்ணப்பப்படிவம் 2024.10.07ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹவ பிரதேச சபையின் பெறுகைக்கான குழுவின் முன்னிலையில் திறப்பதுடன், அச் சந்தர்ப்பத்திற்கு அவரது/ அவளது பிரதிநிதிகளுக்கு வருகைத்தருவதற்கு அனுமதி வழங்கலாம்.
7. மஹவ பிரதேச சபையின் பெறுகைச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
8. மேலதிக விபரங்கள் மஹவ பிரதேசசபைக்கு வருகைத் தந்து அல்லது 037 - 2275275 தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**அட்டவணை - 1**

| தொட. இலக்கம் | சொத்து பற்றிய விபரம் | குறைந்தபட்ச ஏலம் (ரு) | மீள் செலுத்தப்படாத விண்ணப்பப் படிவ கட்டணம் (ரு.) | மீள் செலுத்தப்படும் ஏலபிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | மஹவ மாட்டிறைச்சிக் கடை | 2157551.00 | 1000.00 | 86302.04 |
| 02 | அம்பன்பொல மாட்டிறைச்சிக் கடை | 246235.00 | 1000.00 | 19698.80 |
| 03 | மஹவ கோழிக் கடை | 294030.00 | 1000.00 | 23522.40 |
| 04 | மஹவ 01 ஆம் இலக்க மீன் பலகை | 306130.00 | 1000.00 | 24490.40 |
| 05 | மஹவ 02 ஆம் இலக்க மீன் பலகை | 306130.00 | 1000.00 | 24490.40 |
| 06 | அம்பன் பொல மீன் பலகை | 108900.00 | 1000.00 | 8712.00 |
| 07 | மஹவ புதிய பொதுசந்தை 11 ஆம் இலக்க கடை அறை | 47916.00 | 1000.00 | 4791.60 |
| 08 | மஹவ புதிய பொதுசந்தை 12 ஆம் இலக்க கடை அறை | 47916.00 | 1000.00 | 4791.60 |
| 09 | மஹவ புதிய பொதுசந்தை 03 ஆம் இலக்க கடை அறை | 377339.00 | 1000.00 | 30187.12 |
| 10 | மஹவ புதிய பொதுசந்தை 04 ஆம் இலக்க கடை அறை | 42782.81 | 1000.00 | 4278.28 |
| 11 | மஹவ புதிய பொதுசந்தை 05 ஆம் இலக்க கடை அறை | 23319.12 | 1000.00 | 2331.91 |
| 12 | மஹவ சனிக் கிழமை வாரச் சந்தை | 6050000.00 | 1000.00 | 242000.00 |
| 13 | அம்பன்பொல திங்கட் கிழமை வாரச் சந்தை | 3146000.00 | 1000.00 | 125840.00 |
| 14 | நாகொல்லாகம வெள்ளிக் கிழமை வாரச் சந்தை | 1210000.00 | 1000.00 | 60500.00 |
| 15 | பலல்ல புதன் கிழமை வாரச் சந்தை | 484000.00 | 1000.00 | 38720.00 |
| 16 | மாகோ பொது மலசலகூடம் | 18150.00 | 1000.00 | 1815.00 |
| 17 | மாகோ சனிக்கிழமை வாரசந்தை | 96800.00 | 1000.00 | 9680.00 |
| 18 | தலதாகம பொதுமலசலகூடம் | 3600.00 | 1000.00 | 360.00 |
| 19 | மாகோ சிறுவர் பூங்காவில் சிற்றுண்டிச்சாலை கட்டிடம் | 60000.00 | 1000.00 | 6000.00 |

**2024.09.13 ஆந் திகதி**
**மஹவ பிரதேச சபை அலுவலகத்திலிருந்து.**

**ஜே.எம்.பிரியந்த ஜயசேகர,**
**செயலாளர் மற்றும் அதிகாரப் பணிகள்,**
**கடமைகளை செயற்படுத்தும் உத்தியோகத்தர்.**
**மஹவ பிரதேச சபை**

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல : DTS 00233/24
தன்மை : சாசனம்
பெறுமதி : ரூ. 5,455,502.36
நடைமுறை : சுருக்கம்

சிவில் நடைமுறைச் சட்டத்தின் அத்தியாயம் XXXVIIIB (வெளிநாட்டு மரண சாதன அதிகாரப்பத்திரம்) இன் கீழ் மற்றும் விதிகளின்படி, வேல்ஸின் மரண சாதன அதிகாரப்பத்திரம் பதிவகம், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றம் (Probate Registry of Wales, of the High Court of Justice England and Wales), 3வது தளம், கார்டி.ஃ.ப் நீதவான் நீதிமன்றம் (Cardiff Magistrates' Court), ∴ பிட்சாலன் பிளேஸ் (Fitzalan Place), கார்டி.ஃ.ப் (Cardiff), சவுத் வேல்ஸ் (South Wales), CF24 0RZ, வழங்கப்பட்ட வெளிநாட்டு மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் தொடர்பான வழக்கில், 101a காக் லேன் (Cock Lane) ஹை வைகோம்ப் (High Wycombe) HP13 7DZ ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த மறைந்த ஆனந்த குமார் என்கிற குமாரசாமி ஆனந்தகுமார் (KumaraswamyAnandakumar alias Ananda Kumar) மரண சாசனமில்லாது இறந்தவரின் தோட்டம் தொடர்பாக.

சாந்தினி ஆனந்தகுமார் (Shanthini Anandakumar), எண்.101a காக் லேன் (Cock Lane) ஹை வைகோம்ப் (High Wycombe) HP13 7DZ ஐக்கிய இராச்சியம்.

**மனுதாரர்**

ஜூன் 07, 2024 அன்று,
இது வெளியிடப்பட்ட நாளிலிருந்து இருபத்தெட்டு (28) நாட்கள் காலாவதியான பிறகு, மரணச் சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரத்தை மறு சீல் செய்வதற்காக சிவில் நடைமுறைச் சட்டத்தின் (திருத்தப்பட்டபடி) அத்தியாயம் XXXVIIIB இன் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்யப்படும். 101a காக் லேன் (Cock Lane) ஹை வைகோம்ப் (High Wycombe) HP13 7DZ ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்த மறைந்த ஆனந்த குமார் என்கிற குமாரசாமி ஆனந்தகுமார் (Kumaraswamy Anandakumar alias Ananda Kumar) மரண சாசனமில்லாது இறந்தவரின் தோட்டத்தைப் பொறுத்தமட்டில், 3வது தளம், கார்டி.ஃ.ப் நீதவான் நீதிமன்றம் (Cardiff Magistrates' Court), ∴ பிட்சாலன் பிளேஸ் (Fitzalan Place), கார்டி.ஃ.ப் (Cardiff), சவுத் வேல்ஸ் (South Wales), CF24 ORZ உள்ள வேல்ஸின் மரண சாதன அதிகாரப்பத்திரம் பதிவகம், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் உயர் நீதிமன்றத்தால் (Probate Registry of Wales, of the High Court of Justice England and Wales) 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது மற்றும் வழங்கப்பட்டது.

**மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணிகள்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Daily News Classifieds, the Housewives' companion

# இலங்கை ஏ அணியில் சோபித்த ஓஷத இலங்கை டெஸ்ட் குழாத்திற்கு அழைப்பு



## தென்னாபிரிக்காவில் இருந்து நாடு திரும்புகிறார்

தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான உத்தியோகபூர்வமற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணியின் வெற்றிக்கு துடுப்பாட்டத்தில் உதவிய ஆரம்ப வீரர் ஓஷத பெர்னாண்டோ இலங்கை அணியின் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்க நாடு திரும்பவுள்ளார்.

தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஏ அணி நேற்று முன்தினம் (11) முடிவடைந்த 4 நாள் போட்டியை 6 விக்கெட்டுகளால் வென்றது.

இதில் இலங்கை ஏ அணிக்காக ஓஷத பெர்னாண்டோ முதல் இன்னிங்ஸில் 146 பந்துகளில் 21 பௌண்டரிகளுடன் 122 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து இலங்கை ஏ அணிக்காக 174 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டபோது அபாரமாக துடுப்பெடுத்தாடிய ஓஷத பெர்னாண்டோ 122 பந்துகளில் 12 பௌண்டரிகளுடன் 80 ஓட்டங்களை குவித்தார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை ஏ, தென்னாபிரிக்க ஏ அணிக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடரில் 1–0 என முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (15) பெனோனியில் ஆரம்பமாகவுள்ளது.

எனினும் இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் பங்கேற்காது ஓஷத பெர்னாண்டோ இலங்கை திரும்பவுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின்போது இலங்கை டெஸ்ட் குழாத்தில் ஓஷத இடம்பெறாத நிலையில் அவர் சொந்த மண்ணில் நடைபெறும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு அழைக்கப்படவுள்ளார்.

குறிப்பாக இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் இலங்கை ஆரம்ப வீரராக முதல் இரு போட்டிகளிலும் ஆடிய நிஷான் மதுஷ்க சோபிக்கத் தவறிய நிலையிலேயே ஓஷத டெஸ்ட் குழாத்தில் இடம்பெறவுள்ளார்.

32 வயதான ஓஷத பெர்னாண்டோ இதுவரை இலங்கை அணிக்காக 21 டெஸ்ட் போட்டிகளில் ஆடி ஒரு சதம் மற்றும் 7 அரைச்சதங்களுடன் 1091 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரது ஓட்ட சராசரி 33.06 ஆகும். அவர் கடைசியாக 2023 மார்ச் மாதம் வெள்ளிங்டனில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலேயே இலங்கை அணியில் இடம்பிடித்துள்ளார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து இரண்டாவது போட்டி செப்டெம்பர் 26 தொடக்கம் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த இரு போட்டிகளும் காலியில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய கனிஷ்ட அதிவேக வீரரானார் மெரோன் விஜேசிங்க




தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இலங்கையின் மெரோன் விஜேசிங்க பிராந்தியத்தின் அதிவேக கனிஷ்ட வீரராக சாதனை படைத்துள்ளார்.

இந்தியாவின் சென்னை நகரில் நேற்று முன்தினம் (11) ஆரம்பமான தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்சிப் போட்டியின் முதல் நாளில் இலங்கை மூன்று தங்கங்களை வென்றது.

இதில் ஆண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் பங்கேற்ற விஜேசிங்க போட்டித் தூரத்தை 10.41 விநாடிகளில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இது அவரது தனிப்பட்ட சிறந்த காலமாகவும், புதிய போட்டிச் சாதனையாகவும், தேசிய கனிஷ்ட சாதனையாகவும் இருந்தது.

முன்னதாக 2013 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனரில் இலங்கை வீரர் யேசுதாஸ் 10.16 விநாடிகளில் ஓடி முடித்து நிலைநாட்டிய சாதனையை 11 ஆண்டுகளுக்குப் பின் இவர் முறியடித்தார்.

அதேபோன்று இந்தப் போட்டியில் பங்கேற்ற இலங்கையின் தினெத், தனது சிறந்த காலத்தைப் பதிவு செய்து போட்டித் தூரத்தை 10.49 விநாடிகளில் நிறைவு செய்தன் மூலம் வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் ஷெனல்லா செனவிரத்ன (12.04 விநாடி) வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் சவிந்து அவிஷ்கவும் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தருஷி அபிஷேக்காவும் இலங்கைக்கு தங்கம் வென்று கொடுத்தனர்.

தெற்காசிய மெய்வல்லுனர் சம்மேளனம் மற்றும் இந்திய மெய்வல்லுனர் சம்மேளத்தினால் நடத்தப்படும் தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி இன்று (13) நிறைவடையவுள்ளது. இதில் இலங்கை சார்பில் 54 வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மகளிர் ஏ அணிக்கு தோல்வி



இலங்கை மகளிர் ஏ அணிக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் பங்களாதேஷ் மகளிர் ஏ அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நேற்று (12) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் ஏ அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. கெஷனி நுத்யாங்கனா அதிகட்சமாக 43 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் மகளிர் அணி 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 113 ஓட்டங்களை எட்டியது. ஷமிம் சுல்தான் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

## சர்வதேச செய்திகள்



# காசாவில் மற்றொரு பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்: 18 பேர் பலி

## ஐ.நா. பணியாளர்களும் உயிரிழப்பு: ஹமாஸ் புதிய நிபந்தனை

மத்திய காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றுமொரு பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஐ.நா. பணியாளர்கள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் அது ஹமாஸ் கட்டுப்பட்டு மையம் என்று இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 11 மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் காசா போரில் ஏற்கனவே பல முறை தாக்குதலுக்கு இலக்கான நுஸைரத்தில் இருக்கும் அல் ஜவுனி பாடசாலை மீதே இஸ்ரேல் நேற்றும் குண்டு வீசியுள்ளது. ஐ.நாவினால் நடத்தப்படும் அந்தப் பாடசாலையில் ஒரு பகுதி இந்தத் தாக்குதலில் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

'ஐந்தாவது தடவையாகவும் ஐ.நாவினால் நடத்தப்படும் அல் ஜவுனி பாடசாலை மீது இஸ்ரேலியப் படை குண்டு வீசியதில் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் பணியாளர்கள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 18 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 18 பேர் காயமடைந்துள்ளனர்' என்று காசா சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் பேச்சாளர் மஹ்மூத் பசால், டெலிகிராம் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதில் தமது ஆறு பணியாளர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் பின்னர் தெரிவித்தது. ஒற்றைச் சம்பவம் ஒன்றில் அதிகமான பணியாளர்கள் கொல்லப்பட்ட நிகழ்வாக இது உள்ளது என்று அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

'கொல்லப்பட்டவர்களில் அந்த முகாமில் ஐ.நா. முகாமையாளர், இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகளை வழங்கி வந்த உறுப்பினர்கள் அடங்குவர்' என்று ஐ.நா. நிறுவனம் எக்ஸ் சமூக தளத்தில் தெரிவித்துள்ளது.

'பாடசாலைகள் மற்றும் மற்ற சிவில் உட்பட்டமைப்புகள் எந்த நேரத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு அவை இலக்கு வைக்கப்படக் கூடாது' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

காசா போரினால் அங்குள்ள 2.4 மில்லியன் மக்களில் அதிகப்படியானோர் தொடர்ச்சியாக வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் அங்குள்ள பாடசாலைகள் மக்களுக்கு அடைக்கலம் அளிக்கும் இடங்களாக மாறியுள்ளன.

இஸ்ரேலியப் படை இவ்வாறான பாடசாலைகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகிறது. அங்கு பலஸ்தீன போராளிகள் இயங்கி வருவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியபோதும் அற்கான எந்த ஆதாரத்தையும் வெளியிடத் தவறியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை ஹமாஸ் மறுத்து வருகிறது.

தாக்குதலில் உயிர் தப்பியவர்கள், கொல்லப்பட்டவர்களின் உடல்களை மீட்பது மற்றும் இடிபாடுகளில் புதையுண்ட தமது உடைமைகளை சேகரிப்பதில் ஈடுபட்டனர். 'இந்த நரகத்தில் நாம் 340 நாட்களைக் கடந்திருக்கிறோம். ஹொலிவுட் திரைப்படங்களில் கூட நாம் இப்படிக் கண்டதில்லை, காசாவில் இப்போது காண்கிறோம்' என்று உயிர் தப்பிய ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



### உணர்வற்ற கொலைகள்

உலகில் மனிதாபிமான பணியாளர்களுக்கான அபாயகரமான இடமாக காசா உள்ளது என்று தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. பாடசாலை மீதான புதிய தாக்குதலை அடுத்து காசா போரில் குறைந்தது 220 ஐ.நா. பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி குறிப்பிட்டுள்ளார்.

'நாளுக்கு நாள் முடிவில்லாத மற்றும் உணர்வற்ற கொலைகள் இடம்பெறுகின்றன' என்று அவர் எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். 'போர் ஆரம்பித்தது தொடக்கம் மனிதாபிமான பணியாளர்கள், வளாகங்கள் மற்றும் செயற்பாடுகள் அப்பட்டமாக மற்றும் சந்தேகத்திற்கு இடமின்றிப் புறக்கணிக்கப்படுகின்றனர்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

காசாவில் நடந்ததை 'முற்றாக ஏற்க முடியாது' என்று ஐ.நா. தலைவர் அன்டோனியோ குட்டரஸ் கூறினார்.

காசாவில் 342ஆவது நாளாகவும் இஸ்ரேலின் சராமாரி தாக்குதல்கள் நேற்று (12) இடம்பெற்றன. வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாம் மீது நேற்று அதிகாலை நடத்திய தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதில் அல் பக்குரா பகுதியில் சியாம் குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் மூவர் கொல்லப்பட்டிருப்பதோடு அல் செய்தூனில் இடம்பெற்ற தாக்குதலில் மேலும் இருவர் பலியானதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்தது.

தெற்கு காசாவின் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரின் கிர்பத் அல் அதாஸ் பகுதியில் நேற்று நடந்த தாக்குதல் ஒன்றில் மூவர் கொல்லப்பட்டதாக வபா கூறியது. மத்திய காசாவின் புரைஜ் மற்றும் நுஸைரத் அகதி முகாம்களின் குடியிருப்பு கட்டடங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியதாக அந்த செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்து 34 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 96 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதனையடுத்து காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,118 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 95,125 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் பல மாதங்களாக இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் இதுவரை எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே மாதத்தில் முன்வைத்த போர் நிறுத்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே அண்மைக்கால பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. எனினும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே பெரும் பிளவு நீடித்து வருகிறது.

எனினும் புதிய நிபந்தனைகள் இன்றி முந்தைய அமெரிக்காவின் நிபந்தனையின் அடிப்படையில் இஸ்ரேலுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றில் உடன் கைச்சாத்திடுவதற்கு தயார் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

தமது பேச்சுவார்த்தைக் குழுவினர் கடந்த புதனன்று கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அல்துல்ரஹ்மான் அல்தானிய மற்றும் எகிப்து உளவுப் பிரிவுத் தலைவர் அப்பாஸ் கமேலை டோஹாவில் சந்தித்து பேசியதாக ஹமாஸ் அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மேற்குக் கரையில் நால்வர் பலி

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் சுற்றிவளைப்பு தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் மேலும் நான்கு பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 2000ஆம் ஆண்டுகளின் பின்னர் மேற்குக் கரையில் இஸ்ரேல் நடத்தும் பாரிய இராணுவ நடவடிக்கை தற்போது மூன்றாவது வாரத்தைத் தொட்டுள்ளது.

துல்கர்ம் நகரில் கடந்த புதன்கிழமை இரவு இஸ்ரேலின் ஆளில்லா விமானத் தாக்குதல்களில் மூவர் கொல்லப்பட்டதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. துபாஸ் நகருக்கு அருகில் இருக்கும் பாரா அகதி முகாமில் இஸ்ரேலின் ஸ்னைப்பர் துப்பாக்கிச் சூட்டில் மேலும் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

துல்கர்மில் இஸ்ரேல் நடத்திய ஆளில்ல விமானத் தாக்குதலில் வாகனம் ஒன்றும் அருகில் இருக்கும் வீடு ஒன்றும் தீப்பற்றியதாக வபா குறிப்பிட்டது.

இந்தக் கொலைகளுடன் கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி மேற்குக் கரையில் இஸ்ரேல் ஆரம்பித்த படை நடவடிக்கையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. இதில் கடந்த புதன்கிழமை காலை துபாஸ் நகரில் இடம்பெற்ற வான் தாக்குதலில் கொல்லப்பட்ட ஐவரும் அடங்குவர்.

மேற்குக் கரையின் வடக்கே துல்கர்ம், துபாஸ் மற்றும் ஜெனின் நகரங்களிலேயே இஸ்ரேலின் படை நடவடிக்கை முன்னேடுக்கப்பட்டு வருகிறது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டிருப்பதோடு வீதிகள் மற்றும் உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.